N60.2.3
199636

1714-60

# ஸ்ரீ சங்கர க்ருபா

## ॥ श्रीशंकरकृपा ॥

(மாதப் பத்திரிகை)



புரட்டா

# பொருளடக்கம்.


| நெ. | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ சாரதாபுஜங்கம் ... | 1– 4 |
| 2. | ஸ்ரீ ஸத்குரு பாதுகாஸ்தவராஜம் ... | 5– 7 |
| 3. | ஸ்ரீ சந்திரமௌளீசுவர ஸ்தோத்திரம் ... | 8–11 |
| 4. | ஸ்ரீ ஸத்குரு கிளிப்பாட்டு ... | 12–13 |
| 5. | சிருங்கேரி ஸ்ரீ மஹா ஸ்வாமிகளின் உபதேசம் | 14–15 |
| 6. | உபாகர்ம தத்வப்பிரகாசம் ... | 16 |
| 7. | கீத ஸந்தேசம் – 3 ... | 17–19 |
| 8. | ஸ்ரீ தேவீ பாகவதக் கதை ... | 20–24 |
| 9. | பக்தி ஸாம்ராஜ்யம் ... | 24–27 |
| 10. | கேனோபநிஷத் (நாடகம்) ... | 28–34 |
| 11. | அபிராமி அந்தாதி ... | 35–41 |
| 12. | பராசக்தியின் கருணை ... | 41–46 |
| 13. | வேதப்ராமாண்யம் ... | 46–48 |
| 14. | ஸ்ரீ ஸ்வயம்வரா பார்வதீ ஸ்தோத்ரம் ... | 49–50 |
| 15. | ஸ்ரீ குருகிருபா விலாஸம் ... | 121–126 |
| 16. | பஞ்சதசீ ... | 21–24 |
| 17. | ஆத்மபோதம் ... | 75–78 |
| 18. | குறிப்புகள் ... | i–viii |



வருஷச் சந்தா ரூ. 5 ஆயுள் சந்தா ரூ. 100

சந்தாத் தொகையை மானேஜருக்கு அனுப்பவும்.

ஸ்ரீ K. திருமலைஸ்வாமி அய்யர், மானேஜர், "ஸ்ரீ சங்கர க்ருபா"
16, சேஷபுரம், தென்னூர், திருச்சி-1.

ஆசிரியர் :— ஸ்ரீ K. R. வெங்கடராமன், 3, வரதராஜப்பெருமாள் கோவில் தெரு, கொத்தவால்சாவடி, திருச்சி-8.

உதவி ஆசிரியர் :— ஸ்ரீ K. S. வெங்கடராம சாஸ்திரி, ஸ்ரீ சங்கர குருகுலம், ஸ்ரீரங்கம், திருச்சி-6.

ஆலோசனைக் குழு :—
பேராசிரியர் ஸ்ரீ க. பஞ்சாபகேசன்
,, ,, M. K. வெங்கடராமய்யர்
ஸ்ரீ K. சங்கர[illegible]ராயணய்யர் (ஓய்வுபெற்ற நீதிபதி)
,, R. ஸ்ரீநிவாஸய்யர், அட்வொகெட், மதுரை.

இம்மாதத்தில் சேர்ந்துள்ள ஆயுள் சந்தா மெம்பர்கள் :—
43. 591 ஸ்ரீ S. N. சங்கரலிங்கம் அய்யர், சென்னை.
44. 2884 ,, A. S. ராமஸ்வாமி அய்யர், சென்னை.



॥ श्रीशंकरकृपा ॥

ஸ்ரீ சங்கர க்ருபா

"एषा शंकरभारती विजयते निर्वाणसौख्यप्रदा"

மலர் 2] சார்வரி — புரட்டாசி [இதழ் 3


## ॥ श्रीशारदाभुजङ्गम् ॥

## ஸ்ரீ சாரதா புஜங்கம்

(முன் தொடர்ச்சி)

(அ) என்ன இருந்தாலும் இவ்வித ஸமாதானங்கள் அம்பிகையின் சரணாரவிந்தத்தில் ஈடுபடாததற்குப் போது மான காரணங்கள் ஆகாது. அந்தப்படி அம்பிகையின் ஸேவைக்காக நாம் கொஞ்சமாவது ப்ரயத்தினம் செய்து பார்த்தோமா என்ற கேள்வி எழுகிறது. ப்ரயத்தினம் செய்தும் பலிக்கவில்லை என்றால் அது நம் குற்றமாகாது என்பதை உத்தேசித்து அடுத்த சுலோகத்தில் தன் நிலைமையை விவரிக்கிறார் :—

त्वदीयं पदाब्जं सदा पूजयेयं तथा संस्मरेयं च पश्येयमेवम् ।
समिच्छंश्च मत्पूर्वदुर्वासनाभिः बलादाहृतं मन्मनः किं करोमि ॥

த்வதீயம் பதாப்ஜம் ஸதா பூஜயேயம்
ததா ஸம்ஸ்மரேயம் ச பச்யேயமேவம் ।
ஸமிச்சம்ச்ச மத்பூர்வதுர்வாஸனாபி:
பலாதாஹ்ருதம் மன்மந: கிம் கரோமி ॥

त्वदीयं पदाब्जं – உன்னுடைய பாதாரவிந்தத்தை, सदा – எக்காலத்திலும், पूजयेयं – பூஜை செய்வேன்,

**तथा** – அப்படியே, **संस्मरेयं** – த்யானம் செய்வேன், **पश्येयम्** – தர்சனம் செய்வேன், **एवम्** – இவ்விதம், **समिच्छंश्च** – (எனக்கு) நன்ருக ஆசையிருந்தும், **मन्मनः** – என் மனது, **मत्पूर्वदुर्वासनाभिः** – என்னுடைய பூர்வஜன்மங்களில் ஏற்பட்ட கெட்ட வாஸனைகளினுல், **बलात्** – பலாத்காரமாக, **आहृतम्** – இழுக்கப்பட்டிருக்கிறதே, **किं करोमि** – நான் என்ன செய்வேன் ?

அம்பாளைப் பூஜிக்கவேண்டும், தர்சிக்க வேண்டும், தியானிக்கவேண்டும் என்ற ஆசை பலமாக இருந்தாலும் அதன்படி காரியம் நடைபெறுவதில்லை. அதற்குக் காரணம்

सदृशं चेष्टते स्वस्याः प्रकृतेर्ज्ञानवानपि ।
प्रकृतिं यान्ति भूतानि निग्रहः किं करिष्यति ॥ (३-३३)

(ஸத்ருஶம் சேஷ்டதே ஸ்வஸ்யா: ப்ரக்ருதே: ஞானவானபி। ப்ரக்ருதிம் யாந்தி பூதானி நிக்ரஹ: கிம் கரிஷ்யதி)

என்ற கீதாவசனத்தின்படி பூர்வ ஜன்ம வாஸனை நம் மனதை இழுத்துச்சென்று விடுவதுதான். இந்த நிலைமையில் அம்பாளின் கிருபையில்லாவிட்டால் நாம் உஜ்ஜீவிக்கமுடியாது.
(9)

(அ) பூர்வவாஸனை என்பது முற்பிறவிகளில் நீ செய்த கர்மாக்களால் தான் ஏற்படுகிறது. இது விஷயத்தில் நான் என்ன செய்ய முடியும் எனில் கூறுகிருர்:—

यदि त्वं वदस्यम्ब ते पूर्वकर्म त्वयैव प्रयत्नेन जेतव्यमेवम् ।
तदा मय्यजस्रं कृपा संविधेया प्रयत्नं करोम्येव तत्रापि सम्यक् ॥

யதி த்வம் வதஸ்யம்ப தே பூர்வ கர்ம
த்வயைவ ப்ரயத்னேன ஜேதவ்யமேவம் ।
ததா மய்யஜஸ்ரம் க்ருபா ஸம்விதேயா
ப்ரயத்னம் கரோம்யேவ தத்ராபி ஸம்யக் ॥

**अम्ब** – தாயே, **ते पूर्वकर्म** – உன் பூர்வகர்மாவானது **त्वयैव** – உன்னுல் தானே **प्रयत्नेन** – ப்ரயத்னம் செய்து **जेतव्यं**- ஜயிக்கத்தகுந்தது **एवं**-இவ்வாறு **यदि त्वं वदसि**-நீ சொல்லுவதாயிருந்தால் **तदा** – அப்பொழுதும் **मयि** – என்பேரில் **अजस्रं** –

199636



இடைவிடாமல் **कृपा** – தயை **संविधेया** – காண்பிக்கப்படவேண்டும். **तत्रापि** – அவ்விஷயத்திலும் **सम्यक्** - நன்ருக **प्रयत्नं** – முயற்சியை **करोम्येव** – கட்டாயம் செய்கிறேன்.

நான் முற்பிறவிகளில் செய்த கர்மாக்களின் வாஸனை தான் பிரபலமாயிருந்துகொண்டு என் மனதை உன்னிடம் செல்லவிடாமல் இழுத்துச்செல்லுகிறது என்பது வாஸ்தவம் தான். ஆனுல் நான் கர்ம வாஸனையை ஜயித்து மனதை மீட்க சக்தியில்லாதவனுயிருக்கிறேன். ஆகையால் இவ்விஷயத்திலும் உன் கிருபைதான் வேண்டும். அதன் பலத்தால் துர்வாஸனையை ஜயித்து மனதை மீட்டு உன்னிடம் செலுத்துவேன். சத்ரு பிரபலனுயிருந்தாலும் அவனைவிட மிகுந்த பலமுள்ளவனின் ஸஹாயமிருந்தால் ஸுலபமாக ஜயித்துவிடலாமன்ரோ! அம்பிகையின் கிருபையால் ஆகாத காரியம் உலகில் என்ன இருக்கிறது?

(அ) நான் பிரார்த்திக்காமல் போனுலும் உன்னுடைய நலனைக் கருதியாவது கட்டாயம் நீ என்பேரில் கிருபை புரிந்து என் துன்பங்களை விலக்கவேண்டுமென்பதை வற்புறுத்திக் கூறுகிருர் :—

यदि त्वं मदीयां शुचं नापनुद्याः तदा दुःखवह्निप्रतप्तेऽन्तरङ्गे ।
मदीये स्थितायास्तवाप्यम्ब खेदो भवेदित्यहं चिन्तयाऽऽर्तोऽस्मि भूयः ॥

யதி த்வம் மதீயாம் ஶுசம் நாபனுத்யா:
ததா துக்க வன்ஹி ப்ரதப்தேந்தரங்கே ।
மதீயே ஸ்திதாயாஸ்தவாப்யம்ப கேதோ
பவேதித்யஹம் சிந்தயார்த்தோஸ்மி பூய: ॥

**मदीयां शुचं**-என்னுடைய துக்கத்தை **त्वं**-நீ **यदि न अपनुद्याः** - போக்கடிக்கவில்லை என்ருல் **तदा** – அப்பொழுது **अम्ब** - தாயே **मदीये** – என்னுடைய **दुःख-वह्नि-प्रतप्ते** - துக்கமாகிய அக்னியினுல் தபித்துக்கொண்டிருக்கிற **अन्तरंगे** – சித்தத்தில் **स्थितायाः** – வியாபித்து வாஸம் செய்துகொண்டிருக்கிற **तवापि** – உனக்கும் கூட **खेदः** - வருத்தம் **भवेदिति** – உண்டாகும் என்கிற **चिन्तया** – கவலையினுல் **अहं भूयः आर्तोऽस्मि** - நான் மிகவும் பீடிக்கப்பட்டிருக்கிறேன்.

நான் எப்பொழுதுமே துக்கப்பட்டுக்கொண்டிருப்பதால் என்னைப்பற்றிக் கவலையில்லை. **ईश्वरः सर्वभूतानां हृद्देशेऽर्जुन तिष्ठति** (ஈச்வர: ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேசேர்ஜுந திஷ்டதி) "எங்கும் வியாபித்திருக்கும் ஈசுவரன் எல்லாப் பிராணிகளுடைய ஹிருதயத்திலும் வாஸம் செய்கிறார்" என்று கீதையில் கண்ணன் கூறியுள்ளபடி என் மனதிலும் நீ வஸிக்கிறாய். என் மனது துக்கத்தால் தபிக்கும்பொழுது அங்கு வாஸம் செய்யும் உனக்கும் தாபம் ஏற்படும். துக்க ஸம்பந்தமே இல்லாத உனக்கும்கூட என்னிடம் வாஸம் செய்வதன் மூலம் துக்கமேற்பட்டுவிடுமே என்பதை நினைத்துத்தான் வருந்துகிறேன். நீ ஸர்வ வியாபியானதால் என் மனதை விட்டுச் செல்லவும் முடியாது. ஆகையால் உனக்கு துக்கம் ஏற்படாமலிருக்கவாவது என் துக்கங்களை விலக்கவேண்டும். (11)

(அ) எல்லா துக்கங்களுக்கும் மூலகாரணமான அக்ஞானத்தை நீக்கும்படி வேண்டுகிறார் :—

वदन्तीह शास्त्राणि सत्यश्चिदात्माऽद्वयश्चान्यदार्तं समस्तं मृषेति ।
तथाप्यम्ब मोहो न मे विप्रनष्टो झटित्यम्ब तं नाशयानर्थमूलम् ॥

வதந்தீஹ சாஸ்த்ராணி ஸத்யச்சிதாத்மா
ऽத்வயச்சாந்யதார்த்தம் ஸமஸ்தம் ம்ருஷேதி ।
ததாப்யம்ப மோஹோ ந மே விப்ரநஷ்டோ
ஜடித்யம்ப தம் நாசயானர்த்தமூலம் ॥

**इह** – இங்கு **आत्मा** – ஆத்மாவானது **सत्यः** – உண்மையானது (முக்காலத்திலும் உள்ளது) **चित्** – ஞான வடிவமானது **अद्वयः** – ஒரே வஸ்து. **अन्यत् समस्तं** – மற்ற எல்லாப் பொருளும் **आर्तं**–துக்கரூபம், **मृषा** – பொய்யானது (ஞானத்தால் மறைந்து போகக்கூடியது) **इति** – என்று **शास्त्राणि** – சாஸ்திரங்கள் **वदन्ति** – உபதேசிக்கின்றன. **तथापि** – அப்படியிருந்தாலும் **अम्ब** – தாயே **मे** – என்னுடைய **मोहः** – அவிவேகம் **न विप्रनष्टः** – நீங்கவில்லை. **अम्ब** – தாயே **अनर्थमूलं** – எல்லா துக்கங்களுக்கும் மூலகாரணமான **तं** – அந்த அவிவேகத்தை **झटिति** – விரைவில் **नाशय**–போக்கவேணும்.

(தொடரும்)

# श्रीसद्गुरुपादुकास्तवराजः ॥

## ஸ்ரீ ஸத்குரு பாதுகாஸ்தவராஜம்

ஸ்ரீ ஸச்சிதானந்த தீர்த்த ஸ்வாமிகள் இயற்றியது-

---

श्रीमच्छृङ्गगिरावधिष्ठितवतो व्याख्यानसिंहासनं
श्रीविद्यामनुजापनिर्मलतरस्वान्तस्य शान्तात्मनः ।
श्रेयःसन्ततिसंप्रदानकलनाकल्पद्रुलीलाजुषः
श्रीमच्चन्द्रकिशोरशेखरगुरोः श्रीपादुका मे गतिः ॥ १ ॥

ஸ்ரீமச்ச்ருங்ககிராவதிஷ்டிதவதோ வ்யாக்யாந ஸிம்ஹாஸநம்
ஸ்ரீவித்யா மநு ஜாப நிர்மலதர ஸ்வாந்தஸ்ய சாந்தாத்மந:
ச்ரேயஸ்ஸந்ததி ஸம்ப்ரதாந கலநா கல்பத்ரு லீலாஜுஷ:
ஸ்ரீமச்சந்த்ர கிசோர சேகர குரோ: ஸ்ரீ பாதுகா மே கதி: ॥

**श्रीमच्छृङ्गगिरौ** – அழகு பொருந்திய சிருங்கேரியில் **व्याख्यानसिंहासनं**–வியாக்யான ஸிம்ஹாஸனத்தில் (ஜகத்குரு பீடத்தில்) **अधिष्ठितवतः** – அமர்ந்திருந்தவரும் **श्रीविद्यामनुजाप**–ஸ்ரீவித்யை எனும் மந்திரத்தை ஜபம் செய்வதால் **निर्मलतरस्वान्तस्य**–பரிசுத்தமான மனமுள்ளவரும் **शान्तात्मनः** – ராக துவேஷங்களற்றவரும் **श्रेयस्सन्ततिसंप्रदानकलनाकल्पद्रुलीलाजुषः**–கல்பகவிருக்ஷம்போல் மங்கள வரிசைகளை அனாயாஸமாகக் கொடுப்பவருமான **श्रीमच्चन्द्रकिशोरशेखरगुरोः**–ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸத்குருவின் **श्रीपादुका** – ஸ்ரீ பாதுகைதான் **मे गतिः** – எனக்கு கதி. (1)

वेदान्ताम्बुधिमन्थनोद्यतमनोमन्थानसंपादित-
ब्रह्मानन्दसुधाझरीरसभरास्वादप्रसन्नात्मनः ।
वाग्वैखर्यभिभूतवैबुधमहाचार्यस्य साधीयसः
श्रीमच्चन्द्रकिशोरशेखरगुरोः श्रीपादुका मे गतिः ॥ २ ॥

வேதாந்தாம்புதி மந்தநோத்யத மநோ மந்தாந ஸம்பாதித
ப்ரஹ்மாநந்த ஸுதாஜரீ ரஸபராஸ்வாத ப்ரஸந்நாத்மந:
வாக்வைகர்யபிபூத வைபுத மஹாசார்யஸ்ய ஸாதீயஸ:
ஸ்ரீமச்சந்த்ர கிஶோர ஶேகரகுரோ: ஸ்ரீ பாதுகா மே கதி: ||

**वेदान्ताम्बुधिमन्थनोद्यत**-உபநிஷத்துக்களென்னும் கடலைக் கடைவதில் ஈடுபட்ட **मनोमन्थानसंपादित** – மனமென்னும் மத்தால் அடைந்த **ब्रह्मानन्दसुधाझरी** – ப்ரஹ்மானந்தமென்ற அமிருத பிரவாஹத்தின் **रसभरास्वाद** – மிகுந்த ரஸத்தை அனுபவிப்பதால் **प्रसन्नात्मनः** – தெளிவான மனமுள்ளவரும் **वाग्वैखर्यभिभूतवैबुधमहाचार्यस्य** – பேச்சுத்திறமையால் தேவ குருவான பிருஹஸ்பதியை ஜயித்தவரும் **साधीयसः** – மிக்க நல்ல ஸ்வபாவமுள்ளவருமான **श्रीमच्चन्द्र + गतिः** - ஸ்ரீசந்திர சேகரபாரதீ ஸத்குருவின் பாதுகை எனக்கு கதி. (2)

कारुण्यामृतपूरपूरितहृदः कल्याणपारंपरी-
केलीमन्दिरतामुपाश्रितवतः कामान्तकोपासितुः ।
काषायाङ्कितवाससः करलसद्दण्डस्य कान्ताकृतेः
श्रीमच्चन्द्रकिशोरशेखरगुरोः श्रीपादुका मे गतिः ॥ ३ ॥

காருண்யாம்ருத பூர பூரித ஹ்ருத: கல்யாண பாரம்பரீ
கேளீ மந்திரதாமுபாஶ்ரிதவத: காமாந்தகோபாஸிது: |
காஷாயாங்கிதவாஸஸ: கரலஸத்தண்டஸ்ய காந்தாக்ருதே:
ஸ்ரீமச்சந்த்ரகிஶோர ஶேகரகுரோ: ஸ்ரீ பாதுகா மே கதி: ||

**कारुण्यामृतपूर**– தயை என்னும் அமிருத பிரவாஹத்தால் **पूरितहृदः** – நிறைந்த மனமுள்ளவரும் **कल्याणपारम्परी**–மங்கள பரம்பரைகளுக்கு **केलीमन्दिरतामुपाश्रितवतः** - விளையாடுமிடமாக இருப்பவரும் **कामान्तकोपासितुः** - காமனை எரித்த ஈசுவரனை உபாஸிக்கின்றவரும் **काषायाङ्कितवाससः** - காஷாய வஸ்திரம் தரித்தவரும் **करलसद्दण्डस्य** - கையில் தண்டத்துடன் விளங்குபவரும் **कान्ताकृतेः** - அழகிய வடிவமுள்ளவருமான **श्रीमच्चन्द्र + गतिः** - ஸ்ரீசந்திரசேகர பாரதீ குருவின் பாதுகை எனக்குப் புகலிடம். (3)



वेदान्तध्वनिघोषिणो बुधमयूराणां मनस्तोषिणः
विद्यासस्यविपोषिणः स्वजनतासंतापविद्वेषिणः ।
अद्वैतामृतवर्षिणो जलधरस्यानन्दसन्दायिनः
श्रीमच्चन्द्रकिशोरशेखरगुरोः श्रीपादुका मे गतिः ॥ ४ ॥

வேதாந்த த்வநி கோஷிணோ புதமயூராணாம்
மநஸ்தோஷிண:
வித்யாஸஸ்ய விபோஷிண: ஸ்வ ஜநதா ஸந்தாப
வித்வேஷிண: ।
அத்வைதாம்ருத வர்ஷிணோ ஜலதரஸ்யாநந்த ஸந்தாயிந:
ஸ்ரீமச்சந்த்ர கிஶோர ஶேகர குரோ: ஸ்ரீபாதுகா மே கதி: ||

**वेदान्तध्वनिघोषिणः** - உபநிஷத் சப்தங்களைக் கூறுவதன் மூலம் கோஷத்தை எழுப்புகின்றவரும், **बुधमयूराणां** – வித்வான்களாகிற மயில்களுடைய, **मनस्तोषिणः**–மனதை ஸந்தோஷப்படுத்துகிறவரும், **विद्यासस्यविपोषिणः**–ஞானம் என்னும் பயிரை வளர்க்கின்றவரும், **स्वजनता**–தன்னை அண்டிய ஜனங்களின், **संताप** - தாபத்தை, **विद्वेषिणः** -விலக்குகின்றவரும், **अद्वैतामृतवर्षिणः**–அத்வைதமென்னும் அமிருதத்தைப் பொழிகின்றவரும், **आनन्दसंदायिनः**–ஆனந்தத்தைக் கொடுக்கின்றவரும், **जलधरस्य** – மேகம்போன்றவருமான ஸ்ரீ சந்திர சேகரபாரதீ குருவின் பாதுகை எனக்கு கதி.

இங்கு ஸத்குருவை மேகத்துடன் ஒப்பிடப்பட்டிருக்கிறது. மேகம் இடியோசையை எழுப்பி மயில்களுக்கு இன்பத்தைத் தருகிறது. ஸ்ரீ ஸத்குரு உபநிஷத் ப்ரவசனத்தால் வித்வான்களின் மனதைக் களிப்படையச் செய்கிறார். மழையைப் பொழிந்து தாபத்தை அகற்றி பயிர்களை வளர்த்து எல்லோருக்கும் உணவைக் கொடுத்து ஆனந்தத்தைத் தருகிறது மேகம். ஸத்குருவோ அத்வைதாமிருதத்தைப் பொழிந்து ஞானத்தைப் பரப்பி ஆத்யாத்மிகம் முதலான உள் தாபங்களை அகற்றி ப்ரஹ்மானந்தத்தைத் தருகிறார். (4)

(தொடரும்)

॥ श्रीः ॥

## ॥ श्रीचन्द्रमौलीश्वरस्तोत्रम् ॥

श्रीजगद्गुरुश्रीचन्द्रशेखरभारतीस्वामिभिः विरचितम् ।

श्रीपतिप्रमुखा देवाः स्वेप्सितार्थस्य सिद्धये ।
यं स्तुवन्ति समर्चन्ति नमन्ति च भजामि तम् ॥ १ ॥

चंचच्चन्द्रकलाचूडः चन्द्रिकाधवलश्शिवः ।
प्रत्यञ्चं स्फोरयत्वाशु चञ्चले हृदये मम ॥ २ ॥

द्रवीभवति यस्यैव हृदयं स्मृतिमात्रतः ।
द्रप्सवन्मधुरां वाचं द्रढयत्वनिशं स नः ॥ ३ ॥

मौलौ मन्दाकिनी यस्य मालतीमालिकानिभा ।
मौनिमानसहंसोऽयं मौढ्यं हरतु नः शिवः ॥ ४ ॥

लीनं योगिमनो यत्र तथा जगदपि ध्रुवे ।
लीढं मज्जिह्वया नित्यं करोतु निजनाम सः ॥ ५ ॥

श्वस्तना नैव विषयाः दुःखसंभिन्नसौख्यदाः ।
ज्ञात्वाप्येवं तत्र सक्तं मुक्तिमार्गाध्वगं कुरु ॥ ६ ॥

रोदिमि क्व शृगालीढहृदयोऽहं दयानिधे ।
कस्यार्द्रमस्तु हृदयं त्वां विना मयि शंकर ॥ ७ ॥

विघ्नेश्वरगुहाश्लिष्टवामदक्षिणभागभाक् ।
विद्यां मे दिशतु ब्रह्मविषयां गिरिजापतिः ॥ ८ ॥

जपध्यानार्चनस्तोत्रवन्दनैः सुरभूसुराः ।
यं तोषयन्ति सततं स शिवो नः प्रसीदतु ॥ ९ ॥

यतचित्तैर्योगिवर्यैः ध्यायमानपदाम्बुजम् ।
यमभीतिविनाशाय याम्यहं शरणं शिवम् ॥ १० ॥



तेनैव पाविता पृथ्वी तेनैव कुलमुद्धृतम् ।
येन शंभोः पदाम्भोजयुगले स्वर्पितं मनः ॥ ११ ॥

चन्द्रमौलीश्वरस्तोत्रं भक्त्या यः पठति प्रगे ।
तस्य श्रीचन्द्रमौलीशः काङ्क्षितानि प्रयच्छतु ॥ १२ ॥

## ஸ்ரீ சந்த்ரமௌளீச்வர ஸ்தோத்ரம்

(ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரபாரதீ ஸ்வாமிகள் அருளியது)

ஸ்ரீபதி ப்ரமுகா தேவா: ஸ்வேப்ஸிதார்த்தஸ்ய ஸித்தயே ।
யம் ஸ்துவந்தி ஸமர்ச்சந்தி நமந்தி ச பஜாமி தம் ॥

சஞ்சச் சந்த்ரகலா சூட: சந்த்ரிகா தவள: ஶிவ: ।
ப்ரத்யஞ்சம் ஸ்போரயத்வாஶு சஞ்சலே ஹ்ருதயே மம ॥

த்ரவீபவதி யஸ்யைவ ஹ்ருதயம் ஸ்ம்ருதி மாத்ரத: ।
த்ரப்ஸவந் மதுராம் வாசம் த்ரடயத்வநிஶம் ஸ ந: ॥

மௌளௌ மந்தாகினீ யஸ்ய மாலதீமாலிகா நிபா ।
மௌநிமாநஸ ஹம்ஸோயம் மௌட்யம் ஹரது ந: ஶிவ: ॥

லீநம் யோகி மநோ யத்ர ததா ஜகதபி த்ருவே ।
லீடம் மஜ்ஜிஹ்வயா நித்யம் கரோது நிஜநாம ஸ: ॥

ஶ்வஸ்தநா நைவ விஷயா: துக்கஸம்பிந்ந ஸௌக்யதா: ।
ஞாத்வாப்யேவம் தத்ர ஸக்தம் முக்திமார்காத்வகம் குரு ॥

ரோதிமி க்வ ஶ்ருகாலீட ஹ்ருதயோஹம் தயாநிதே ।
கஸ்யார்த்ரமஸ்து ஹ்ருதயம் த்வாம் விநா மயி ஶங்கர ॥

விக்நேஶ்வர குஹாஶ்லிஷ்ட வாம தக்ஷிண பாகபாக் ।
வித்யாம் மே திஶது ப்ரஹ்ம விஷயாம் கிரிஜாபதி: ॥

ஜப த்யாநார்ச்சன ஸ்தோத்ர வந்தனை: ஸுரபூஸுரா: ।
யம் தோஷயந்தி ஸததம் ஸ ஶிவோ ந: ப்ரஸீதது ॥

யதசித்தைர் யோகிவர்யைர் த்யாயமாந பதாம்புஜம் ।
யமபீதிவிநாஶாய யாம்யஹம் ஶரணம் ஶிவம் ॥

தேநைவ பாவிதா ப்ருத்வீ தேநைவ குலமுத்த்ருதம் ।
யேந ஶம்போ: பதாம்போஜ யுகளே ஸ்வர்ப்பிதம் மந: ॥

சந்த்ரமௌளீச்வர ஸ்தோத்ரம் பக்த்யா ய: படதி ப்ரகே ।
தஸ்ய ஸ்ரீ சந்த்ரமௌளீச: காங்க்ஷிதாநி ப்ரயச்சது ॥

1. விஷ்ணு முதலான தேவர்கள், தாங்கள் அடைய விரும்பும் பொருள் கிடைக்க, எவரை துதிக்கிறார்களோ, பூஜிக்கிறார்களோ, வணங்குகிறார்களோ, அவரை பஜிக்கிறேன்.

2. சிரஸ்ஸில் சந்திரகலையுடன் விளங்கும், நிலா போல் வெண்மை நிறமுள்ள பரமசிவன் சஞ்சலமான என் மனதில் விரைவில் ஆத்ம வஸ்து விளங்கும்படி செய்யட்டும்.

3. எவரை நினைத்த மாத்திரத்திலேயே மனம் உருகுகின்றதோ, அவர் நமக்கு கடைந்த மோர்போல இனிமையான வாக்கை நிலைபெறச் செய்யட்டும்.

4. எவருடைய சிரஸ்ஸில் மாலதீ மாலை போல கங்கை விளங்குகிறாளோ, யோகிகளின் மனமென்னும் மானஸஸரஸ்ஸில் ஹம்ஸமாக விளங்கும் இந்த ஈசுவரன் நம் அறியாமையைப் போக்கட்டும்.

5. அழிவற்ற எவரிடம் யோகிகளின் மனம் லயிக்கிறதோ, உலகமும் (முடிவில்) மறைகிறதோ, அவர் தன் நாமாவின் சுவையை நுகரும்படி என் நாக்கைச் செய்யட்டும்.

6. உலக விஷயங்கள் நாளை இருப்பதில்லை. (சாச்வதமாக இல்லாமல் விரைவில் விலகக்கூடியவை. இருக்கும் காலத்திலும்) துக்கம் கலந்த ஸுகத்தைத்தான் கொடுக்கும். இவ்வாறு (விஷயங்களின் உண்மையை) அறிந்தும் அதில் ஆசையுடன் ஈடுபட்ட என்னை மோக்ஷ வழியில் செல்லும்படி செய்யவேணும்.

7. கருணையின் இருப்பிடமான சங்கரா, துன்பம் நிறைந்த மனமுள்ள நான் எங்குபோய் அழுவேன்? உன்னைத் தவிர வேறு யாருடைய மனம் என்னிடம் ஈரமுள்ளதாக (கிருபா ரஸத்தால் நனைந்ததாக) ஆகும்?



8. இடது பாகத்தில் விநாயகராலும், வலது பாகத்தில் முருகனாலும் தழுவிக்கொள்ளப்பட்ட, மலைமகளின் ணவனை சிவன் எனக்கு ப்ரஹ்மஞானத்தைக் கொடுக்கட்டும்.

9. ஜபம், தியானம், பூஜை, துதி, நமஸ்காரம் இவைகளால் எவரை தேவர்களும் விப்ரர்களும் ஸந்தோஷப்படுத்துகின்றனரோ, அந்த பரமசிவன் எப்பொழுதும் மக்கு அருள்புரியட்டும்.

10. மனதை அடக்கிய சிறந்த யோகிகளால் யானிக்கப்படும் பாதாரவிந்தங்களையுடைய சிவனை நான் மபயம் விலக அடைக்கலம் புகுகிறேன்.

11. எவனால் சம்புவின் இரு பாதாரவிந்தங்களிலும் னம் செலுத்தப்படுகிறதோ, அவனால் தான் பூமி பரிசுத்தமாகிறது. அவனால் தான் வம்சம் கைதூக்கிவிடப்படுகிறது.

12. எவர் அதிகாலையில் பக்தியுடன் சந்திரமௌளீசுவர ஸ்தோத்திரத்தை பாராயணம் செய்கிறாரோ அவருக்கு சந்திரமௌளீசர் விரும்பிய பொருள்களைக் கொடுப்பார்.

---

स्वयमेव जनाः सर्वे पतन्ति विषयावटे ।
अन्धा इव पुरः कूपे परैरप्रेरिता अपि ॥
यस्तु तान् रक्षति क्लिष्टान् ज्ञानमार्गोपदेशतः ।
स लोकस्य पिता ज्ञेयो माता बन्धुर्गुरुश्च सः ॥

எதிரிலிருக்கும் கிணற்றில் தாங்களாகவே குருடர்கள் விழுவது போல ஜனங்களெல்லோரும் பிறரால் தூண்டப்படாமலிருந்தாலும் தாங்களாகவே சப்தம் முதலான விஷயங்களென்னும் பொந்தில் விழுகின்றனர்.

இவ்வாறு துன்புறும் ஜனங்களுக்கு ஞானமார்க்கத்தை உபதேசித்து யார் காப்பாற்றுகிறாரோ, அவர்தான் உலகிற்குத் தந்தை. தாயும், உறவினனும், குருவும் அவனே.

— ஹரிபக்திஸுதோதயம்.

ஸ்ரீ சங்கர க்ருபா

# ஸ்ரீ ஸத்குரு கிளிப்பாட்டு

குருபாத சேகரன் எழுதியது.

1. அன்பருக்கு அன்பனடி
அத்துவித ஸித்தனடி
ஆனந்த சுந்தனடி — கிளியே
என் ஸத்குருநாதனடி.

2. ஆறுமுக யோகனடி
ஆறாத போதனடி
இன்பமுகத்தோனடி — கிளியே
என் ஸத்குருநாதனடி.

3. இகபர ஸுகமெல்லாம்
இன்றே தந்திட வல்லோன்
ஈதலில் கர்ணனடி — கிளியே
என் ஸத்குரு நாதனடி.

4. ஈசுவரோ பாஸனடி
ஈம்கார ரூபனடி
உதாரஸ்வபாவனடி — கிளியே
என் ஸத்குரு நாதனடி.

5. உத்தம குருபீடத்தில்
உல்லாஸமாயமர்ந்து
ஊமைபோல் நடிப்பானடி — கிளியே
என் ஸத்குரு நாதனடி.

6. ஊட்டுவான் அமுதையடி
ஊராரறியாரடி
ரமணீயரூபனடி — கிளியே
என் ஸத்குரு நாதனடி.

7. ருஷ்ய ச்ருங்க வாஸனடி
ருக்வேதாதி தத்வனடி
லஷ்மீ பதாப்ஜனடி — கிளியே
என் ஸத்குரு நாதனடி,



8. லலிதா பூஜகனடி
லம்போதரபரனடி
எளியோரைக் காப்பானடி — கிளியே
என் ஸத்குரு நாதனடி.

9. எட்டாங்க யோகியடி
எண்ணறைங்கு குணவானடி
ஏகாந்த யோகனடி — கிளியே
என் ஸத்குரு நாதனடி.

10. ஏசுவார் உலகத்தார்
ஏதென்றறியாமலே
ஐயனடியனடி — கிளியே
என் ஸத்குரு நாதனடி.

11. ஐந்தெழுத்து நாதனடி
ஐயத்திற்கு விளக்கடி
ஒருமனப்பித்தனடி — கிளியே
என் ஸத்குருநாதனடி.

12. ஒரு குறியிலுள்ளோனடி
ஓடியாத கொடியடி
ஒலியும் பேசானடி — கிளியே
என் ஸத்குரு நாதனடி.

13. ஓம்கார வஸ்துவடி
ஓயாத ஞானியடி
ஔதார்ய சித்தனடி — கிளியே
என் ஸத்குரு நாதனடி.

14. ஔவை சாரதாவின் முன்
அஞ்சலியுடன் நின்று
அகப்பேயை ஒழித்தானடி — கிளியே
என் ஸத்குரு நாதனடி.

15. சந்திரசேகர வள்ளல்
பயவி நாசகனடி
பவரோக வைத்தியனடி — கிளியே
என் ஸத்குரு நாதனடி.

# சிருங்கேரி ஸ்ரீ மஹாஸ்வாமிகளின் உபதேசம்

ஆசார்யன் யார்? அவரால் நமக்கு என்ன பயன்? அவருடைய கார்யம் என்ன? என்பதை விசாரிப்போம். ஆசார்யன், குரு என்பது எல்லா பாஷைகளிலும் மிகவும் கௌரவமுள்ள பெயராகும். எழுத்தைக் கற்றுக் கொடுப்பவனையும், பெரிய கஷ்டத்திலிருந்து விடுவிப்பவனையும், நன்மை புரிபவனையும் ஸாதாரணமாக குருவென்று சொல்லலாம். ஆனால் உபநிஷத்தின் தத்வத்தை அறிந்து அக்ஞானம் விலகி ஆத்மாநுபவத்தில் தான் நிலைத்திருப்பதோடு அதைப் பிறருக்கும் உபதேசிப்பவர்தான் உயர்ந்த ஆசார்யராவார். முதலையால் பிடிக்கப்பட்ட கஜேந்திரன் போல துன்பத்தில் அகப்பட்டவர்கள், பொருளை விரும்புபவர், ஞானத்தை விரும்புபவர் இம்மூவரும் ஈசுவரனிடம் சென்று தங்கள் அபீஷ்டங்களை நிறைவேற்றிக் கொள்கின்றனர். ஆனால் முன்சொன்ன ஞானியான ஆசார்யன் ஈசுவரஸ்வரூபமாகவேயிருக்கிறான். 'எனக்கும் ஞானிக்கும் சிறிதும் வேற்றுமை கிடையாது' என்று கீதையில் பகவான் கூறுகிறார். இந்த ஞானியான ஆசார்யனுக்கு அக்ஞானமோ, மோஹமோ சிறிதுமிராது. இருந்தால் அவன் ஞானியில்லை. ஞானிக்கு உலகத்தோற்றம் கிடையாது. உலகத்தோற்றமில்லாமல் அத்வைத ப்ரஹ்மாநுபவத்திலேயே ஈடுபட்டிருக்கும் ஞானி எவ்விதம் சிஷ்யனுக்கு உபதேசிக்கமுடியும் என்று கேட்கலாம். ஈசுவரன் ஸாதுக்களின் துன்பங்களைப்போக்க அவதாரம் செய்து துஷ்டர்களை அடக்கி உலகைக் காப்பாற்றுவதுபோல ஆசார்ய மூர்த்தியாகவும் அவதரித்து தன்னைச்சரணடைந்த சிஷ்யர்களுக்கு தத்வத்தை உபதேசித்து அக்ஞானத்தை விலக்கி ஸம்ஸாரபந்தத்திலிருந்து விடுவிக்கிறார். பரமேசுவரனே பகவத் பாதாசார்யராக உலகில் அவதரித்து சிஷ்யர்களுக்கு ஆத்ம ஞானத்தை உபதேசித்தார். ஆசார்யர் சிஷ்யர்களைத் தன்போலாக்கி விடுகிறார். சிஷ்யர்களும் ஆத்மாநுபவத்தையடைந்து ஜீவன் முக்தி நிலையில்



பிராரப்த சரீரத்துடன் ஆசார்யஸ்தானத்திலிருந்து சிஷ்யர்களுக்கு உபதேசித்து விடுவிக்கிறார்கள். இருவரும் ஆசார்யர்களே. ஜீவன் முக்தனுக்கு உலகத்தோற்றமிருப்பதால் குரு, சிஷ்யன், உபதேசம் எல்லாம் உண்டு. பிராரப்த சரீரம் நீங்கி விதேஹ முக்தி அடைந்த பிறகு அவனுக்கு உலகத்தோற்றம் கிடையாது. ஆகையால் விரோதமில்லை.

நம்முடைய உண்மையான ஸ்வரூபம் அக்ஞானத்தால் மறைந்திருக்கிறது. அதனால் மோஹத்தை யடைந்து ஸம்ஸாரக் கடலில் மூழ்கி தத்தளிக்கிறோம். சில ஸமயம் ஆஸுரபாவம் மேலிட்டு அஹங்காரத்தால் மதிமயங்குகிறோம். இந்த நிலைமையில் நம்மைப்போல் தத்தளிக்கின்ற ஒரு மனிதனை நாம் அண்டினோமானால் துன்பக் கடலிலிருந்து கரைசேர முடியாது. குருடனை வழிகாட்டியாக அடைந்த குருடன் நேர்வழி செல்லமுடியுமா? ஆகையால் தத்வ ஞானத்தை அடைந்து அக்ஞானம் நீங்கிய ஆசார்யனை நாம் சரணடைய வேண்டும். இவர்தான் கடைத்தேற நமக்கு வழி காட்டுவார். அவர் அநுபவிக்கும் ப்ரஹ்மானந்தத்தை நாமும் அநுபவிக்கும்படி செய்வார். உலகை ப்ரஹ்மம்போல் ஸத்யமெனக் கருதும் தார்க்கிகர்கள் ஆசார்யர்களாகமாட்டார்கள். உயர்ந்த மனிதப் பிறவியை யடைந்த நாம் உண்மையான ஆசார்யனைத் தேடியடைந்து அவர் உபதேசிக்கும் வழியில் செல்ல வேண்டும். அசுப வாஸனையை விலக்கி சுப வாஸனையை வளர்க்கவேண்டும். சுப வாஸனையைத்தான் தைவ ஸம்பத்து என்று கீதையில் பகவான் உபதேசிக்கிறார். காமதேனுவைக் கலப்பையில் கட்டி வயலில் உழுவதுபோல் கிடைத்தற்கரிய உயர்ந்த மானிட ஜந்மாவை ஞானத்தை அடைய உபயோகிக்காமல் விஷயாநுபவத்திலேயே வீண் காலத்தைக் கழித்தால் இவனைவிட முட்டாள் வேறு யார்? ஸத்குரு கிருபையால் ஞானமடைந்தால் பிறப்பு, இறப்பு கிடையாது. ஆகையால் ஆசார்யன் காட்டும் வழியில் சென்று எல்லோரும் க்ஷேமமடைய வேண்டும்.

# உபாகர்ம தத்வப்பிரகாசம்.

(முன் தொடர்ச்சி)

வேதத்தை அவச்யம் அத்யயனம் செய்யவேண்டும். க்ரஹணாத்யயனம், தாரணாத்யயனம், நித்யாத்யயனம், யஜனாத்யயனம், யாஜனாத்யயனம் என்று அத்யயனத்தை ஐந்துவிதமாக மநு கூறியிருக்கிறார்.

1. **க்ரஹணாத்யயனம் :** ருக்வேதிகள் மஹாநாம்னீ வ்ரதம், மஹாவ்ரதம், உபநிஷத்வ்ரதம், இவைகளின் அனுஷ்டான பூர்வகமாயும், சுக்லயஜுர்வேதிகள், 'வேத வ்ரத சதுஷ்டயம்' என்ற வ்ரதானுஷ்டாந பூர்வகமாயும், தைத்திரீய சாகிகள் ப்ராஜாபத்யாதி காண்டவ்ரத உபக்ரம பூர்வகமாயும், ஸாமவேதிகள் 'ஸாவித்ராதி' வ்ரத அநுஷ்டான பூர்வமாயும், அதர்வவேதிகள் தங்கள் விரதானுஷ்டான பூர்வகமாயும் குருமுகமாக அத்யயனம் செய்வது க்ரஹணாத்யயனம்.

2. **தாரணாத்யயனம் :** எல்லா வேதிகளும் தாங்கள் அத்யயனம் செய்த வேத மந்திரங்களுக்கு யாதயாமத்வம் முதலான தோஷங்கள் நீங்கி ஆயுதங்களை சாணையில் தீட்டியவுடன் கூர்மை ஏற்படுவதுபோல் வீர்ய ஸித்தி ஏற்பட அவரவர்களுடைய ஸூத்ரகாரர் சொன்னகாலத்தில் உபாகர்மாவைச் செய்து வேதாரம்பம் செய்வது தாரணாத்யயனமெனப்படும். இதற்கு புண்ய தீர்த்த ஸ்நானம், தேவரிஷி பித்ருதர்ப்பணம், ஹோமம் முதலியவை அங்கம்.

3. **நித்யாத்யயனம் :** ஒவ்வொருவரும் தனித்தனியாக தினந்தோறும் ப்ரஹ்மயக்ஞப்ரச்னம் சொல்வது நித்யாத்யயனம்.

4. **யஜனாத்யயனம் :** தான் செய்யும் யாகம் முதலான கர்மாக்களில் மந்திரங்களை உச்சரிப்பது யஜனாத்யயனம்.

5. **யாஜனாத்யயனம்** பிறர் செய்யும் யாகங்களில் ருத்விக்காக அமர்ந்து யஜமானனுக்காக மந்திரங்களைச் சொல்வது யாஜனாத்யயனம்.

**(தொடரும்)**

# கீத ஸந்தேசம்

(கீதைக் கடிதங்கள்)

**கடிதம் — 3**

சென்னை.

அன்புமிக்க நண்பருக்கு,

ஞானயோகத்தைப்பற்றி ஐந்து அத்தியாயங்களில் உபதேசம் செய்திருப்பதை இரண்டாம் அத்தியாயத்தின் முற்பகுதியில் சுருக்கமாக கீதாசிரியன் காட்டிவிட்டான். பின் பகுதியில் கீதையிலுள்ள நல்லுரைகளிலெல்லாம் ஒப்பற்ற ரத்தினமாகத் திகழும் கர்மயோகம் பற்றிச் சுருக்கமாக அறிவிக்கிறான்.

வாழ்நாள் முழுவதும் நாம் பல்வேறு சிறு தொழில்களில் ஈடுபடுகிறோம். இந்தக் கடிதத்தை எழுதும் நானும், படிக்கும் நீங்களும் தொழில் புரிகின்றோம். தொழிலில் ஈடுபடாமல் மனிதனால் ஒருகணமும் இருக்கமுடியாது. கருமத்தின் பயனாகப் புண்ணியமும், பாபமும் தொடர்கின்றன. இவைகளின் காரணமாக மனிதன் பிறப்பு – இறப்பு என்னும் ஸம்ஸார பந்தத்தில் சிக்கி அல்லற்படுகிறான். கருமம் தவிர்க்க முடியாதது என்றால் மண்ணிற் பிறந்த ஒவ்வொரு மனிதனும் ஓயாமல் கருமங்களைப் புரிந்து, பாப புண்ணியங்களைச் சேர்த்துக்கொண்டு, ஆயிரமாயிரம் பிறவிகளை எடுத்து அவற்றைக் கழிக்க வேண்டிய நியதி அவனுக்கு ஏற்படுகிறது. இந்த அல்லலுக்கு முடிவே இல்லையா? கீதாசாரியன் காட்டும் கருமயோகமே இதற்குச்சிறந்த ஒப்பற்ற மருந்தாகும். அது இதுதான்: ஸாதாரணக் கருமத்துக்குப் புண்ணிய பாபமென்னும் தளைகள் உண்டு. பயனில் ஆசை வைக்காமல் செய்யப்படும் கருமத்துக்குத் தளைகள் கிடையா. பயன் கருதாமலேயே கருமத்தைச் செய்துவரும் ஸாதகனுக்குப் புண்ணிய பாபம் என்ற தளைகள் விலகிப்போவதால் ஸம்ஸாரத்தில் அல்லல் உறுதல் என்ற அவலநிலை ஏற்படுவதில்லை. அவனுக்கு விதிக்கப்பட்ட ஆயுட்காலம் முடிவடைந்தபின் அவன் இறைவனடியே சேர்கின்றான்.

இதுதான் உபதேசத்தின் ஸாரம். இதை நடைமுறைக்குக்கொண்டு வருவதில் சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. கருமபலத்தியாகம் என்ற இந்த ஒப்பற்ற தருமத்தைச் செய்வது எளிதல்ல; இதற்குச் சிறந்த அறிவுத் தெளிவோடு உறுதியும் பயிற்சியும் தேவைப்படுகின்றது. இவை பற்றி மூன்றும் அத்யாயத்தில் விளக்கமாகக் கூறப்படும். இங்கே கர்ம யோகம் பற்றி இரண்டு தன்மைகள் விளக்கம் பெறுகின்றன. பயன் நோக்காது செயல் புரியும் பழக்கத்தை மேற்கொண்டவன் பயனைப் பெறும்போது பெரிதும் மகிழ்ச்சி அடையமாட்டான் என்பது தெளிவாகின்றது. வெற்றி, தோல்வி இவ்விரண்டு எதிர்மறையான விளைவுகளில் எது தோன்றினாலும் கர்மயோகி மனச்சஞ்சலம் அடையமாட்டான். மாறுத மனநிலையில் ஸமமாக இருத்தல் என்பது கர்மயோகத்தின் ஒரு முக்கிய லக்ஷணம்.

கருமத்தின் பயனைக்கருதாது கருமம் புரிதல் யோகம் என்றால், ஸாதகன் சிரத்தையில்லாமல் கருத்தில்லாமல் "ஏதோ செய்து முடிக்கவேண்டும்" என்ற அலட்சிய பாவத்தோடு கருமத்தைச் செய்யக்கூடாது. தன் கடமையை முழு மனதோடு, ஓரின்ப உணர்ச்சியுடன் செய்பவன்தான் கருமயோகி. இத்தகைய கருமயோகி தன் தொழிலில் சிறந்த திறமையைப் பெற்றவனாக இருப்பான் என்று உணர்த்துகிறான் கீதாசாரியன். பயனைப்பற்றி முளைப்பு வருவதாலேயே நமக்குக் கருமத்தில் கவனம் குறைந்து போய்விடுகின்றது. பயன் கருதாத ஸாதகன் வினையிலேயே முழுமனதையும் செலுத்திவருவான்; இவன் சிறந்த தொழிலாளியாக ஆகிவிடுவதில் வியப்புமுண்டோ?

மத நூல்கள் எல்லாம் "இப்படி இருக்கவேண்டும். அப்படி இருக்கக்கூடாது" என்று போதனைகள் பல செய்யும். கீதையின் பெருமை என்னவெனில் போதனைகளைச் செய்வதுடன் இவற்றை நடைமுறையில் நடத்திக் காட்டுபவன் எப்படி இருப்பான் என்பதையும் சித்தரித்துக்காட்டுகிறது. உத்தமனின் லக்ஷணங்களை வர்ணிக்கும் இடங்கள் கீதையில் மூன்று. அவற்றுள் மிகச் சிறந்தது 2-ம் அத்தியாயத்தின் இறுதியிலுள்ள ஸ்திதப்பிரக்ஞனின் வர்ணனையாகும்.



இன்பத்திலும் துன்பத்திலும் மாறுத தன்மை உடையவன் ஸ்திதப்ரக்ஞன். அவனுக்கு உலகப் பொருள்களிலே பற்று இல்லாததால் ஆன்மீகத்துறையில் ஈடுபட்டிருப்பான். ஆன்மாவைப்பற்றிய விஷயங்களிலேயே தன் மனத்தை ஈடுபடுத்தியிருப்பான். புலன்கள் அறிவாளியின் மனத்தையும் கவர்ந்துவிடக்கூடிய வலிமை பெற்றவை என்பதை உணர்ந்து அவை தன் கட்டுக்கு மீறாமல் இருக்கும்படி மிக்க விழிப்புடனே பார்த்துக்கொள்வான். இவ்வுலக வாழ்க்கையில் இன்பம் காண விரும்புபவன் மனச் சாந்தியைப் பெறவேண்டும்; சாந்தியைக் குலைத்து விடும் தன்மை பெற்றவை ஆசையும், ஆசை பற்றி எழும் கோபமுமாம்; இவ்விரண்டையும் விலக்கிய ஸ்திதப்பிரக்ஞன் நிலைபெற்ற மனத்தினாய் சாந்தி நிரம்பிய இன்பவாழ்வினைப் பெறுகின்றான். அவனுடைய புலன்களின் வழியே உட்செல்லுபவை பலவாயினும் அவை அவன் மனத்தில் என்றும் சலனத்தை உண்டாக்குவதில்லை. பல ஆறுகளின் நீர் கடலைச்சேர்ந்திடினும் கடல் மட்டத்தில் உயர்வதுமில்லை; பெருக்கெடுத்துக் கரை புரள்வதுமில்லை — என்பது போல பிராஹ்மீ நிலை என்ற இப்பெரு நிலையை எய்திய ஸ்திதப் பிரக்ஞன் வாழ்க்கையின் இறுதியில் வீடு என்னும் பேரின்பப் பேற்றினையே அடைகிறான்.

"நிலையில் திரியாது அடங்கியான் தோற்றத்"தைப் படம் பிடித்துக்கொடுத்த கீதாசாரியன் ஸாதகர்கள் தமக்கென்று வகுத்துக்கொள்ள வேண்டிய தனி வழியையும் அவ்வழி நடக்கும் பெரியோர்களின் இலக்கணத்தையும், வழியின் முடிவில் அடையத்தக்க "வாராச் சேட் புலத்"தையும் தெளிவாகக்காட்டி விட்டான் அல்லவா?

அன்புமிக்க,

**அ. வே. சுப்ரமணியன்.**

உ

# ஸ்ரீ தேவி பாகவதக் கதைகள்

[P. R. நாராயண சர்மா, பன்னத்தூர்]

மலர் 2 — இதழ் 1வின் தொடர்ச்சி.

## "பராசக்தியின் பெருமை"

ज्ञानिनामपि चेतांसि देवी भगवती हि सा ।
बलादाकृष्य मोहाय महामाया प्रयच्छति ॥

ஞானினாமபி சேதாம்ஸி தேவீ பகவதீ ஹி ஸா ।
பலாதாக்ருஷ்ய மோஹாய மஹாமாயா ப்ரயச்சதி ॥

[ஸரஸ்வதீ நதிக்கரையில் தவம் செய்துகொண்டிருந்த வியாஸமுனிவர் தற்செயலாய் ஓர் பறவை தன் குஞ்சிடம் காட்டும் பிரேமையைப் பார்த்து தனக்கும் ஓர் புத்திரன் வேண்டும் என்ற ஆசையால் மனதில் சாந்தி கலைந்து இருப்புக்கொள்ளாமல் மேருமலைச்சாரலை அடைந்து எந்த தேவதை தன் கோரிக்கையை நிறைவேற்றும் என்ற யோஜனையில் ஆழ்ந்திருந்தபொழுது அங்கு நாரதர் வந்து சேர்ந்தார்]

ஸ்ரீ ஜகன்மாதாவின் வாஸஸ்தலமாகிய மேருமலைச் சாரலில் பாரிஜாத மலரின் பரிமளத்துடன் மந்தமாருதம் வீச, பசும்பொன்மயமான ஒரு பாறையின்மீது, இரு முனிபுங்கவர்கள் வீற்றிருந்தனர். அவர்களுள் பகவந்நாம ஸங்கீர்த்தனத்தையே தமது ஜீவனாதாரமாகக்கொண்டு, மாந்தர்மட்டுமின்றி, பசு, பக்ஷி மிருகவர்க்கத்துடன், மலை, மரம், செடி, கொடி முதலிய தாவரவர்க்கங்களையும், தமது நாத வெள்ளத்தில் ஆழ்த்தி, நற்கதியடையும்படி செய்யவல்ல நாரதமுனிவர் ஒருவர்.

மற்றவரோ, அநாதியாய், அளவற்றதாய் உள்ள வேதத்தை விபாகம் செய்து, பதினெண்புராணங்களையும் தொகுத்து, இதிஹாஸ ரத்தினமாகிய மஹாபாரதத்தையும் இயற்றி, மோக்ஷ ஸாதனமாகப் பிரம்ம ஸூத்திரத்தையும்



அருளிச் செய்த வியாஸமுனிவர். பரமபாகவதோத்தமரான நாரதமுனிவர் பகவத்தியானமே உருவெடுத்தவர். அதனாலேயே மனச் சாந்தியும் அடைந்தவர். ஆகவே சிறிதும் களங்கமின்றி, அவர் முகம் பிரம்மதேஜஸுடன் ஜ்வலித்தது. அவரைவிடப் பன்மடங்கு தவவலிமையும், தூய மனச் சாந்தியும் பெற்ற வியாஸமுனிவர் மஹாமாயா ஸ்வரூபிணியான பராசக்தியின் பிரபஞ்ச லீலையில் சிறிது கவனம் செலுத்த நேர்ந்ததன் காரணமாகப் புத்திரப் பிரேமையும், எந்த தேவதையை உபாஸித்தால் சீக்கிரம் அப்பலனையடையலாமென்ற ஆவலும் தூண்டவே, சிறிது சித்த சாந்தி கலைந்து, நாரதரிடம் தம் எண்ணத்தை வெளியிட, அவர் கூறலுற்றார் :—

"வியாஸமுனிவரே, ஸகல தேவதைகளும் தம்மை வணங்கி வழிபடுபவர்களுக்குக் கோரிய பலனைக் கொடுக்க வல்லவர்களே. ஆனால் அந்தத் தேவதைகளுக்கும் தன் சக்தியினால் வலிமை தந்து, அதே சக்தியினால் பிரபஞ்சம் முழுவதையும் ஆட்கொண்டு, அருள் நடம்புரியும் உத்தம தேவதை யார்? என்பதைப்பற்றி ஒரு சமயம் என் பிதாவான பிரம்மதேவருக்கே ஸந்தேஹம் தோன்றிற்று.

உடனே லக்ஷ்மீகாந்தனும், அழகிய கௌஸ்துப ஆபரணம் அணிந்தவனும், சங்கு சக்ர கதாதாரியாய், அழகிய பீதாம்பரம் புனைந்து, நான்கு கைகளுடன், ஸ்ரீவத்ஸம் என்ற மரு மார்பகத்தில் சோபிக்க ஸகலலோக காரணராய், தேவதேவனாய், ஜகத்குருவாய் உள்ள வாஸுதேவனான அந்த ஜகந்நாதனைத் தியான நிலையில் கண்டு, அதிசயித்து வணங்கி,

"ஹே தேவ தேவா, உலகிற்கு இறைவா, முன் சென்றவையும், இப்பொழுது இருப்பவையும், இனித் தோன்றுபவையுமான ஸகல ஜீவராசிகளுக்கும் தலைவனே, தாம் எதைப்பற்றித் தியானம் செய்கின்றீர்? எந்தத் தேவதையின் ஸாந்நித்யம் கருதித் தவம் புரிகின்றீர்? ஸகல ஜகத்திற்கும் பிரபுவான நீர் வேறு ஒருவரைப்பற்றித்

தியானிப்பதும், தவம் புரிவதும் விந்தையாய் இருக்கிறது! உமது நாபிக்கமலத்திலிருந்து தோன்றிய எனக்கே தவம் உரிமையாய் இருக்க, எனக்கும் காரண பூதரான தாங்கள் ஏன் தவம் புரியவேண்டும்? அஷ்ட ஐசுவர்யங்களையும் அளிக்கவல்ல, லக்ஷ்மீ தேவியே தங்களைப்பதியாக அடைந்திருக்கத் தங்களுக்கு என்ன குறை? ஹே ஜகந்நாதா, உம்மை நான் அறிவேன். நீர் அநாதியாய் உள்ளவர். ஸகலத்திற்கும் காரணர் நீரே; உலகைப்படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலிலும் நீரே ஸமர்த்தர். உமது இச்சையின் காரணமாகவே, உலகை நான் படைக்கிறேன். உமது ஆணையால், முக்கண்ணனும் காலம் தவருது ஜீவராசிகளை ஒடுக்கி வருகிருர். கதிரவன் ஒளி கொடுப்பதும், காற்று வீசுவதும், நெருப்புச் சுடுவதும், கார் முகில் மழை பொழிவதும், உமது ஆணையாலேயே! அங்ஙன மிருக்க நீர் எந்தத் தேவனைத் தியானிக்கிறீர்? இது எனக்கு மிகவும் ஸந்தேஹத்தையளிக்கிறது. மூவுலகிலும் உம்மைவிட உயர்ந்த தேவன் யார்? கருணைகூர்ந்து எனக்கு விடை பகரவேண்டும். நான் உமது பக்தனல்லவா? பெரியோர்கள் உத்தம சிஷ்யனிடம் எதையும் மறைக்கமாட்டார்களெனச் சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆகவே தயவு செய்து என் ஸந்தேஹத்தை நிவிருத்தி செய்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

பிரம்ம தேவரின் மொழியைக்கேட்ட விஷ்ணு பகவான் புன்முறுவல் செய்து பின்வருமாறு பகன்ருர் :—

"பிரம்ம தேவா, உமது கேள்விக்கு விடை தருகிறேன். கவனத்துடன் கேளும். படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலுக்கும் காரணர்களாக, முறைப்படி உம்மையும் என்னையும் முக்கண்ணனையும், ஸாதாரண முறையில், தேவர், அஸுரர், மானிடர் முதலியவர் கூறுவது இயல்பே. ஆனல் தத்வ ஞானிகளாகிய மஹான்கள் அவ்விதம் கூறமாட்டார்கள். நீர் படைப்பவராகவும், நான் ரக்ஷிப்பவனுகவும், ஹரன் ஸம்ஹரிப்பவனுகவும், தொழில் புரிவது நமக்கும் மேலான மஹாசக்தியாலேயே, என்பது



அவர்கள் தீர்மானம். அம்மஹா சக்தி உலகைப்படைக்கும் ரஜோகுண ரூபிணியாய் உம்மிடமும், ஸத்வ குண ரூபிணியான ஸ்திதி சக்தியாக என்னிடமும், தமோ குண ரூபிணியான ஸம்ஹார சக்தியாக பரமசிவத்தினிடமும் இருந்து நம்மை இயக்குவிக்கின்ருள். எங்கும் நிறைந்த அந்த மஹா சக்தி நம்மிடமில்லையேல் நம்மால் ஒன்றும் செய்ய இயலாது. உம்மால் படைக்கவோ, என்னல் காக்கவோ, ஹரனல் ஸம்ஹரிக்கவோ முடியாது. நாம் எப்பொழுதும் எந்நேரமும், நேர்முகமாகவும், மறைமுகமாகவும், அவளுக்கு வசப்பட்டவர்களே. இதை உறுதியாகக் கூறலாம்.

பாம்பணையில் பள்ளிகொண்டு யோகநித்திரையில் ஆழ்ந்திருந்தாலும், சரியான சமயத்தில் விழிப்படைவதும் அந்த மஹாசக்தியின் அருளாலேயே. எப்பொழுதும் தியானித்துத் தவம் புரிவதும் அவள் அருளால்தான். சில சமயம் லக்ஷ்மீ ஸமேதனுய், ஆனந்தாநுபவத்தில் அமிழ்ந்திருக்கிறேன். சிலசமயம் கொடிய அரக்கரோடும், அஸுரரோடும், உலகம் நடுங்கும் வண்ணம் கடும்போர் புரிகிறேன். நான்முகனே! ஒரு சமயம் என் காதுக்குரும்பியிலிருந்து உண்டான "மது, கைடபன்" என்ற இரு அஸுரர்களோடு தரைப்பிரதேசமேயில்லாது, எங்கும் ஜலமயமாய் இருந்த பொழுது நான் ஐயாயிரமாண்டுகள் கடும்போரிடவில்லையா? பிரம்ம தேவனே, அப்பொழுதும் அந்தப் பராசக்தியின் அருளாலேயே, அவர்களை மயக்கி வெல்ல முடிந்தது. இதைப் பிரத்தியக்ஷமாக நீரும் அறிந்திருந்தும், அந்த மஹா சக்தியே பராத்பர வஸ்து என்பதை அறிந்துகொள்ளாமல் அடிக்கடி என்னிடம் கேட்பதேன்? புருஷோத்தமனுய், இருந்தும் ஆமையாகவும், வராஹமாகவும், சிங்கமாகவும், வாமனனுகவும் மாறியது அம்மஹாசக்திக்கு வசப்பட்டே ஒழிய என் இச்சைப்படியல்ல.

நான்முகனே, முன் ஒருகாலத்தில் வில்லின் நுனியினுல் என் தலை கொய்யப்பட்டதும், நீர் குதிரையின் தலையைக் கொண்டுவர தேவலோகச் சில்பியான த்வஷ்டா என்பவன் அதை என் உடலோடு சேர்க்க, அது முதல் "ஹயக்ரீவன்"

(குதிரை முகன்) என்று பெயர் பெற்ற வரலாறும் நீர் அறிந்ததே. ஆகவே நான் ஸ்வதந்திரனல்லன். அம்மஹா சக்திக்கு வசப்பட்டவனே. அந்த சக்தியையே ஸதா தியானித்து வருகிறேன்.” என லக்ஷ்மீபதி கூறவும், என் பிதா பிரம்மதேவரும் ஸந்தேகம் தெளிந்து, இவ்வரலாற்றை எனக்குக் கூறினார். வியாஸ முனிவரே, ஸகல தேவர்களும், அம்மஹா சக்திக்கு வசப்பட்டவர்தாம். ஆகவே நீரும் அம்மஹா சக்தியைத் தியானித்து, வழிபட்டால், கருணைக் கடலான பரதேவதை உமது அபீஷ்டத்தை நிச்சயமாக நிறைவேற்றிவைப்பாள். இது உறுதி” என்று நாரதர் கூறவும், வியாஸ முனிவர் அப்படியே செய்வதாகக்கூறிப் பரதேவதையைத் தியானித்துத் தவம் புரியலானார்.

(தொடரும்)

# பக்தி ஸாம்ராஜ்யம்

T. S. சிவராமலிங்கம் B. SC.

---

## மீராபாய்

இவள் வைஷ்ணவ பக்தைகளில் சிகரம்போல் விளங்குபவள். கிருஷ்ணன்பால் அதிகமாகப் பக்தி கொண்டவள். மீராபாய் ரஜபுத்ர ஸ்திரீ. ஒரு ராஜாவின் மனைவி. அவளுக்கு ஐச்வர்யங்களிலும், மற்ற ராணிக்கு உகந்த தான படாடோபங்களிலும் நாட்டம் இல்லை. சிறு வயதிலேயே ஸ்ரீ கிருஷ்ணனிடம் மனம் லயித்துவிட்டாள். விவாஹம் ஆனபிறகும் அவளுக்கு எப்பொழுதும் ஸ்ரீ கிருஷ்ண நாமத்தின் பேரின்பத்திலேயேதான் மனம் சென்றது. மனது அந்த சுந்தரமூர்த்தியிடம், பறிகொடுக்கப்பட்டது என்றால் மிகையாகாது.

மீராவின் பஜனை புராதன ஹிந்தி பாஷையில் உள்ளது. முக்யமாக பதாவளீ என்று சொல்லப்படும் அவைகள், நாயக, நாயிகா பாவங்களில் உள்ளவை. ஸ்ரீ கிருஷ்ணனை உபாஸனை பண்ணினாலும், ஸ்ரீராம ஸ்வரூபத்தையும் ஆச்ரயித்தாள். தன்னை நாயிகையாகவும், பகவானை நாயகனாகவும் கல்பனை செய்துகொண்டாள். அவன் தர்சனம் இல்லாவிடில் ஸுகம் ஏது என்று சொல்லியிருக்கிறாள்.



“चरण कमल की लगनि लगोनित बिन दरसन दुख पावै”

உன்னுடைய பாத கமலங்களின் தர்சனம் கிடைக்காவிடில் துக்கம் உண்டாகும் என்கிறாள். ஸதா ஸர்வ காலமும் ஈசுவர நாம பஜனையில் ஈடுபட்டு, உலகத்தின் ஆசைகளை உதறித் தள்ளிவிட்டு ஒரு பைத்யம் போல் ஆகிவிட்டாள். பதாவளியில் ஸ்ரீ கிருஷ்ணன் தன்னுடையவன், தனக்குத் தான் சொந்தம் என்று பலமுறை கூறியிருக்கிறாள்.

“मीरा के प्रभु गिरिधर नागर”

(மீராவின் ஸ்வாமி கோவர்த்தனதாரி ஸ்ரீ கிருஷ்ணனே) என்கிறாள். இந்த நாயக நாயிகா பாவனையில், பொதுவாக ஸதிபதிகளிடையில் உள்ள கோபதாபங்கள், சண்டை சச்சரவுகளும் இடம் பெறுகின்றன. ஸ்ரீ கிருஷ்ணன் தன்னிடம் கோபம் கொண்டுள்ளான், ஆகையால் தன்னிடம் பேசுவதில்லை, கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை என்று எண்ணுகிறாள்.

“तनक हरि। चितवौ जी मेरी ओर।
हम चितवत तुम चितवत नाहिं, दिल के बडे कठोर ॥

“எப்பொழுதும் உன்னுடைய திருஷ்டியில் நான் இருக்கிறேன். ஆனால் நீ என் திருஷ்டியில் இருக்கவில்லை, ஏனென்றால் உன்னுடைய மனது கல்” என்கிறாள்.

ஸ்ரீ தியாகராஜருக்கு ஏற்பட்டமாதிரி மீராவிற்கும் பல இன்னல்கள் ஏற்பட்டன. அவள் புருஷன் ராஜா (ராணாஜீ) தன் மனைவி இப்படி எப்பொழுதும் ஈச்வர பயித்தியமாக இருப்பதைக்கண்டு, மனம் நொந்து அவளைக் கொல்ல ஒரு கிண்ணத்தில் விஷத்தை அனுப்புகிறார். அதை ஈச்வரார்ப்பணம் என்று நினைத்துக் குடித்து விடுகிறாள். அவள் சாகவில்லை.


199636

विप (रा) प्याला राणो जी भेज्या ... ...

विष को प्यालो पी गई, भजन करे ... ...

... ... ... .... ... म्हांरी राखणहारो ।

"விஷம் உள்ள கிண்ணத்தை ராணா அவர்கள் அனுப்பினார். விஷத்தைக் குடித்தேன். பஜனை செய்தேன். நீதான் என்னை ரக்ஷித்தாய்" என்று ஸ்ரீ கிருஷ்ணனின் புகழைப் பாடுகிறாள்.

மீராவிற்கு எந்தப் பொருளும் ஸ்ரீ கிருஷ்ணமயம். அவனைத்தவிர வேறொன்றும் அவள் கண்ணுக்குப் புலப் படாது. எல்லாவற்றையும் ஸ்ரீ கிருஷ்ணனாக பார்க்கிறாள்.

"इन नैनन मेरा साहिब बसत ।"

"என் கண்களில் என் ஸ்வாமி வசிக்கிறான். ஆகையால் நான் கண்களை மூடுவதில்லை." அதாவது தூங்குவதில்லை என்று பொருள் கொள்ளலாம். மறை பொருளாக மீரா ஸம்ஸாரத்திலிருந்து விழிப்புக்கொண்டவள் என்றும் சொல்லலாம். தன்னை ஸ்ரீ கிருஷ்ணனின் அடிமை என்றும், அவனைப்பார்க்காவிடில் மனதிற்குச் சாந்தி இல்லை என்றும் அடிக்கடி கூறியுள்ளாள்.

"चरण कंवल की दासी" – "तुम बिन कलन पड़त" –

"नन्द नन्दन दृष्टि पड़भे ।

भाई, तब से परलोक लोक कछू न सो हाई' –

நந்தகுமாரரின் கருணைகடாக்ஷம் பட்டால், எனக்கு இந்த லோகமும் பரலோகமும் பிடிக்கவில்லை என்கிறாள். இதைத் தான் ஆழ்வாராதிகள் "இந்திரபோகமும் வேண்டேன்" என்று பாசுரங்களில் பாடியிருக்கிறார்கள்.

சிலசமயங்களில் மீரா ஸ்ரீ கிருஷ்ணனைக் காண்பதற்கு முடியாமல்போகும்போது, அவனைப் பார்க்க ஆதுரம் கொண்டவளாக, மிகவும் விசனப்பட்டிருக்கிறாள். அப்பொழுது அவள் தன்னையே "विरहिणी" (தன் பர்த்தாவிடமிருந்து பிரிக்கப்பட்டவள்) என்று சொல்கிறாள்.



அவளுடைய நாயகன் ஸ்ரீ கிருஷ்ணனைக் காணாமல் மனம் உடைந்துவிடுகிறது.

"मैं विरहिण बैठी जागूँ

जगत सब सोवै री आली ।

तारा गिण गिण रैण बिहानी ... ॥

இதில் "விரஹாவஸ்தை" நன்றாகக் காட்டப்படு கிறது. ஒருவள் தன் நாயகன் வரவை ஆவலுடன் எதிர் பார்ப்பதைப்போல மீரா ஸ்ரீ கிருஷ்ணனாகிய நாயகனின் வரவை வழிமேல் விழி வைத்து எதிர்பார்க்கிறாள். நான் விரஹிணியாக உட்கார்ந்துகொண்டு, (உலகம் தூங்கும் பொழுது) தூங்காமல் இருக்கிறேன். ராத்திரி முழுவதும், நக்ஷத்திரங்களை எண்ணிக்கொண்டிருக்கிறேன்" என்கிறாள். அதோடு தான் ஸ்ரீகிருஷ்ணனைக் காணாவிடில், ஜலத்திலிருந்து கரையில் போடப்பட்ட மீன் போல் துடிப்பதாக சொல்லியிருக்கிறாள்.

"मैं हरि बिन क्यूँ जिवूँ री माइ ... ।

मीन जल के बीछुरे तन तलफि के मर माइ ।

அவளுக்கு எப்பொழுதும் ஸ்ரீ கிருஷ்ணனின் மதுரமான புல்லாங்குழல் இசை கேட்டுக்கொண்டிருக்கும்.

"पिव ढूँढण बन बन गई, कहुँ मुरली धुनि पाई ।"

எல்லா வித்யைகளுக்கும், அல்லது கார்யங்கள் ஸித்தி பெறுவதற்கும் வழிகாட்டியாக குரு வேண்டும். ஆகையால் மீரா நல்ல குருவைத் தேடி அவரிடம் உபதேசம் பெற்று தீர்த்தயாத்ரை சென்று கடைசியில் அந்த நந்தகுமாரிடம் ஒன்றாகக் கலக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறாள்.

"भव सागर सब सूखि गयो है ... ।

आस वही गुर सरनन की ॥

"இந்த ஸம்ஸாரஸாகரம் வற்றிப்போய்விட்டது. குருவின் சரணங்களில்தான் என் நாட்டம்" என்கிறாள்.

ஸ்ரீ தியாகராஜரும் மீராவும், பக்தி ஸாகரத்தில் மூழ்கி, ஈசுவரஸாயுஜ்யம் அடைந்தவர்கள்.

உ
ஸ்ரீ குருப்யோ நமஃ

# கேனோபநிஷத்

(ஓர் நாடகம்)

[V. S. மணி அய்யர், கிருஷ்ணபுரம்]

---

## நாடக பாத்திரங்கள்

1. **ஜைமினி :—** ஒரு மஹாரிஷி. இமயமலைச்சாரலில் ஸரஸ்வதீ நதிக்கரையில் ஆசிரமம் அமைத்துக் கொண்டு பக்குவம் அடைந்த சீடர்களுக்கு பிரஹ்ம ஞானத்தை உபதேசிப்பவர். பிரஹ்ம நிஷ்டர். ஸாமவேதி.

2. **தலவகாரர்**
3. **கௌதமர்** — பிரஹ்மசாரிகள். குருகுலவாஸம் செய்து, ஞான உபதேசம்பெறும் சிஷ்யர்கள்.

4. **உமாதேவி :—** ஸ்ரீ பராசக்தி—ஸ்ரீ பரமேசுவரின் பத்தினீ.

5. **யக்ஷன் :—** ஒரு பயங்கரமான பூதம்.

6. **இந்திரன் :—** தேவர்களின் அரசன். அமராவதி காவலன்.

7. **வாயு**
8. **அக்னி** — தேவர்கள்.

9. **ஸூத்திரதாரன் :—** நாடகத்தை அறிமுகம் செய்பவன்.

இன்னும் ஆசிரமவாஸிகள், தேவர்கள், மான்குட்டிகள், கன்றுகள், மயில்கள், குயில்கள், கிளிகள் முதலியன.

நிகழும் இடம் :— இமயமலைப் பிராந்தியம்.



## அங்கம் 1.

### காட்சி 1.

[குருவந்தனம் திரைக்குள்ளே வாத்திய இசையுடன் நடக்கிறது. அதற்குப்பின் ஸூத்திரதாரன் பிரவேசம்.]

**“ஶ்ருதிஸ்ம்ருதிபுராணானும் ஆலயம் கருணாலயம்**
**நமாமி பகவத்பாதஶங்கரம் லோகஶங்கரம்”**

**ஸூத்திரதாரன் :—** மெய்யன்பர்களே! நமஸ்காரம். நாங்கள் நினைத்ததற்கு மேலாகவே பெரியோர்கள் குழுமி இருக்கிறீர்கள். சரித்திர, புராண, இதிஹாஸ, ஸமூக ஸம்பந்தமான கதைகளைத்தான் மஹா ஜனங்கள் ரஸிப்பார்கள்; வேதாந்த விஷயங்களில் சிரத்தை இராது என்ற தப்பெண்ணம் அடியோடு மாய்க்கப்பட்டுவிட்டது.

அறிஞர்களே! நாங்கள் நடத்தும் இச்சிறு நாடகத்தைக்கண்டு களித்து எங்களுக்கு ஆசி வழங்குங்கள். மேன்மேலும் இத்தகைய பணியில் ஈடுபட உற்சாகம் ஊட்டுங்கள். இப்பிரபஞ்ச வாழ்க்கையில் நாம் எல்லோரும் இன்பம் தேடி அலைகிறோம். “சுகம் எங்கே? எதில்? எப்போது? எப்படி” என்றே ஒவ்வொரு ஜீவனும் ஓடிக் கொண்டிருக்கிறான். தன்னுடைய நிழலைத் தானே பிடிக்க முயலும் குழந்தையைப்போலே, முயற்சியில் படுதோல்வி யுற்று ஏமாற்றம் அடைகிறோம்.

எல்லாம் அறிந்த ஞானவான்களே! உண்மையான இன்பம் பிரஹ்மத்தை அறிவதிலேயே இருக்கிறது. ‘கெட்டுப்போன பிரஹ்மத்தை கேனத்தில் தேடு’ என்பது பழமொழி. முக்கியமான பத்து உபநிஷத்துக்களிலும் மிகவும் சுருக்கமாக இருந்தாலும், பிரஹ்மஞானத்தை உள்ளங்கை நெல்லிக்கனியென காட்டித்தரவல்லது இந்த கேனோபநிஷத். ஆகையினால் ஸ்ரீ சிருங்ககிரி மஹா ஸன்னிதானத்தின் ஆசீர்வாதத்துடனும், தங்களுடைய அன்புடனும் இந்நாடகத்தைச் சமர்ப்பிக்கிறோம். குற்றம் நீக்கிக் குணம்நாடிக் குசலமாயிருக்க அருளவேண்டும்,

இதோ நாடகம் ஆரம்பமாகிறது. (திரை விலகுகிறது) ஆம்! உங்கள் அஞ்ஞானத் திரையும்தான் — ஜாக்கிரதை யுடன், விழிப்புடன், நன்கு கவனியுங்கள். லாபம் உங்களுக்கே!

[திரை தூக்கப்பட, ஆசிரமக் காட்சி தென்படுகிறது. இமயமலைச்சாரலில், ஸரஸ்வதீ நதிக்கரையில் பெரிய ஆசிரமம். காலை நேரம். உள்ளே வேதகோஷங்கள் செவிக்கு விருந்தளிக்கின்றன. ஆசிரமவாசிகள் பரபரப்பு இல்லாமல் அங்கும் இங்கும் சென்று தங்கள் தங்கள் காரியங்களைக் கவனிக்கின்றனர். வெளியே ஒரு பெரிய ஆலமரத்தின் அடியில் ஜைமினி மஹரிஷி பத்மாஸனம் போட்டுக்கொண்டு, மான் தோலில் கம்பீரமாக வீற்றிருக்கிறார். அவருக்கு இருமருங்கிலும் சிஷ்யர்கள் நிற்கின்றனர். ஒருபுறத்தில் ஹோமம் நடக்கிறது. எங்கும் சாந்தி நிலவுகிறது. மயில் ஆட, கிளிப்பேச்சுத் தாளம் போட, கோகிலம் இன்னிசை பாடுகிறது. பாட்டில் மனதைப் பறிகொடுத்த மான்குட்டிகள், பசுங்கன்றுகள் வந்து தம் பக்கத்தில் நிற்பதைக் கவனிக்கவில்லை. வேதாந்த பாடம் கேட்டு நெட்டுருப்பண்ணிய ஒரு சுகம் தன் காதலிக்கு அதைச் சொல்லித்தருகிறது.]

(எல்லோரும் சேர்ந்து மங்களாசரணம் செய்கின்றனர்)

"ஓம்! ப்ரஹ்மம் எம்மைக் (குருவையும் சீடர்களையும்) காத்து ரட்சிப்பதாக! நாம் பேரின்பத்தை நுகர அருள்புரிவதாக! நாங்கள் சேர்ந்து ஒற்றுமையுடன் (பிரஹ்மத்தை அறிய) முயலுவோமாக! எமது கல்வி தேஜஸ்ஸுடன் விளங்குவதாக! நாம் எப்போதும் ஒருவருக்கொருவர் த்வேஷம் இல்லாமல் இருப்போமாக!

நாம், ஆத்யாத்மிக, ஆதிபௌதிக, ஆதிதைவிக அரிஷ்டங்களிலிருந்து விடுபட்டு சாந்தி அடைவோமாக! அமைதியும் இன்பமும் மூவுலகத்திலும் பெருகட்டும்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஓம்! என்னுடைய எல்லா அவயவங்களும், வாக்கு, பிராணன், கண், காது மற்றும் எல்லாப் புலன்களும், பலமும் நல்ல திறமையும் பெற்று இயங்குவனவாக. எல்லாம்



உபநிஷத்தில் விளங்கும் பிரஹ்மமே. நான் பிரஹ்மத்தை விட்டு நீங்கலாகாது. பிரஹ்மமும் என்னைவிட்டு நீங்கலாகாது. அதை ஒருநாளும் நான் நிராகரித்தல் கூடாது. இந்த உறவு விடாது நிலைபெறவேண்டும். இந்த உறவு நீங்காது இருக்கவேண்டும். ஆத்மாவில் மகிழ்ந்து வாழ்பவரின் உபநிஷத் தருமங்கள் எல்லாம் என்னிடத்தில் நிலைபெறட்டும். அந்தத் தருமங்கள் என்னிடத்தில் நிலைபெற்று விளங்கவேண்டும்.

ஓம்! சாந்தி! சாந்தி! சாந்தி!

[மங்களாசரணம் முடிந்தபின் சீடர்கள் குருவுக்கு "அபிவாதயே — அஸ்மி போ:" என்று வணக்கம் செலுத்துகிறார்கள். குருவும் அவர்களை, "தீர்க்காயுஷ்மான் பவ ஸௌம்ய" என்று ஆசீர்வதிக்கிறார். பின்பு குருவின் அனுமதியுடன் சீடர்கள் உட்காருகிறார்கள்.]

**ஜைமினி :—** குழந்தைகளே! உங்களுக்கு ஸகல மங்களங்களும் உண்டாகட்டும். பாடம் துவக்குவோம். வத்ஸா கௌதமா, முதல் பிரச்னம் நீயே கேள்.

**கௌதமர் :—** ஸ்வாமி, நேற்றையப் பாடங்களைச் சிந்தித்ததில் சரியாக விளங்கவில்லை. என் மனம் எவனால் தூண்டப்பட்டு விஷயங்களில் பிரவேசிக்கிறது? எனக்கு இஷ்டமில்லாமலிருந்தாலும்கூட எவனாலோ விரும்பப்பட்டும் ஏவப்பட்டும் என் மனம் இயங்குகிறதே; அவன் யார்? எவனால் ஏவப்பட்டுப் பிராணன் தன் தொழிலை செய்கிறது. நான் அயர்ந்து தூங்கும்போதும் என் பிராணன் தன் வேலையை ஒழுங்காகச் செய்கிறதே! அதன் நியாமகன் யார்? எந்தத் தெய்வம் கண்ணையும் காதையும் ஏவுகிறது? எவனால் தூண்டப்பட்டு நாக்குப் பேசுகிறது? எவனால் உயிர்ப்பிக்கப்பட்ட வாக்குகளை நாம் பேசுகிறோம்? எவனால் தூண்டப்பட்டு ஜனங்கள் இம்மாதிரி பேசுகிறார்கள்? இப்போது நடக்கும் ஸம்பாஷணைக்குக் காரணம்தான் எவன்? எவனுடைய ஆக்ஞையால் ஏவப்பட்டு நாம் தொழில்படுகிறோம்? இதைக் கொஞ்சம் விவரமாக விளக்கமாகக் கூற வேண்டுகிறேன்.

**ஜைமினி :**—அப்பா ! குழந்தாய் ! உன் பிரச்னம் ஸாதுவானது. நன்று, மிகவும் நன்று. சுருங்கச்சொல்லி விளங்க வைக்கிறேன். கேள்.

*செவிக்குச் செவியாகவும், மனத்துக்கு மனதாகவும், சொல்லுக்குச் சொல்லாகவும், உள்ளதுவே, பிராணனுக்குப் பிராணனாயும் கண்ணுக்குக் கண்ணாகவும் இருக்கிறது. அதை அறிந்த தீரர்கள் எல்லாப் பற்றுக்களையும் இங்கேயே ஒழித்து, இந்த உலகத்தைவிட்டு, அமரத்தன்மை எய்துகின்றனர்.*

காதின் சக்திக்குக் காரண சைதன்யமாயும், மனசுக்கும் புத்திக்கும் வாக்குக்கும் நியாமகனாயும், இருப்பது பிரஹ்மமே. அதுவே கண்ணுக்குக் கண்ணாயும், பிராணனுக்குப் பிராணனாயும் நாக்குக்கு நாக்காகவும் விளங்குகிறது. அதுவே அவைகளைச் செயல்பட தூண்டுகிறது. கண் காது முதலிய அழியும் புலன்களில் ஆத்மபுத்தியை விட்டு — அந்த இந்திரியங்களின் உள்ளுறையும் நித்தியமான சைதன்யம் ஆத்மா என்று கண்டவர்கள் மரணத்தை வெல்லுகிறார்கள் ; சாகாத்தன்மையை அடைகின்றனர். அங்கே கண் எட்டாது ; வாக்குச் செல்லாது. மனமும் போகமுடியாது. அதை நாம் உள்ளபடி அறியமாட்டோம். ஆகவே அதைப்பற்றி உபதேசிக்கவும் தெரியவில்லை. எங்கள் பூர்வாசாரியர்களும், "அது அறிந்த பொருளைவிட வேறு ; அறியாத பொருளையும்விட அப்பாற்பட்டது" என்றுதான் சொல்லிப் போந்தார்கள். அது தன்னால் தானே விளங்கிநிற்கும். கண்ணால் பார்க்கமுடியாது. ஏனெனில் கண்ணுக்கு வெளி உருவங்களைக் காணும் சக்தியைக் கொடுப்பது அதுவேயல்லவா ? அப்படியேதான் காதும் பிரஹ்மத்தினிடமிருந்து பிச்சை வாங்கித்தான் பிழைக்கிறது. அதுபோலவே ஏனைய எல்லா இந்திரியங்களும் பிரஹ்மத்தினிடமிருந்து சக்தி பெற்றுத்தான் இயங்குகின்றன, செயல்படுகின்றன. ஆகையினால்தான் அவைகளால் பிரஹ்மத்தை அறியமுடியவில்லை.



**தலவகாரர் :**—பூஜ்ய குருவே ! விளங்குகிறது. மேலும் சொல்லுங்கள்.

**கௌதமர் :**—ஆனால் ஒரு ஸந்தேஹம் ஸ்வாமி ! மனஸுக்குமா பிரஹ்மம் எட்டாது ? மனம் வீர்யம் நிறைந்ததல்லவா ! அது மற்ற இந்திரியங்களைவிடப் பன்மடங்கு சக்தியுள்ளதல்லவா !

**ஜைமினி :**—குழந்தாய் ! அது மனதுக்கு எட்டாததுதான். பிரஹ்மம்தானே மனதுக்கு ஆக்ஞையிடும் அதிஷ்டான சக்தி. மனது ஜடம்தானே. அதனால் பிரஹ்மத்தை எப்படி அறியமுடியும் ? மனஸ்ஸாம்ராஜ்யத்தின் மன்னன் பிரஹ்மம். இந்திரியங்கள் வேலையாட்கள். மனம் தளபதி. புத்தி மந்திரி. பிரஹ்மத்தின் ஆக்ஞையால்தான் புலன்கள் தொழில்படுகின்றன. ஆகையினால் புலன்களால் பிரஹ்மத்தைப் பார்க்கமுடியாது. அறிய முடியாது.

**தலவகாரர் :**—அப்படியானால் பிரஹ்மத்தை அறிய வழியே கிடையாதா ? அருளவேண்டும் ஸ்வாமி !

**ஜைமினி :**—பிரஹ்மத்தை ஒருவாறு ஸமாதியில்தான் அறிந்துகொள்ள முடியும். தர்க்கத்தினாலும் அதிகக் கல்வியினாலும் அறியமுடியாது. எதைச் சொல்லால் விளக்க முடியாதோ, ஆனால் எது சொல்லுக்கு விளக்கம் கொடுக்கிறதோ அதுவே பிரஹ்மம் என்று அறிவாயாக. எதை ஒருவன் மனத்தால் உணருவதில்லையோ, ஆனால் மனம் எதனால் உணரப்பெறுகிறதோ அதுவே பிரஹ்மம் என்று நீ உணர்ந்துகொள். எதைக் கண்ணால் பார்ப்பதில்லையோ, ஆனால் கண்களை எதனால் பார்க்கிறானோ, அதுவே பிரஹ்மம் என்று நீ அறி. எதைச் செவியால் கேட்பதில்லையோ, ஆனால் காது எதனால் கேட்பதாகிறதோ, அதுவே பிரஹ்மம் என்று நீ அறிந்துகொள். எதை நாசியால் முகர்வதில்லையோ, ஆனால் மூக்கு எதனால் முகரப்படுகிறதோ அதுவே பிரஹ்மம் என்று நீ அறிவாய். இதுபோலவே மற்ற இந்திரியங்களுக்கும் அறிந்துகொள்வாயாக. எதை இங்கே 'இது பிரஹ்மம்' என்று உபாஸிக்கிறார்களோ அது பிரஹ்மம் அன்று. எதை நீ அறிந்துவிட்டதாக எண்ணு

S. K. ii-3.-5.

கிறாயோ அது ப்ரஹ்மம் அன்று; ஏனெனில் நீ அறிந்ததாய் எண்ணியவுடன் அது உன் மனசுக்கும் புத்திக்கும் எட்டி விடுகிறதே. ஆகவே அது ப்ரஹ்மம் ஆக முடியாதே. ஆகையால் அது ப்ரஹ்மம் அன்று.

**கௌதமர் :—** தாங்கள் சொன்னவை எல்லாம் ரொம்ப ஆச்சரியமாக இருக்கின்றன ஸ்வாமி! ப்ரஹ்மம் அறியாத பொருள்களுக்கும் அப்பாற்பட்டது என்று சொன்னீர்களே, அறியாத பொருள்களைப்பற்றித் தெரிந்துகொள்ள முடியுமா?

**ஜைமினி :—** வத்ஸா! உன் கேள்வியிலிருந்து நீ மிகவும் கவனமாய்க் கேட்பது தெரிகிறது. அறியாத பொருள்களைப் பற்றியும் தெரிந்துகொள்ளமுடியும். உதாஹரணமாக என் வயது உங்களுக்குத் தெரியாது. "வயது அறியோம்" என்று தெரியாத விஷயத்தை நீங்கள் அறிகிறீர்கள். அதுபோலவே அறியாத பொருள்களைப் பற்றியும் நாம் அறியமுடியும். அந்த ஞானத்துக்கும் அப்பாற்பட்டதுதான் பிரஹ்மம். அது அறிந்த பொருள்களை விட வேறு. நாம் அறிகிற நாமரூப குணமுள்ள பொருள்களை விட அது வேறு. அது உருவமும் அன்று, ஆனால் அருவமும் அன்று. உருவமுடைய பொருள்களிலிருந்து வேறுபட்டது. ஆனால் அருவத்துக்கும் அப்பாற்பட்டது. அது வ்யக்தமும் இல்லை; அவ்யக்தமும் இல்லை. அறியமுடியாதது. அறிந்த தாக நினைத்திடில் அது பிரஹ்மம் அன்று. பிரஹ்மத்தை அறிந்துவிட்டதாக எண்ணுவதே பிசகு.

குழந்தைகளே! மாத்யான்ஹிக காலம் நெருங்கி விட்டது. அனுஷ்டானத்திற்குச் செல்வோம் வாருங்கள்.

*[சீடர்கள் எழுந்து குருவை வணங்குகிறார்கள். எல்லோரும் சேர்ந்து]*

"ஸர்வம் பிரஹ்மமயம் — எல்லாம் பிரஹ்மமே
ஸத்சித் ஆனந்தம் — எல்லாம் இன்பமே
ஓம் பிரஹ்மம் ஓம் பிரஹ்மம் ஓம் பிரஹ்மம்!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!"

***(என்று பாடுகின்றனர்) — திரை விழுகிறது.***

(தொடரும்)

# அபிராமி அந்தாதி

## எழில் உதயம்

**[கி. வா. ஜகந்நாதன்]**

விநாயகப்பெருமானை வணங்கிய அபிராமிபட்டர் அபிராமி அந்தாதியைத் தொடங்குகிறார். தொடங்கும் போது அவர் தம் உள்ளத்தில் தேவியைத் தியானம் செய்கிறார். தேவியின் அங்க எழிலையும், திருவிளையாடல் களையும், அருட்பெருக்கையும், பிற பெருமைகளையும் விரிவாக நூறு பாடல்களால் பாடுவதாக எண்ணியே இந்த நூலைத் தொடங்கியிருக்கிறார். முதலில் எம்பெருமாட்டியின் அழகுப்பிழம்பை, சமுதாய சோபையை எண்ணிப்பார்க் கிறார். அவளுடைய திருமேனித் தேசு பொலிவுபெற்றுக் காட்சியளிக்கிறது. சூரியோதயம் ஆகும்பொழுது கீழ் வானம் வெளுத்துப் பிறகு ஒரே ஒளிப்பரப்புத் தோன்றுமே, அப்படி உள்ளம் முழுதும் பரவிய செஞ்சோதிப் பிழம்பு தோன்றுகிறது. ஆம்; அபிராமி அந்தாதியின் உதயத்திலே அம்பிகையின் செம்மேனிச் சுடரும் உதயமாகிறது.

அம்பிகையின் எழிலை எப்படிச் சொல்வது? இன்னபடி உள்ளது என்று சுட்டிக்காட்ட வொண்ணாத சோதி உரு வுடையவள் அவள். ஆனாலும் சொல்லவேண்டும் என்ற ஆர்வம் மீதூர்கின்றது. அதனால் உவமைகளின் வாயிலாகச் சொல்லத் தொடங்குகிறார்.

அம்பிகையின் உருவம் ஒரே சோதிமயம். முழுவதும் செவ்வண்ணச் சோதி. செம்மை என்பது நம் நாட்டில் உயிர்த்தன்மையையும், நிறைவையும், நேர்மையையும், அழகையும், சேர்த்தியால் உண்டாகும் சோபையையும் குறிக்கும் நிறம். அம்பிகை உயிருக்குயிராக, பரிபூரணப் பொருளாக, நேர்மையே உருவாக, அழகுக்கு ஒருவரும் ஒவ்வாதவளாக, நல்லவற்றைச் சேர்த்து அருள் வழங்கு பவளாக விளங்குகிறாள். அவளுடைய திருமேனிக்கு எதை உவமை சொல்வது?

நமக்குத் தெரிந்த சோதிப் பொருள்கள் மூன்று; அக்கினி, சந்திரன், சூரியன் என்பன அவை. அவற்றில் சிறந்தது சூரியன். அதனை உவமை கூறலாம் என்று தோன்றியது. ஆனால் சூரியன் பார்க்கக் கூசும் உருவமுடையவன் அல்லவா? அம்பிகையோ தன்னை உபாசிப்பவர்களின் அகக்கண்ணில் கூசுதலைப்போக்கும் எழிலுடன் காட்சி தருபவளாயிற்றே! கதிரவன் உதயமாகும்பொழுது எல்லோரும் காணும்படி இருப்பான். ஒளியும் எழிலும் பொருந்திய உதய சூரியனை உவமையாகச் சொல்லலாம். லலிதா ஸஹஸ்ரநாமத்திலும் அந்த உவமை உண்டு. "உத்யத்பானு ஸஹஸ்ராபா" என்று வருகிறதல்லவா!

இந்த எண்ணங்களின் முதிர்வாக அபிராமி அந்தாதியின் முதல் தொடர் உதயமாகிவிட்டது.

## உதிக்கின்ற செங்கதிர்.

* * *

உதயசூரியன் உலகின் இருளை ஓட்டுவதுபோல அம்பிகை அக்ஞான இருளை ஓட்டுகிறாள். சூரியன் உதயமானவுடன் நடுக்கத்தைத் தரும் பனி அகன்றுபோகிறது; அம்பிகையின் காட்சியினால் நடுக்கத்தைத் தரும் தாபத்திரயங்கள் ஒழிகின்றன. தாமரைகள் செங்கதிரவன் உதயமாகும்போது விரிகின்றன; அம்பிகையின் உதயத்தால், அன்பர்களின் இதயதாமரைகள் மலர்கின்றன. மக்கள் செஞ்சுடரோன் வந்தானென்று துயில்நீங்கி முயற்சியில் ஈடுபடுகிறார்கள்; அம்பிகையின் சமுதாய சோபையில் கலந்தவர்கள் தம்முடைய தாமஸகுணத்தினின்றும் நீங்கி விழித்துக்கொண்டு தம்முடைய தொழிலாகிய உபாஸனையைச் செய்கிறார்கள்.

இப்படிப் பலபடியாக விரிக்கும்படியாக அந்த உவமை அமைந்துவிடுகிறது. ஆனாலும் இங்கே முக்கியமாக அம்பிகையின் திருமேனி லாவண்யத்துக்கு உவமையாக நிற்கிறான் உதயசூரியன்.



உதயசூரியனாகிய உவமை பொருத்தந்தான். அம்பிகையின் உயர்வுக்கும் சோதிவடிவுக்கும் அது ஏற்றதாக அமைந்துவிட்டது. ஆனால் ... ... ...?

இங்கே ஓர் எண்ணம் குறுக்கிடுகிறது. சூரியன் வானத்தில் உலவுகிறான். நாம் வா என்றால் வருவதில்லை. போ என்றால் போவதில்லை. நம்முடைய விருப்பத்தையோ வெறுப்பையோ எண்ணி அவன் ஒன்றும் செய்வதில்லை. அம்பிகையோ அத்தகையவள் அல்ல. வானவருக்கும் ஏனையவருக்கும் எட்டாதவளாக இருந்தாலும் அடியவர்களுக்கு எப்போதும் அணிமையில் இருக்கிறாள். அவள் தன் உருவத்தைக் காட்டுவது அடியவர்களின் வணக்கத்தைப் பெறுவதற்காகவே. அவளை உபாஸகர்கள் எப்போதும் தலையால் பணிகிறார்கள். மங்கைமார் தம் உச்சியிலே திலகத்தைத் தாங்குகிறார்களே, அதுபோல இந்தச் செம்மையுருவமைந்த பிராட்டியை அன்பர்கள் முடியணியாக்குகிறார்கள். ஆகவே வணங்குவதற்குரியவளாக, அடியாரின் தலைக்கு அணியாக, அவர்களுக்கு அண்ணியவளாக, செந்நிறம் பூத்தவளாக இருக்கும் அவளுக்கு உச்சியிலே அணியும் திலகத்தை உவமை சொல்லலாமா?

## உச்சித் திலகம்.

* * *

திலகம் பொருத்தந்தான், ஆனால் அது வைத்துக்கொண்டால் சில நேரத்தில் அழிவதாயிற்றே. எட்டாத செம்மை உதய சூரியன் என்று சொன்னால், இது கரைந்து போகும் செம்மையாயிற்றே! கிடைக்கும் பொருளாய், அணியும் பொருளாய், மதிக்கும் பொருளாய், அழியாமல் உள்ள பொருளாய், செவ்வண்ணப் பொருளாய் இருப்பது ஏதேனும் உண்டானால், அதைச் சொல்லலாம்.

அப்படி ஒருபொருள் இருக்கிறதே! மாணிக்கம் என்னும் செம்மணி பெரியவர்களால் மதிக்கத்தக்க செம்பொருள் அல்லவா? ஞானிகள் மதிக்கும் எம்பிராட்டிக்கு

மணி நூலில் அறிவுடையவர்கள் மதித்துப் பாராட்டும் மாணிக்கத்தை உவமையாகச் சொல்வது பொருத்தமாக இருக்கும். பழம் புலவர்கள் அவளை "மாணிக்கவல்லி" என்று பாராட்டியிருக்கிறார்கள். ஆகவே மாணிக்கத்தை உவமை சொல்வதே பொருத்தம்.

**உணர்வுடையோர் மதிக்கின்ற மாணிக்கம்.**

* * *

இப்போது வேறு ஓர் யோசனை வந்து குறுக்கிடுகிறதே. மாணிக்கம் கைக்கு எட்டுவது; ஒளியுடையது; கரையாதது; எல்லாம் சரி, ஆனால் அது கடினமானதல்லவா ? அம்பிகை வன்மை உடையவள் அல்லவே! அவள் மென்மையே உள்ளமாகவும் உருவாகவும் படைத்தவள். லலிதா பரமேசுவரி என்ற பெயரே மென்மையைக் குறிப்பதல்லவா? மென்மையாகவும், கைக்கு எட்டுவதாகவும், உயர்வான பொருளாகவும், செவ்வண்ணம் உடையதாகவும் ஒன்று கிடைத்தால் அதைச் சொல்லலாம்.

மாதுளம்பூ இப்போது நினைவுக்கு வருகிறது. அது குளிர்ச்சியும் செம்மையும் மென்மையும் கொண்டதல்லவா ? அம்பிகையின் மென்மைக்கும் வண்ணத்துக்கும் ஏற்ற உவமைதான். "தாடிமீகுஸுமப்ரபா" என்று லலிதா ஸஹஸ்ரநாமமே சொல்லுகிறதே !

**மாதுளம் போது**

என்பதே பொருத்தம்.

* * *

உவமைகளுக்கு அப்பால் நிற்கும் பெருமாட்டி ஸ்ரீ மஹா திரிபுரசுந்தரி. உதய சூரியனும், உச்சித் திலகமும் மாணிக்கமும், மாதுளம் போதும் அவள் திருமேனி லாவண்யத்திற்கு ஏதோ ஒரு சிறிய அளவில்தான் ஒப்பாக நிற்பவை. அவற்றை உவமை சொல்லி, "அம்பிகைக்கு ஏற்ற உவமையைச் சொல்லிவிட்டோம்" என்று திருப்தி அடைந்துவிட முடிகிறதா ?



அம்பிகையின் உபாசகர்கள் கோடானுகோடி பேர்கள். சிவபிரான் முதலிய தேவர்களும் பிறரும் அவளுக்கு அடியவர்கள். எப்போதும் அவள் அருகிலிருந்து திருமகளும் கலைமகளும் சாமரை வீசிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி இருந்தும் அவர்கள் அப்பிராட்டியின் திருமேனிப் பேரழகு முற்றும் கண்டு மன நிறைவடைந்தார்களா? அதுதானில்லை.

மனம் அமைதியாக இருந்தபோது, அகந்தை யொழிந்து நின்றபோது, திருமகள் திரிபுரசுந்தரியைக் கண்கொண்டு பார்த்தாள். மின்னல் மின்னியதுபோல அப்பெருமாட்டியின் சோதித் திருமேனி தோன்றியது. ஒரு கணந்தான் அதைக் கண்டாள். பிறகு காணமுடியவில்லை. மின்னல் ஒருகணந்தானே தோற்றும்? "மின்னல் அடித்தாற்போல ஒருகணம் உன் உருவத்தைத் தரிசனம் செய்யச் செய்தாயே! அதனை என்றும் காணத்திருவருள் செய்யமாட்டாயா ?" என்று திருமகள் ஏங்கி நிற்கிறாள். தான் கண்ட மின்னற்கொடியனைய திருவுருவத்தைத் துதித்துக்கொண்டேயிருக்கிறாள்.

இப்படி ஒரு கற்பனைக் காட்சியை அபிராமிபட்டர் கண்டார். திருமகள் துதிக்கின்ற மின்னுக்கொடி போன்றவள் என்ற எண்ணம் வரவே,

**மலர்க்கமலை துதிக்கின்ற மின்கொடி**

என்று பாடினார்.

* * *

இதனாலும் அவர் நிறைவுபெறவில்லை. அம்பிகையின் உருவத்தை நன்றாகத் தியானித்தார். அவள் திருமேனிக்குக் காச்மீரத்துக் குங்குமப்பூவை உவமையாகச் சொல்லுவது வழக்கம். மூககவி ஆர்யா சதகத்தில் "காச்மீரஸ்தபக கோமலாங்கலதா" என்று பாடியிருக்கிறாரே. அதை நினைக்கிறார் அபிராமிபட்டர். அதற்கு மேலும் அவர் உள்ளம் விரிகிறது. அந்தக் குங்குமப்பூவைக் கடாரத்தில் பூரித்த அபிடேக தீர்த்தத்தில் நிறையக் கொட்டி அம்பிகைக்கு அபிஷேகம் செய்வார்கள். அந்த நீர்

சிவப்பாக இருக்கும். அம்பிகையின் திருமேனி முழுவதையும் ஆட்டும் வெண்ணை நீர் அது. மனத்தில் குங்கும தோயத்தால் அம்பிகையை ஆட்டினார். ஆ! அம்பிகை திருமேனி வெண்மையும் இந்தக் குங்கும வெண்ணை நீர் நிறமும் வேறுபாடு தெரியாமல் இருக்கின்றனவே. அம்பிகையின் திருமேனி முழுவதுமே பரவி நனைத்து அழகுபெற்று ஒளிர்கிறது இந்த நீர். இப்போது உபமான உபமேயங்கள் அருகருகே இருக்கின்றன. அவள் திருமேனியும் அத் திருமேனி முழுவதும் பரந்து படிந்த குங்குமதோயமும் ஒன்றற்கு ஒன்று இணைந்ததாக உள்ளன. இதுதான் சரியான உவமை என்று தோன்றுகிறது. மென்மையான மணமுள்ள குங்குமங் கரைத்த குழம்பு நீரைச் சொல்லி நிறைவு பெறலாம் என்று,

**மென்கடிக் குங்கும தோயம்**

என்று பாடினார்.

* * *

அப்படியும் திருப்தி உண்டாகவில்லை. இவ்வளவும் தனித்தனியே ஒவ்வொரு சிறப்பினால் அம்பிகையின் வண்ணமேனிக்கு உவமையாகின்றன. எல்லாவற்றையுமே சொல்லிவிடலாம் என்று தோன்றுகிறது. பெரியவர்கள் இந்தப் பொருள்களை உபமானமாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆதலால் இத்தனையையும் சொல்லி ஒருவாறு அம்பிகையின் சமுதாய சோபையைத் தியானிக்க வழிகோலலாம் என்று எண்ணி மேலேசொன்ன எல்லா உவமைகளையும் தொகுத்து வைத்தார்.

**உதிக்கின்ற செங்கதிர், உச்சித் திலகம்,**
**உணர்வுடையோர்**
**மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது,**
**மலர்க்கமலை**
**துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக் குங்கும**
**தோயம் — என்ன**
**விதிக்கின்ற மேனி அபிராமி என்றன்**
**விழுத்துணையே.**



ஒன்றை மூன்று முறை சொல்வதனால் உறுதி உண்டாகும். இங்கே ஒட்டிக்கு இரட்டியாக அம்பிகையின் திருமேனிக்குரிய உவமைகள் ஆறைச் சொல்லியிருக்கிறார் ஆசிரியர். அம்பிகையைப் பூசித்துத் தம் கையாலே அபிஷேகம் செய்கிறவர்களுக்குத்தான் கடைசி உவமையின் அருமை தெரியும். அந்த அருமையான பொருளை, உபாஸகர்களே உணரும் நுட்பப்பொருளை இறுதியிலே வைத்தார் அபிராமிபட்டர்.

"இப்படி நூல்களும் பெரியோரும் உபமானமாக வரையறைசெய்து வருணிக்கும் திருமேனியையுடைய அபிராமி என்னுடைய மேலான துணையாக இருக்கிறாள்" என்று முதற்பாட்டைப் பாடி நிறைவேற்றினார் பட்டர்.

உவமைகளைப்பற்றி விரிவாக ஆராய்ந்தோம். மற்றக் கருத்துக்களை இனிப் பார்ப்போம். (தொடரும்)

உ

# பராசக்தியின் கருணை

[மோ. ஸ்ரீ. செல்லம்]

ஈச்வரனுக்குச் சமமான சக்தியோடு கூடிய மாயையாக நின்று, பிரபஞ்சம் என்ற இந்தத் திருவிளையாடலை நடத்தி வருபவள் நம் தாயாகிய பராசக்தி. கேவல ஞானஸ்வரூபியான ஈச்வரனை அவரவர் தகுதிக்கு ஏற்றபடி அநுபவிக்கச் செய்யும் கருணாஸாகரமாக நிற்பவள் பராசக்தி. அளவற்ற ஞான ஒளியானது எல்லையற்ற மின்சாரம்போன்றது. ஏற்கும் கலத்தின் சக்திக்கு ஏற்ப இந்த மின்சக்தியின் வேகத்தை மாற்றிக்கொடுக்கும் டிரான்ஸ்பார்மர் (Transformer) போன்றவள் நம் தாய்.

'இறைவனது கருணையைப் பக்தர்களும் பக்குவிகளும் தாயின் மூலமாகவே பெறுவர். அவரவர் தகுதியை அறிந்து அந்தத் தகுதிக்கு ஏற்றபடி அருளை அளந்து கொடுத்து நம் தாய் பக்தர்களைக் காப்பாற்றுகிறாள்' என்பதுதான் அநுபவிகளின் நம்பிக்கை.

ஞானசம்பந்தப் பெருமானுக்கு இறையருளைப் பாலாக வாங்கி அருளியவள் பராசக்தியேயாகும். பாசுபதத்துக்காகத் தவம் செய்த அர்ச்சுனனுக்கு வேடச்சியாக நின்று இறையருளை வாங்கித் தந்தவளும் பராசக்தியே. கைலாய மலையைத் தூக்கிய ராவணனும் முதலில் பராசக்தியைத் தூண்டிவிட்டு அவள்மூலமாகவேதான் பெருமானின் அருளைப்பெற்றான்.

பிராட்டியோடு ஸம்பந்தப்படாத பெருமானிடம் அழிவுச் சக்தியே தோன்றும் என்பதையும், பிராட்டியோடு ஸம்பந்தப்பட்ட நிலையில் அருட்சக்தியே தோன்றும் என்பதையும் சில புராண இதிஹாஸ வரலாறுகள் நமக்குக் காட்டுகின்றன.

தக்ஷன் சிவபெருமானை விலக்கி யாகம் நடத்தினான். கைலையங்கிரியில் பிராட்டியோடு வீற்றிருந்த பெருமான் தக்ஷனது அவமதிப்பைப் பொருட்படுத்தவில்லை. பிராட்டி பெருமானைப் பிரிந்து யாகத்துக்குச் சென்று தந்தையின் அவமதிப்பைத் தாங்காமல் யோகசக்தியால் தீயை எழுப்பி அதில் உடலை தியாகம் செய்தாள். தனிப்பட்டு நின்ற பெருமானது சடையிலிருந்து தோன்றிய வீரபத்திரன் அழிவுச் சக்தியாகித் தக்ஷனது யாகசாலையில் கூடியிருந்தோரை எல்லாம் அழித்தார்.

ஸ்ரீ விஷ்ணுமூர்த்தியின் அவதாரமாகிய ஸ்ரீ ராமபிரான் ஸீதாபிராட்டி ஸமேதனாக வனவாஸம்செய்யும் ஸமயம் காகாசுரன் தேவிக்குச்செய்த அபசாரம் பின்னால் ராவணன் செய்த அபசாரத்தைவிடப் பன்மடங்கு கடுமையானது. ஆனாலும் கடைசியில் தர்ப்பையாலான அஸ்திரத்துக்குத் தப்ப வழியின்றிக் காகாசுரன் ராமன் காலில் விழுந்தபோது பிராட்டியின் சிபார்சினால்தான் உயிர் தப்பினான். பிராட்டியுடன் கூடியிருந்த ஸ்ரீ ராமனிடம் அப்போது கருணையே மிகுந்திருந்தது. ஆனால் ராவணன் மாரீசனது புத்திமதிக்குச் செவிசாய்க்காமல் பிராட்டியைப் பிரித்தான். அதன் பலனாகத் தனிப்பட்ட ஸ்ரீ ராமபிரானின் கோபத்துக்கு —



அழிப்புச் சக்திக்கு—ஆளாகிக் குலத்தோடு ராவணன் அழிந்தான். தக்ஷிணாமூர்த்தியாகப் பிராட்டியினின்றும் பிரிந்து நின்ற பெருமானைத் தாக்கிய மன்மதன் அவன் நெற்றிக்கண் நெருப்பால் எரிந்து சாம்பலானான். அடுத்த கணமே பிராட்டி ஸம்பந்தம் பெற்ற பெருமானது கருணை ரதிதேவியின் வேண்டுகோளுக்கு இணங்கி அவனை உயிர்ப்பித்துத் தந்தது.

எனவே பெருமானைக் கேவல ஞான நெருப்பாகவும் பிராட்டியைக் கருணை மேகமாகவும் கூறுவர். பெருந்தகுதி பெற்றவர்களுக்கே பயன்படக்கூடிய இறைவன் நிற்க, எத்தகைய தகுதி பெற்றோருக்கும் உதவும் தாயாகிய பராசக்தியின் விசேஷமான ஆராதனைக்கு உரிய நாட்கள் புரட்டாசி மாதத்தில் கொண்டாடும் நவராத்ரி என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

நவராத்திரி ஸமயம் தேவியை மூன்று அவஸரமாகத் தியானித்துப் பூஜிப்பார்கள். துர்க்கை, லக்ஷ்மி, ஸரஸ்வதி என்பதே இந்த மூன்று அவஸரம். வீரம், செல்வம், கல்வி என்ற மூன்றும் பூர்ண ஸம்பத்துக்கள் ஆகும். துர்க்கை வீர ஸம்பத்தைத் தரும் அவஸரம்; லக்ஷ்மி பொருள் ஸம்பத்தைத் தரும் அவஸரம்; ஸரஸ்வதி கல்விச் சம்பத்தைத் தரும் அவஸரம். மூன்றும் சேர்ந்த ராஜ ராஜேச்வரி ஞானத்தையும் மோக்ஷத்தையும் தருபவள். இப்படி இகம், பரம் இரண்டுக்கும் காரணமாகத் தேவியை நவராத்திரியில் வழிபடுவார்கள். பராசக்தியாகிய ராஜ ராஜேச்வரி இந்த ஒன்பது நாளும் கொலுவிருப்பதாகவும், மற்ற எல்லாத் தேவர்களும் அவரவர்களுக்கு உரிய ஸ்தானத்தில் கொலுவில் அமர்ந்து பராசக்தியைப் பெருமைப்படுத்துவதாகவும் நவராத்திரி அமைந்திருக்கிறது. நவராத்திரிக் கொலு என்பது இந்தத் தேவியின் கொலுவிருப்பையே குறிக்கும். இந்த ஒன்பது நாட்களையும் மும்மூன்றாகப் பிரித்து முறையே துர்க்கைக்கும், லக்ஷ்மிக்கும், ஸரஸ்வதிக்கும் உரியவை என்று பெரியோர்கள் கூறுவார்கள்.

இப்படி எல்லாச் சக்தியையும் தருவதற்குக் காரண மாகவும் பரமேச்வரனின் பிராண நாடியாகவும் இருக்கும் பராசக்தியைப் பல மகான்கள் பல்பலவிதமாகவெல்லாம் துதித்திருக்கிறார்கள். முருகப்பெருமான்மீது திருப்புகழ்களை யும், கந்தர் அலங்காரம், அநுபூதி, வகுப்பு, கலிவெண்பா முதலியவைகளையும் பாடி அருள்பெற்ற அருணகிரிநாதப் பெருமான் திருப்புகழ்ப் பாடல்களில் பல இடங்களில் தேவியைப்பற்றி மனமுருகப்பாடி அவள் பெற்ற 'முருகோனே' என்றும் 'குமரோனே' என்றும் முடித்திருக் கிறார். அத்தகைய ஓர் இடத்தை இங்கே பார்ப்போம்.

'**நாவேறு பாமணத்த** .........' என்று தொடங்கும் திருப்புகழில்,

"கார்போலும் மேனி பெற்ற மாகாளி வாலை சக்தி
காமாரி வாமி பெற்ற - பெருமானே"

என்பது கடைசி அடி.

'**கார்போலும் மேனி பெற்ற காளி**' என்பது கருமேகம் போன்ற ஒளிமிக்க நிறத்தைப் பெற்ற காளி என்று பொருள் படும். கார்மேகவண்ணன் என்று மகாவிஷ்ணுவைக் கூறுவது வழக்கம். கார்மேகவண்ணனாகிய இந்த மகா விஷ்ணுவையே சிவசக்தியாகக் கூறும் பழக்கமும் அவ்வாறே வழிபடும் பழக்கமும் இருக்கின்றன. எனவே வைஷ்ணவி யாகிய சக்தியையே இந்த அடி குறிக்கிறது என்று கொள்ளலாம். வைஷ்ணவியாகிய சக்தியோ ஸ்ரீ அல்லது லக்ஷ்மியைத் தன்னுள்ளே அடக்கிக்கொண்ட சக்தி. எனவே இந்த அடியில் கூறிய மாகாளி அல்லது மகாமாயை என்ற தொடர் சக்தியின் லக்ஷ்மி அவஸரத்தைக் குறிக்கிறது என்று நினைக்க இடமிருக்கிறது. லக்ஷ்மியை மகாகாளி (மகாமாயை) என்று சொல்வது உண்டு.

அடுத்தபடியாக நிற்கும் நாமம் '**வாலை**' என்பதாகும். வாலை என்பது பாலா த்ரிபுரசுந்தரி என்ற ஸ்ரீ வித்யைக்கு மூலகாரணமான சக்தியின் அவசரத்தைக் குறிக்கும். ஸ்ரீ வித்யைக்கு மூலகாரணமான சக்தி என்பதாலும் எல்லா



வித்யைகளுக்கும் மூலமானதும் முடிவானதும் ஸ்ரீ வித்யை யாதலாலும் இங்கே வாலை என்பதை எல்லா வித்யைகளுக் கும் தலைவியான ஸரஸ்வதியின் அவஸரத்தைக் குறிப்ப தாகக் கொள்வதில் தவறு ஒன்றும் இல்லை.

அடுத்தபடியான '**சக்தி**' என்பது வல்லமை, திறல், ஆற்றல் என்ற பொருள்பட்டு வீரத்தைக் குறிக்கும். எனவே வீரத்துக்கு அதிதேவதையாக நிற்கும் துர்க்கா அவஸரத்தைச் சக்தி என்ற இந்த நாமம் குறிக்கிறது. எனவே பராசக்தியின் மூன்று அவஸரங்களான லக்ஷ்மீ, ஸரஸ்வதி, துர்க்கை என்ற மூன்றும் மாகாளி, வாலை, சக்தி என்ற மூன்று நாமங்களாலும் குறிக்கப்பட்டன.

கடைசியாக இம்மூன்றும் ஒன்றாக நின்று கேவலம் ஞானத்தையே அருளி வாழ்விக்கும் ராஜராஜேச்வரியை, '**காமாரிவாமி**' என்ற தொடர் குறிக்கிறது. காமனுக்கு விரோதியான சிவபெருமானின் இடப்பாகத்தே நிற்பவள் என்பது இதன் பொருள்.

காமன் என்பது பால்காரணமான ஆசை ஒன்றை மட்டும் குறிப்பதன்று. 'ஸர்வ காமான்' என்ற இடத்தில் உள்ளதுபோல எல்லா ஆசைகளையுமே குறிக்கும் பதம் இது. எனவே காமாரி என்பது எல்லா ஆசைகளுக்கும் அப்பாற்பட்ட கேவல ஞானஸ்வரூபம் என்று ஆகும். திருவள்ளுவரும் ஆசைகளுக்கு அப்பாற்பட்டதே ஞான நிலை, ஆத்ம ஸாக்ஷாத்கார நிலை, பரப்பிரம்மநிலை, இயற்கை நிலை என்கிறார்.

"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்."

என்பது குறள்.

என்றும் தணியாத தன்மைகொண்ட ஆசை நீங்கினால் அந்த நிலையானது, என்றும் ஒரு மாறுதலும் இல்லாத நிலையாகிய இயற்கைநிலை (ஸாக்ஷாத்காரம்) யைத் தந்து விடும் என்பது இதன் பொருள்.

எனவே ஒருவன் இகத்தில் பெறவேண்டிய பொருள், கல்வி, வீரம் இவற்றைப் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்த பிறகு இந்த ஆசைகளை எல்லாம் அடியோடு ஒழிக்கும் ஞானப் பதத்தையும் காமாரியின் வாமியாக நின்று அளிக்கும் பராசக்தி — ராஜராஜேச்வரி என்பதே இந்த அடியின் பொருள். வாமியாவது இடப்புறத்தில் இருப்பவள்; அதாவது காமாரிக்கு இருதயமாக—மையமாக அவனையே இயக்கும் சக்தியாக இருப்பவள் என்பது பொருள்.

எனவே பராசக்தி தன்னை வழிபடுபவர்களுக்கு இகம், பரம் இரண்டையும் பரிபூர்ணமாக அருளும் கருணாநிதி. இந்த நவராத்ரியில் அவளை வழிபட்டுப் பெறுவாழ்வு பெறுவோமாக. அந்த அடியை இங்கே திரும்பவும் நினைவு படுத்திக்கொள்வோம்.

**"கார்போலும் மேனி பெற்ற மாகாளி வாலை சக்தி**
**காமாரி வாமி பெற்ற—பெருமானே"**

# வேதப்ராமாண்யம்

பேராசிரியர் M. K. **வெங்கடராம அய்யர்**

(முன் தொடர்ச்சி)

ஹீகல் (Hegel) என்பவர் கேவலம் புருஷபுத்தியையும் தர்க்கத்தையும் கருவிகளாகக்கொண்டு நிறுவிய சாஸ்திரத்தில் ஜீவனுக்கு இடமில்லையென்னும் தோஷத்தை எப்படி கீர்கிகார்டென்பவர் ஸ்பஷ்டமாக எடுத்துக்காட்டியிருக்கிறார் என்பதையும், அதைத்தவிர வேறு சில குறைகளை ஆங்கில தத்வ சிந்தனையாளரான ப்ராட்லி (Bradley) என்பவர் குறிப்பிட்டிருக்கிறார் என்பதையும் சென்ற இதழில் விவரித்தோம். இவ்விதழில் ப்ராட்லி குறிப்பிட்ட தோஷங்களை விவரித்துப் பின்னால் அவர் சொந்த அபிப்பிராயத்தைக் காட்டுவோம்.

தர்க்கரீதியாய் ஏதாவது ஒரு வஸ்துவின் ஸ்வரூபத்தை நிர்ணயிப்பதென்றால், ஸஜாதீயமான வஸ்துக்களுடனும் விஜாதீயமான பொருள்களுடனும் அதை ஒத்துப்பார்க்க



வேண்டியது மிகவும் அவசியம். எந்த வஸ்துவையும் ஒன்றுடனும் சேர்க்காமல் தனிப்பட்ட முறையில் பரிசீலனை செய்து தெரிந்துகொள்ள முடியாது. திருஷ்டாந்தமாக ஒரு பிராணியை 'இது குதிரை' என்று ஸந்தேஹமறத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், ஸஜாதீயமான கழுதை, கோவேறுகழுதை இவைகளுடன் அது சில அம்சங்களில் ஒத்திருப்பதையும், விஜாதீயமான ஆடு, மாடு இவைகளுடன் முற்றும் வேறுபட்டிருப்பதையும் கவனித்தால்தான் முடியும். ஒரு பொருளின் நிஜஸ்வரூபத்தை அறியவேண்டுமானால் அதனிடத்தில் என்ன குணாதிசயங்கள் இருக்கின்றன என்பதைக் கவனிப்பதுடன் அதனிடத்தில் என்ன குணங்கள் இல்லையென்பதையும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். இதை ஆங்கிலத்தில் "To know a thing is not only to know *what it is* but also to know *what it is not*" என்று சொல்லுவார்கள். பிரம்மத்தைத் தர்க்கரீதியாக அறியவேண்டுமானால் அதையும் இந்த நியாயத்திற்கு உட்படுத்தவேண்டும். ஆனால் '**एकमेवाद्वितीयम्**' என்ற உபநிஷத்து ஸஜாதீயமாகவோ விஜாதீயமாகவோ ப்ரஹ்மத்தைத் தவிர வேறு ஒரு பொருளும் கிடையாது என்று உபதேசிக்கிறது. ஆகையினால் பிரம்மத்தை வேறு ஸமான வஸ்துக்களுடன் ஒத்துப் பார்ப்பது என்பதையோ, வேறுபட்ட வஸ்துக்களிடத்திலிருந்து எப்படி வித்தியாசப்பட்டிருக்கிறது என்பதையோ தீர்மானிக்க இடமில்லை. பிரம்மம் வேறு எந்தப் பொருளுடனும் ஸம்பந்தப்படாமல் தனிமையான அந்தஸ்தில் நிற்கிறது. இந்த அர்த்தத்தில்தான் அதை நிர்க்குணமென்றும், நிர்விசேஷமென்றும், நிஷ்ப்ரபஞ்சமென்றும், அஸம்ஸ்ருஷ்டமென்றும் வேதாந்த சாஸ்திரத்தில் சொல்லுகிறார்கள். இந்த உண்மையை ப்ராட்லி ஒருவாறு அறிந்து பரம்பொருள் ஒன்றுடனும் ஸம்பந்தமற்றது (non-relational) என்று கூறுகிறார். அதாவது காரியகரண ஸங்காதம், ஞாத்ருஞேயம், கர்த்ருத்வ போக்த்ருத்வம் இவைபோன்ற பேதப்ரவாஹத்தில் அது விழுந்ததல்ல. எல்லாவிதமான த்வந்த்வங்களையும் அது கடந்தது.

எனவே பிரம்மம் நிர்த்வந்த்வமென்றால் அதர்க்யமென்பதும் ஏற்படுகிறது. ஒரு விஷயத்தைப்பற்றித் தர்க்கம் செய்வதென்றால் அது வேறு சில விஷயங்களுடன் எப்படி ஒத்திருக்கிறது, மற்றும் சில விஷயங்களுடன் எப்படி வித்தியாசப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுவதுதான். இதை ஆங்கிலத்தில் 'To bring together similar things and to keep apart dissimilar things is the function of reason' என்று சொல்லுவார்கள். ஆகையால் தர்க்கத்தின் வியாபாரம் ஸம்பந்தாஸம்பந்தமுள்ள ப்ரபஞ்சத்தில்தான். ஸம்பந்தரஹிதமான வஸ்துவினிடத்தில் தர்க்கம் செல்லாது. "Thought commits suicide at this stage" என்று ப்ராட்லி சொல்லுகிறார். மனித சரீரத்திற்கு எப்படி உணவு அவசியமோ அதேமாதிரி, தர்க்கத்திற்கு பேதப்ரபஞ்சமும், த்வந்த்வங்களும் இன்றியமையாதவை. உணவில்லையென்றால் எப்படி மனித சரீரம் க்ஷீணதசையையடைந்து கடைசியில் நசித்துவிடுமோ அப்படியே தர்க்கமும் பேதப்ரபஞ்சமில்லையென்றால் தானாகவே மறைந்துவிடும்.

எல்லாவிதமான பேதங்களையும் பிரம்மம் தாண்டி நிற்கிறதென்றால் அதைத் தர்க்க ரீதியாக அறியமுடியாது. இதை ஆங்கிலத்தில் "If the Absolute is supra-relational it must also be supra-rational" என்று சொல்லுவார்கள். ஆகையால் பிரம்மத்தை வேறு மார்க்கத்தில்தான் அறியவேண்டும். அது ஞாத்ருஞேயமென்னும் பேதமில்லாமல் அகண்ட அனுபூதியாக இருக்கவேண்டும். இதை உணர்ச்சி ப்ரவாஹம் (Feeling) என்று ப்ராட்லி சொல்லுகிறார். உணர்ச்சியில் இரண்டுவிதம் உண்டு. ஒன்று எல்லா ஞானத்திற்கும் ஆதாரமாகிய நிர்விகல்பக ப்ரத்யக்ஷமென்பது. மற்றொன்று ஸவிகல்பக ப்ரத்யக்ஷத்தில் அடையும் ஞானத்தை ச்ரவண, மனன, நிதித்யாஸனங்களுள் பக்குவப்படுத்தி இறுதியிலடையும் விஞ்ஞானமென்பது. ஸாதாரண ஞானம் பரோக்ஷம், இது அபரோக்ஷம். இதை ஆங்கிலத்தில் 'Intuition' அல்லது 'Communion' என்று சொல்லுவார்கள். (தொடரும்)

॥ श्रीः ॥

# ॥ श्रीस्वयंवरापार्वतीमन्त्रमालास्तोत्रम् ॥

# *ஸ்ரீஸ்வயம்வரா பார்வதீ மந்த்ரமாலா ஸ்தோத்ரம்

(துர்வாஸமுனிவர் இயற்றியது)

---

बन्धूकवर्णामरुणां सुगात्रीं शम्भुं समुद्दिश्य शनैरुपेताम् ।
अम्भोजमृद्वीमभिलाषदात्रीं सम्भावये निर्जरदारुकल्पाम् ॥ १ ॥

பந்தூக வர்ணா மருணாம் ஸுகாத்ராம்
ஶம்பும் ஸமுத்திஶ்ய ஶனைருபேதாம்।
அம்போஜம்ருத்வீமபிலாஷதாத்ரீம்
ஸம்பாவயே நிர்ஜரதாருகல்பாம் ॥

பந்தூகம் என்ற புஷ்பம் போன்ற நிறமுள்ளவளும், அழகிய உடலமைப்புக் கொண்டவளும், பரமசிவனைக் குறித்து மெதுவாகச் செல்லுகிறவளும், தாமரைப் புஷ்பம் போல் மென்மையானவளும் (தன்னை அண்டியவர்களின்) கோரிக்கைகளைக் கொடுப்பவளும் (அதனால்) தேவலோகத்திலிருக்கும் கல்பகவிருக்ஷம் போன்றவளுமான அருணாஎன்ற பெயர் கொண்ட செந்நிறமே உருக்கொண்ட அம்பிகையை தியானிக்கிறேன். (1)

ह्रीमन्थराणि चरणाग्रगतिप्रपाते-
व्यामञ्जुसंक्वणितकङ्कणकिङ्किणीनि ।

---

* இந்த ஸ்தோத்திரத்தில் 2 முதல் 46 வரை ஒவ்வொரு சுலோகத்தின் முதல் அக்ஷரத்தையும் சேர்த்து வாசித்தால் ஸ்வயம்வரா பார்வதீ மஹா மந்திரம் காணப்படும். துர்வாஸ முனிவரால் செய்யப்பட்டது என்று கண்டிருக்கும் இந்த ஸ்தோத்திரத்தைப் பாராயணம் செய்வதால் விசேஷ நன்மைகள் ஸித்திப்பதோடு கன்னிகைகள் நல்ல வரனையடைந்து சிறப்பாக இல்வாழ்க்கை நடத்துவார்கள்.

कामं कुमारि! तव तानि शिवे! स्मरामि
क्षेमङ्कराणि जनकालयखेलनानि ॥ २ ॥

ஹ்ரீமந்தராணி சரணத்ரகதி ப்ரபதே-
ஷ்வாமஞ்ஜு ஸம்க்வணித கங்கண கிங்கிணீனி।
காமம் குமாரி தவ தானி சிவே ஸ்மராமி
க்ஷேமங்கராணி ஜநகாலய கேலநானி ॥

மங்களத்தைக் கொடுக்கும் குமாரியான ஹே பார்வதி! நீ நடக்கும்பொழுது கால் நுனியை எடுத்துவைப்பதால் லேசாகவும் அழகாகவும் காப்பும் பாதஸரமும் ஒலிக்கும்படி லஜ்ஜையால் மெதுவாக நீ உன் பிதாவின் கிருஹத்தில் (இமயமலையில்) நடத்திய விளையாட்டுக்கள் எல்லோருக்கும் மங்களத்தைக் கொடுப்பவை. அவைகளை தியானம் செய்கிறேன். (2)

योगेन बाल्यवयसो ललितां पुरस्तात्
द्रागेव कण्ठविलसत्कनकोर्मिकौघाम् ।
आकम्रनद्धरशनां भवतीं निरीक्षे
श्रीकण्ठभामिनि कदा प्रपदीनवेणीम् ॥ ३ ॥

யோகேந பால்ய வயஸோ லலிதாம் புரஸ்தாத்
த்ராகேவ கண்டவிலஸத் கனகோர்மிகௌகாம்।
ஆகம்ர நத்த ரசனாம் பவதீம் நிரீக்ஷே
ஸ்ரீகண்டபாமிநி கதா ப்ரபதீனவேணீம் ॥

ஸ்ரீ கண்டனின் நாயகியான பார்வதி! பால்யப் பருவத்தின் சேர்க்கையால் மிக அழகுவாய்ந்ததும், கழுத்தில் விளங்கும் தங்க ஆபரணங்களால் சோபிக்கிறதும் இடுப்பில் கட்டப்பட்ட அழகிய ஒட்டியாணமுள்ளதும் கால் நுனிவரை தொங்குகிற தலைப்பின்னலுள்ளதுமான உன் ஸ்வரூபத்தை நான் எப்பொழுது நேரில் தர்சனம் செய்வேன்? (3)

(தொடரும்)

# ஸ்ரீ குருக்ருபா விலாஸம்

## (13)

### (அருள் தீக்ஷை)

[சில மஹநீயர்களுக்கு அண்டினவர் மனதைக் கவரும் சக்தி மட்டும் இருக்கும். மற்றும் சில மஹான்களுக்கு அருள் பார்வையாலேயே தம்மிடம் அணுகிய சீடனைத் தம்மைப் போலவே ஞானப்பொன் ஆக்கிவிடும் சக்தியும் உண்டு. ஸ்பர்சமணி தன்னிடம் ஒட்டிய இரும்பைத் தங்கமாக்குமே தவிர ஸ்பர்சமணியாக்காது. இந்தத் தங்கத்தைக்கொண்டு மற்றோர் இரும்பைத் தங்கமாக்கமுடியாது. ஆசார்யனோ தன் சிஷ்யனையும் தன்னைப்போல் ஆசார்யனாக்கிவிடுவான். இவனும் மற்றோர் சிஷ்யனைக் கைதூக்கிவிடுவான். இந்த வகையைச் சேர்ந்தவர்கள் நம் மஹா ஸ்வாமிகள் என்பதை மஹானான ஓர் ஸந்யாஸியின் அநுபவம் நன்கு காட்டுகிறது. பால்யத்தில் ஆங்கிலம் படித்து உத்யோகத்திலமர்ந்தவர் ஸ்ரீ மஹா ஸந்நிதானத்தின் கருணையால் பந்தங்களிலிருந்து விடுபட்டுப் பரமஹம்ஸராகி இமயத்திலும் கங்காதீரங்களிலும் ஸஞ்சரித்து வருகிறார். இத்துறவி நம் பத்திரிகை ஆசிரியரிடம் தன் இன்ப அநுபவங்களை அடிக்கடி சொல்லியிருக்கிறார். அவரைப் பன்முறை வற்புறுத்தி அநுமதிபெற்றுச் சில அநுபவங்களை இங்கு பிரசுரிக்கிறோம். — ஆசிரியர்]

கருணாநிதியாகிய நம் ஆசார்யர் (ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீசந்திரசேகர பாரதீ ஸ்வாமிகள்) 1924-ம் வருஷம் மைசூரில் ஸம்ஸ்கிருத பாடசாலையில் தங்கியிருந்த பொழுது இவருக்கு அவர்களைச் சந்திக்கும் பாக்யம் கிடைத்தது. பல்லாயிரம் பக்தர்களுக்குத் தீர்த்தப் பிரஸாதம் வழங்கிக் கொண்டிருந்த ஸ்வாமிகள் இவரிடம் மட்டும் சில வார்த்தைகள் பேசினதும் அதிருஷ்டவசத்தால்தான். ஒவ்வொருவராக தீர்த்தப் பிரஸாதம் வாங்கிக்கொண்டிருக்கும் கூட்டத்தில் நின்ற இவர் தன் முறை வந்தபோது தீர்த்தப் பிரசாதம் வாங்க ஸ்வாமிகளின் முன்போய் நின்றார். ஸ்வாமிகளின் முகத்தை மிகுந்த பயபக்தியோடு பார்த்துக் கொண்டிருந்த இவர், அங்கிருந்து நகரச் சிறிது தாமத

மாயிற்று. அடுத்தவர் காத்திருந்தார். அப்போது ஸ்வாமிகள் இவரை நோக்கி, "உன் பெயர் என்னப்பா?" என்று கேட்டார்கள். இவர் தன் பெயரைச் சொன்னார். "நன்றாகப்படி" என்று ஆசீர்வதித்த ஸ்வாமிகள் மறுபடியும் இவரைப் பார்த்து, "நீ சிருங்ககிரிக்கு வரமுடியுமா?" என்று அன்போடு கேட்டார்கள். முடியும் என்பதற்கு அறிகுறியாக இவர் தலையை ஆட்டினார். பிறகு இவர் நகரும் சமயத்தில், "இந்தச் சிறுவனை நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள்; நல்ல அறிகுறிகள் இவனிடம் காணப்படுகின்றன" என்று ஸ்வாமிகள் அங்கிருந்தவர்களைப் பார்த்துச் சொன்னார்கள். ஸாதாரணமாக ஸ்வாமிகள் யாரிடமும் பேசுவதில்லை. சிலரைப் பார்த்துத் தலையாட்டுவார்கள். சிலரைப் பார்த்து லேசாகச் சிரிப்பார்கள். ஆனால் இந்தச் சிறுவனோடு இவர் இவ்வளவு பேசியதைக் கண்ட ஜனங்கள் வியப்படைந்தார்கள்.

1939-ல் பங்களூர் ஸ்ரீ சங்கரமடத்தில் ஸ்ரீ சாரதா தேவியின் ப்ரதிஷ்டைக்காக ஸ்வாமிகள் வந்திருந்தார்கள். அப்போது இவரும் ஸ்வாமிகளின் தரிசனத்துக்குப் போயிருந்தார். பக்தர்களின் பெருங் கூட்டத்துக்கிடையே எங்கேயோ நின்ற இவரை ஸ்வாமிகளின் அருட் பார்வை கண்டுபிடித்துவிட்டது. ஸ்வாமிகள் இவரைத் தம் அருகே வரும்படி அழைத்து வெகு கருணையோடு இவருடைய க்ஷேம லாபத்தை விசாரித்தார்கள். பிறகு இவரைப் பார்த்து, "நீ கீதை படித்திருக்கிறாயா?" என்று அன்பொழுகக் கேட்டார்கள். "நான் முழுவதும் படித்ததில்லை; இரண்டோர் அத்தியாயங்கள் மட்டும் படித்திருக்கிறேன்" என்று இவர் பதில் சொன்னார்.

பிறகு ஸ்வாமிகள் பின்வரும் இரண்டு சுலோகங்களையும் சொல்லி, "இந்த இரண்டும் உனக்குத் தெரியுமா?" என்று இவரைக் கேட்டார்கள்.

**ईश्वरः सर्वभूतानां हृद्देशेऽर्जुन तिष्ठति ।**
**भ्रामयन् सर्वभूतानि यन्त्रारूढानि मायया ॥**



**तमेव शरणं गच्छ सर्वभावेन भारत ।**
**तत्प्रसादात् परां शान्तिं स्थानं प्राप्स्यसि शाश्वतम् ॥**

[1] ஈச்வர: ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேசேऽர்ஜுந திஷ்டதி।
ப்ராமயன் ஸர்வபூதாநி யந்த்ராரூடானி மாயயா ||

தமேவ சரணம் கச்ச ஸர்வபாவேந பாரத ।
தத்ப்ரஸாதாத் பராம் சாந்திம் ஸ்தாநம் ப்ராப்ஸ்யஸி
சாச்வதம் ||

தமக்குத் தெரியாது என்று இவர் பதில் சொன்னார். உடனே ஸ்வாமிகள் இந்த சுலோகங்களைச் சொல்லிக் கொடுத்து இவரைக்கொண்டும் சொல்லச் சொன்னார்கள். பிறகு இவரிடம், "காலையில் எழுந்திருந்தவுடன் மூன்று தடவையும், இரவில் படுக்கப்போகும்போது மூன்றுதடவையும் இந்தச் சுலோகங்களை நீ சொல்லவேண்டும்" என்று ஸ்வாமிகள் கருணையோடு நியமித்தார்கள். "இதுவே ஒவ்வொருநாளும் உன் முதல் வேலையாகவும் கடைசி வேலையாகவும் இருக்கட்டும்" என்றும் அவர்கள் பணித்தார்கள். இப்படியாக ஸ்வாமிகள் வாக்கால் முதல் உபதேசத்தைப் பெறும் பாக்கியம் இவருக்குக் கிடைத்தது.

அச்சமயம் ஸ்ரீ ஸ்வாமிகள் பெங்களூரில் சில நாள் தங்கியிருந்தார்கள். அப்போது ஒருநாள் இவர், தாம் துறவியாக வாழ விரும்புவதாக ஸ்வாமிகளிடம் விண்ணப்பித்துக் கொண்டார். இவர் இப்படிக் கேட்பதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று: இவர் மனம் இயற்கையாகவே துறவை நாடியது. இரண்டாவது: இவர் தம் தாய்க்குக்கொடுத்த வாக்கைக் காப்பாற்ற விரும்பினார். இவருடைய தாய் செல்வத்தாலும் அந்தஸ்தாலும் உயர்ந்திருந்தபோதிலும் தெய்வபக்தியையும் எளிய வாழ்க்கையையுமே மேற்கொண்டவர்.

இவருடைய சிறு வயதில் ஒரு ஸமயம் இவர் வீட்டில் ஒரு பண்டிதர் ஸ்ரீராமாயணம் பிரவசனம் செய்தார். இவர்

1. பகவத் கீதை 18—61, 62.

கொள்ளமுடியும். சில சில காலங்களில் மட்டும் கிடைக்கும் பழங்களையும் மலர்களையும் நாம் மனத்தால் எல்லாக் காலங்களிலும் சிருஷ்டித்து ஈச்வரனுக்கு அர்ப்பணம் செய்ய முடியும். கற்பக மலர்களையும் பாரிஜாத மலர்களையும்விட மணமும் அழகும் மிக்க மலர்களை மனத்தால் சிருஷ்டித்து அர்ப்பணம் செய்யமுடியும். கௌஸ்துபத்தைவிட மிகச் சிறந்த நவரத்னங்கள் பதித்த ஆபரணங்களை நாம் மனத்தால் சிருஷ்டித்து ஈச்வரனுக்கு அர்ப்பணம் செய்யமுடியும்'' என்றெல்லாம் ஸ்வாமிகள் விளக்கினார்.

"சரி, ஆனால் மனத்தால் கற்பனை செய்யும் இந்தப் பூஜாத்திரவியங்கள் வெறும் கற்பனைப் பொருள்கள்தாமே. உண்மைப் பொருள்கள் அல்லவே!'' என்றார் இவர்.

"நீ கேட்பது சரியான கேள்விதான் அப்பா! ஆனால் உலகத்தில் உண்மை என்று நீ நினைக்கும் இந்தப்பொருள்களும் வாஸ்தவமாகப் பார்த்தால் கற்பனைப் பொருள்கள் தாமே. இரண்டுக்கும் அதிக வித்தியாஸம் ஒன்றும் இல்லையே'' என்று ஸ்வாமிகள் தெளிவுபடுத்தினார்.

இந்த விஷயங்களை ஸ்வாமிகள் தமக்கே இயல்பான எளிய முறையில் உணர்ச்சியைக் கிளரும் வகையில் தெளிவாக உபதேசித்தார்கள். சுமார் பத்து நிமிஷகாலம் இந்த மானஸ பூஜா கல்ப உபதேசம் அருள் மொழிகளால் நடந்தது. இவர் அந்த உபதேசங்களைப்பெற்று பக்தியால் ஆனந்தபரவசரானார்.

(தொடரும்)

* * *

எவன் பயனடைந்தவன்? ஸந்யாஸி. எவன் பூஜிக்கத்தக்கவன்? ஸாதுவான பண்டிதன். எவன் ஸேவிக்கத்தகுந்தவன்? கொடுப்பவன். கொடுப்பவன் யார்? எவன் யாசகர்களுக்குத் திருப்தியை உண்டு பண்ணுகிறானோ, அவன்.

— ப்ரச்னோத்தர ரத்னமாலிகா.



ताभ्यां निर्विचिकित्सेऽर्थे चेतसः स्थापितस्य यत् ।
एकतानत्वमेतद्धि निदिध्यासनमुच्यते ॥ ५४ ॥

*தாப்யாம் நிர்விசிகித்ஸேர்த்தே சேதஸ: ஸ்தாபிதஸ்ய யத்*
*ஏகதாநத்வமேதத்தி நிதித்யாஸனமுச்யதே.*

ச்ரவண மனனங்களால் ஸந்தேஹமின்றி நிச்சயம் செய்யப்பெற்ற ஆத்மவஸ்துவில் நிலை நிறுத்தப்பட்ட மனதில் ஒரே விதமான விருத்தி தொடர்ந்து ஏற்படுதல் நிதித்தியாஸனம் என்று கூறப்படுகிறது. (54)

ध्यातृध्याने परित्यज्य क्रमाद्ध्येयैकगोचरम् ।
निवातदीपवच्चित्तं समाधिरभिधीयते ॥ ५५ ॥

*த்யாத்ருத்யானே பரித்யஜ்ய க்ரமாத் த்யேயைககோசரம்.*
*நிவாததீபவத் சித்தம் ஸமாதிரபிதீயதே*

நிதித்யாஸனத்தில் தோன்றும் தியானம் செய்பவன், தியானம் என்ற இரு வேற்றுமைகளையும் விலக்கி அப்பியாஸத்தின் பலத்தால் கிரமமாக தியானம் செய்யப்படும் ஒரே பொருள் விஷயமாகவே மனமானது காற்றில்லாதவிடத்திலிருக்கும் தீபம்போல் அசைவற்றதாக நின்றால் 'ஸமாதி' என்று கூறப்படுகிறது. (55)

वृत्तयस्तु तदानीमज्ञाता अप्यात्मगोचराः ।
स्मरणादनुमीयन्ते व्युत्थितस्य समुत्थितात् ॥ ५६ ॥

*விருத்தயஸ்து ததானீமக்ஞாதா அப்யாத்மகோசரா:*
*ஸ்மரணாதநுமீயந்தே வ்யுத்திதஸ்ய ஸமுத்திதாத்,*

ஆத்மவிஷயமான மனோவிருத்திகள் ஸமாதிகாலத்தில் அறியப்படுவதில்லை. ஆயினும், ஸமாதி கலைந்து எழுந்த பின் உண்டாகும் ஸ்ம்ருதியால் ஸமாதி காலத்தில் ஆத்மாகார மனோ விருத்தி இருந்ததாக ஊஹிக்கப்படுகிறது. (56)

वृत्तीनामनुवृत्तिस्तु प्रयत्नात्प्रथमादपि ।
अदृष्टासकृदभ्याससंस्कारसचिवाद्भवेत् ॥ ५७ ॥

*விருத்தீநாமனுவிருத்திஸ்து ப்ரயத்நாத் ப்ரதமாதபி*
*அத்ருஷ்டாஸக்ருதப்யாஸ ஸம்ஸ்கார ஸசிவாத் பவேத்.*

S. K. ii-3-8

ஞானிக்கு ஸமாதி கலைந்தபின்னும் ஆத்ம விஷயமான மனோவிருத்திகள் ஏற்படும். இவை ஏற்பட ஸமாதி காலத்தில் ஒருவிதமான முயற்சியும் செய்யாவிட்டாலும் ஸமாதி ஏற்படுவதற்கு முன்னால் செய்த முயற்சிகளாலேயே ஏற்படும். பூர்வபுண்யம், வெகு காலம் செய்த அப்யாஸத்தின் ஸம்ஸ்காரம் இவையிரண்டும் அதற்கு உதவுகின்றன.

यथा दीपो निवातस्थ इत्यादिभिरनेकधा ।
भगवानिममेवार्थमर्जुनाय न्यरूपयत् ॥ ५८ ॥

*யதா தீபோ நிவாதஸ்த இத்யாதிபிரநேகதா*
*பகவானிமமேவார்த்தமர்ஜுநாய ந்யரூபயத்.*

பகவத்கீதையில் 'यथा दीपो निवातस्थो नेङ्गते सोपमा स्मृता' என்ற 6வது அத்யாயம் 11வது சுலோகம் முதல் 29வது சுலோகம் வரையில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ஜுனனுக்கு இவ்விஷயத்தைத்தான் உபதேசம் செய்துள்ளார். (58)

अनादाविह संसारे सञ्चिताः कर्मकोटयः ।
अनेन विलयं यान्ति शुद्धो धर्मो विवर्धते ॥ ५९ ॥

*அநாதாவிஹ ஸம்ஸாரே ஸஞ்சிதா: கர்மகோடய:*
*அநேந விலயம் யாந்தி சுத்தோ தர்மோ விவர்த்ததே.*

அநாதியான இந்த ஸம்ஸாரத்தில் செய்து சேமிக்கப்பெற்ற கோடிக்கணக்கான கர்மங்கள் இந்த ஸமாதியால் நாசமடைகின்றன. முக்தி ஸாதனமாகிய ஞானமென்ற சிறந்த தர்மம் ஓங்கி வளருகிறது. (59)

धर्ममेघमिमं प्राहुः समाधिं योगवित्तमाः ।
वर्षत्येष यतो धर्मामृतधाराः सहस्रशः ॥ ६० ॥

*தர்மமேகமிமம் ப்ராஹு: ஸமாதிம் யோகவித்தமா:*
*வர்ஷத்யேஷ யதோ தர்மாம்ருததாரா: ஸஹஸ்ரஶ:*

யோகத்தின் சிறப்பை நன்கு அறிந்த சான்றோர்கள் இந்த ஸமாதியை 'தர்மமேகம்' என்று கூறுகின்றனர். ஏனெனில், இது எண்ணிறந்த தர்மமாகிய அமிருததாரைகளைப் பொழிகின்றது. (60)



अमुना वासनाजाले निश्शेषं प्रविलापिते ।
समूलोन्मूलिते पुण्यपापाख्ये कर्मसंचये ॥ ६१ ॥

वाक्यमप्रतिबद्धं सत्प्राक् परोक्षावभासिते ।
करामलकवद्बोधमपरोक्षं प्रसूयते ॥६२ ॥

*அமுநா வாஸநா ஜாலே நிஶ்ஶேஷம் ப்ரவிலாபிதே*
*ஸமூலோந்மூலிதே புண்ய பாபாக்யே கர்ம ஸஞ்சயே.*

*வாக்யமப்ரதிபத்தம் ஸத் ப்ராக் பரோக்ஷாவபாஸிதே*
*கராமலகவத் போதமபரோக்ஷம் ப்ரஸூயதே*

ஸமாதியின் முக்யமான ப்ரயோஜனத்தைக்கூறுகிறார்:-

இந்த ஸமாதியால், அஹங்காரம், மமகாரம் இவைகளுக்கெல்லாம் காரணமான ஸம்ஸ்காரங்களின் கூட்டம் மீதியில்லாமல் அழிக்கப்பட்டு சேகரிக்கப்பட்டுள்ள புண்யம் பாபமென்று இரு பிரிவுள்ள கர்மாக்களும் அடியோடு தொலைந்த பிறகு, எல்லா இடைஞ்சல்களும் நீங்கிவிட்டபடியால் 'தத்த்வமஸி' முதலான மஹாவாக்யமானது பரோக்ஷமாகத் தெரிந்த ப்ரஹ்ம தத்வத்தைப்பற்றி உள்ளங்கை நெல்லிக்கனிபோல அபரோக்ஷ ஞானத்தை உண்டுபண்ணுகிறது. (61-62)

परोक्षं ब्रह्मविज्ञानं शाब्दं देशिकपूर्वकम् ।
बुद्धिपूर्वकृतं पापं कृत्स्नं दहति वह्निवत् ॥ ६३ ॥

*பரோக்ஷம் ப்ரஹ்மவிஜ்ஞானம் ஶாப்தம் தேஶிக பூர்வகம்*
*புத்திபூர்வ க்ருதம் பாபம் க்ருத்ஸ்நம் தஹதி வஹ்நிவத்*

குரு முகமாக 'தத்த்வமஸி' முதலான மஹாவாக்யோபதேசத்தைப்பெற்று அதிலிருந்து ஏற்படும் சாப்தமான பரோக்ஷ ஞானமானது தெரிந்து செய்த பாபத்தையெல்லாம் நெருப்புப்போல எரித்து சாம்பலாக்கிவிடும். (63)

अपरोक्षात्मविज्ञानं शाब्दं देशिकपूर्वकम् ।
संसारकारणाज्ञानतमसश्चण्डभास्करः ॥ ६४ ॥

*அபரோக்ஷாத்மவிஜ்ஞாநம் ஶாப்தம் தேஶிகபூர்வகம்*
*ஸம்ஸாரகாரணாஜ்ஞான தமஸச்சண்டபாஸ்கர:*

குருமுகமாகக் கிடைத்த மஹாவாக்ய உபதேசத்திலிருந்து ஏற்படும் சாப்தமான, ஸந்தேஹம், விபரீதமில்லாத நிர்ணயமான அபரோக்ஷ ஆத்மஞானம், ஸம்ஸாரத்திற்குக் காரணமான அக்ஞானத்திற்கு, கடுமையான கிரணமுள்ள ஸௌர்யன் போலாகும். மத்யான்ன காலத்தில் ஸௌர்ய ப்ரகாசம் இருள் முழுவதையும் அழிப்பதுபோல அபரோக்ஷ ஞானம் அக்ஞானத்தை அடியுடன் அழித்துவிடும். (64)

**इत्थं तत्त्वविवेकं विधाय विधिवन्मनः समाधाय ।**
**विगलितसंसृतिबन्धः प्राप्नोति परं पदं नरो नचिरात् ॥ ६५ ॥**

*இத்தம் தத்வவிவேகம் விதாய விதிவன்மந: ஸமாதாய*
*விகளித ஸம்ஸ்ருதி பந்த: ப்ராப்நோதி பரம் பதம்*
*நரோ நசிராத்.*

இவ்வாறு ஐந்து கோசங்களிலிருந்தும் ஆத்ம வஸ்துவைப்பிரித்து ஆத்மாவும் ப்ரஹ்மமும் ஒன்று என்ற தத்வத்தை அறிந்து சாஸ்திரத்தில் கூறியபடி அதிலேயே மனதை நிலைபெறச்செய்த மனிதன் அபரோக்ஷ ஞானத்தால் ஸம்ஸாரபந்தம் விலகி விரைவில் நிரதிசயானந்த ரூபமான பரமபதத்தை, மோக்ஷத்தையடைகிறான். இந்த தத்வ விவேகப்ரகரணத்தை அடிக்கடி மனனம் செய்வதால் க்ரமமாக ப்ரஹ்மஸ்வரூபமாக ஆகிவிடுவான். (65)

*தத்வவிவேக பிரகரணம் முற்றியது.*

---



**अतद्व्यावृत्तिरूपेण वेदान्तैर्लक्ष्यतेऽव्ययम् ।**
**अखण्डानन्दमेकं यत् तद्ब्रह्मेत्यवधारयेत् ॥ ५७ ॥**

**அதத்வ்யாவ்ருத்திரூபேண வேதாந்தைர் லக்ஷ்யதேऽவ்யயம் ।**
**அகண்டானந்தமேகம் யத் தத் ப்ரஹ்மேத்யவதாரயேத் ॥**

இதுவல்ல, இதுவல்ல என்னும் ரீதியில் உபநிஷத்துக்களால் அறிவுறுத்தப்படுவது; குறைவற்றது, பிரிக்கமுடியாத ஆனந்தவடிவமான ஒரே தத்துவம்தான் ப்ரஹ்மம்.

இதுவரை ப்ரஹ்மஸ்வரூபத்தை ஒறுவாறு சிறிது விளக்கிக்காட்டினோம். ஆனால் உள்ளது உள்ளபடி அதன் தத்வத்தை முழுவதும் உபதேசிக்கமுடியாது. சப்தத்தால்தான் பிறருக்கு உபதேசிக்கவேண்டும். ப்ரஹ்மமோ சப்தத்திற்கு எட்டாதது. ஜாதி, குணம், க்ரியை ஸம்க்ஞை இந்த தர்மங்களுள்ள பொருளைத்தான் சப்தம் காட்டும். ப்ரஹ்மத்திலோ ஒரு தர்மமும் கிடையாது. அகண்டமான வஸ்து. ஆகையால்தான் ப்ரஹ்மத்தை உபதேசிப்பதற்காக ஏற்பட்ட உபநிஷத்துக்கள் பலவாறாக ப்ரஹ்ம ஸ்வரூபத்தை நிரூபணம் செய்தும் திருப்தியடையாமல் கடைசியில் நிஷேதமுகமாக வர்ணிக்கிறது. அதாவது नेति नेति (நேதி நேதி), अशब्दमस्पर्शं (அசப்தம் அஸ்பர்சம்) என்று உலகில் தோன்றும் பொருள்களெல்லாம் பிரஹ்மமில்லை என்று உபதேசிக்கிறது. நம்மைக்காட்டிலும் வேறான, நம்மால் அறியப்படுகின்ற பொருள்கள் ப்ரஹ்மமல்ல என்று ஏற்படுவதால் அது நம் ஆத்மஸ்வரூபம், அனுபவரூபம் என்பது கிடைக்கிறது. (57)

(அ) முன்சுலோகத்தில் ப்ரஹ்மம் அகண்டானந்த வஸ்து என்று கூறப்பட்டது. புராணங்களில் தேவர்கள், இந்திரன், ப்ரஹ்மா முதலானவர்களும் மிகுந்த ஆனந்தத்தையனுபவிப்பதாக கூறப்பட்டுள்ளதே எனில் அதற்கு பதில் கூறுகிறார்:—

**अखण्डानन्दरूपस्य तस्यानन्दलवाश्रिताः ।**
**ब्रह्माद्यास्तारतम्येन भवन्त्यानन्दिनोऽखिलाः ॥ ५८ ॥**

**அகண்டானந்த ரூபஸ்ய தஸ்யாநந்த லவாச்ரிதா: ।**
**ப்ரஹ்மாத்யாஸ் தாரதம்யேன பவந்த்யாநந்திநோऽகிலா: ॥**

பிரிக்கமுடியாத ஆனந்தவடிவமான அந்த ப்ரஹ்மத்திலுள்ள ஆனந்தத்தின் துளியை அடைந்துதான் ப்ரஹ்மா முதலான எல்லோரும் ஏற்றத்தாழ்வுடன் மிகுந்த ஆனந்தமுள்ளவர்களாக விளங்குகின்றனர்.

உலகில் எல்லோரும் தான் விரும்பிய பொருள் கிடைத்ததும் ஆனந்தமேற்படுவதாக நினைக்கின்றனர். ஆனல் தைத்திரீய உபநிஷத்தில் ஏகசக்ராதிபதியாகவும் யுவாவாகவும், பலிஷ்டனுயும், அறிவாளியாயுமுள்ள மஹாராஜனுக்கு ஏற்படும் ஆனந்தத்தைத்தான் மனுஷ்யானந்தம் என்று கூறியிருக்கிறது. இதைப்போல 100 மடங்கு ஆனந்தம் மனுஷ்ய கந்தர்வர்களுக்கு. இவ்வாறே தேவகந்தர்வர், பித்ருக்கள் முதலானவர்களுக்கு நூறு நூறு மடங்கு அதிகம் என்பதைக் காட்டி, பிரஹ்மாவின் ஆனந்தம்தான் எல்லாவற்றையும்விட உயர்ந்தது என்று கூறியிருக்கிறது. அந்த பிரஹ்மாவின் ஆனந்தமும் பிரஹ்மானந்தத்தின் லவலேசம்தான். அதாவது ப்ரஹ்மானந்தம் என்பது ஸமுத்திரம் போன்றது. அந்த ஸமுத்திரத்தின் ஒரு அலையிலிருந்து காற்றினல் கிளம்பிய ஒரு நீர்த்துளிபோன்றதுதான் பிரஹ்மாவின் ஆனந்தமும். ப்ரஹ்மானந்தம் அளவிடமுடியாதது.

(அ) ஆத்மா ஆனந்த ரூபம், அதுதான் பிரியமாக விளங்கும் வஸ்து என்று கூறப்பட்டது. இது சரியல்ல. அனுத்மாவான தேஹம் முதலியவைகளிடத்திலும் எல்லோருக்கும் நிரதிசயமான ப்ரீதி ஏற்படுகிறதே! அவைகளும் நமக்கு விளங்குகிறதே எனில் கூறுகிருர் :—

**तद्युक्तमखिलं वस्तु व्यवहारस्तदन्वितः ।**
**तस्मात्सर्वगतं ब्रह्म क्षीरे सर्पिरिवाखिले ॥ ५९ ॥**

**தத்யுக்தமகிலம் வஸ்து வ்யவஹாரஸ்ததந்வித: ।**
**தஸ்மாத் ஸர்வகதம் ப்ரஹ்ம க்ஷீரே ஸர்பிரிவாகிலே ॥**



எல்லாப்பொருளும் அந்த ப்ரஹ்மத்துடன் கூடியது, எல்லா வியவஹாரமும் அந்த ப்ரஹ்மத்துடன் கூடியது. ஆகையால் பால் முழுவதிலும் நெய் பரவியிருப்பதுபோல ப்ரஹ்மம் எங்கும் உள்ளது.

ப்ரஹ்மம் ஒன்றுதான் ஆனந்தரூபம். ஆகையால் அது தான் ப்ரியமான வஸ்து. ஆத்மாவுடன் ஸம்பந்தப்பட்டிருப்பதால் தான் மற்றப்பொருள்களில் ப்ரீதி ஏற்படுகிறது. தனக்காகத் (ஆத்மாவுக்காக) தான் மற்ற பொருள்களில் ப்ரீதி ஏற்படுகிறது. ஆத்ம ஸம்பந்தமில்லாவிட்டால் அதில் ப்ரீதியில்லை. நிருபாதிகமான எல்லையற்ற ப்ரீதி ஆத்மாவில் தான். மேலும் ஆத்மஸம்பந்தமில்லாவிட்டால் உலகில் ஒரு வியவஹாரமும் கிடையாது. சேதனப்பொருள் ஆத்மா ஒன்றே. இதைத்தவிற மற்றவையெல்லாம் ஜடம். சேதனம்தான் தானகவே விளங்கும். ஜடப்பொருள் சேதன ஸம்பந்தத்தால் விளங்குமே தவிற தானக விளங்காது. ஆகவே, உலக வியவஹாரமோ, ப்ரீதியோ, ஆத்ம ஸம்பந்தத்தால் ஏற்படுவதால் ஆத்மரூபமான ப்ரஹ்மம் எங்கும் உளது. பாலைக்காய்ச்சித் தயிராக்கிக் கடைந்து வெண்ணெயெடுத்துக்காய்ச்சி நெய் தயாரிக்கிருேம். இந்த நெய்யானது பால் முழுவதும் பரவியிருக்கிறது. அதுபோல் ப்ரஹ்மமும் எங்கும் பரவியுள்ளது. அது இல்லாத இடமில்லை. (59)

(அ) 57 வது சுலோகத்தில் உபநிஷத்துக்கள் இதுவல்ல, இதுவல்ல என்ற ரீதியில் ப்ரஹ்மத்தை உபதேசிப்பதாகக் கூறப்பட்டது. அதை விவரிக்கிருர்:—

**अनण्वस्थूलमह्रस्वमदीर्घमजमव्ययम् ।**
**अरूपगुणवर्णाख्यं तद्ब्रह्मेत्यवधारयेत् ॥ ६० ॥**

**அநண்வஸ்தூல மஹ்ரஸ்வமதீர்கமஜமவ்யயம் ।**
**அரூப குணவர்ணாக்யம் தத் ப்ரஹ்மேத்யவ தாரயேத் ॥**

ப்ரஹ்மம் சிறியதுமல்ல, பருமனுமல்ல, குட்டையுமல்ல, நீளமுமல்ல, பிறப்பு இல்லை, அழிவு இல்லை. உருவம், குணம்,

**அகண்டானந்த ரூபஸ்ய தஸ்யாநந்த லவாச்ரிதா: |**
**ப்ரஹ்மாத்யாஸ் தாரதம்யேன பவந்த்யாநந்தினோऽகிலா: ||**

பிரிக்கமுடியாத ஆனந்தவடிவமான அந்த ப்ரஹ்மத்திலுள்ள ஆனந்தத்தின் துளியை அடைந்துதான் ப்ரஹ்மா முதலான எல்லோரும் ஏற்றத்தாழ்வுடன் மிகுந்த ஆனந்தமுள்ளவர்களாக விளங்குகின்றனர்.

உலகில் எல்லோரும் தான் விரும்பிய பொருள் கிடைத்ததும் ஆனந்தமேற்படுவதாக நினைக்கின்றனர். ஆனால் தைத்திரீய உபநிஷத்தில் ஏகசக்ராதிபதியாகவும் யுவாவாகவும், பலிஷ்டனையும், அறிவாளியாயுமுள்ள மஹாராஜனுக்கு ஏற்படும் ஆனந்தத்தைத்தான் மனுஷ்யானந்தம் என்று கூறியிருக்கிறது. இதைப்போல 100 மடங்கு ஆனந்தம் மனுஷ்ய கந்தர்வர்களுக்கு. இவ்வாறே தேவகந்தர்வர், பித்ருக்கள் முதலானவர்களுக்கு நூறு நூறு மடங்கு அதிகம் என்பதைக் காட்டி, பிரஹ்மாவின் ஆனந்தம்தான் எல்லாவற்றையும்விட உயர்ந்தது என்று கூறியிருக்கிறது. அந்த பிரஹ்மாவின் ஆனந்தமும் ப்ரஹ்மானந்தத்தின் லவலேசம்தான். அதாவது ப்ரஹ்மானந்தம் என்பது ஸமுத்திரம் போன்றது. அந்த ஸமுத்திரத்தின் ஒரு அலையிலிருந்து காற்றினால் கிளம்பிய ஒரு நீர்த்துளிபோன்றதுதான் பிரஹ்மாவின் ஆனந்தமும். ப்ரஹ்மானந்தம் அளவிடமுடியாதது.

(அ) ஆத்மா ஆனந்த ரூபம். அதுதான் பிரியமாக விளங்கும் வஸ்து என்று கூறப்பட்டது. இது சரியல்ல. அனாத்மாவான தேஹம் முதலியவைகளிடத்திலும் எல்லோருக்கும் நிரதிசயமான ப்ரீதி ஏற்படுகிறதே! அவைகளும் நமக்கு விளங்குகிறதே எனில் கூறுகிறார்:—

**तद्युक्तमखिलं वस्तु व्यवहारस्तदन्वितः ।**
**तस्मात्सर्वगतं ब्रह्म क्षीरे सर्पिरिवाखिले ॥ ५९ ॥**

**தத்யுக்தமகிலம் வஸ்து வ்யவஹாரஸ்ததந்வித: |**
**தஸ்மாத் ஸர்வகதம் ப்ரஹ்ம க்ஷீரே ஸர்பிரிவாகிலே ||**



எல்லாப்பொருளும் அந்த ப்ரஹ்மத்துடன் கூடியது, எல்லா வியவஹாரமும் அந்த ப்ரஹ்மத்துடன் கூடியது. ஆகையால் பால் முழுவதிலும் நெய் பரவியிருப்பதுபோல ப்ரஹ்மம் எங்கும் உள்ளது.

ப்ரஹ்மம் ஒன்றுதான் ஆனந்தரூபம். ஆகையால் அதுதான் ப்ரியமான வஸ்து. ஆத்மாவுடன் ஸம்பந்தப்பட்டிருப்பதால் தான் மற்றப்பொருள்களில் ப்ரீதி ஏற்படுகிறது. தனக்காகத் (ஆத்மாவுக்காக) தான் மற்ற பொருள்களில் ப்ரீதி ஏற்படுகிறது. ஆத்ம ஸம்பந்தமில்லாவிட்டால் அதில் ப்ரீதியில்லை. நிருபாதிகமான எல்லையற்ற ப்ரீதி ஆத்மாவில் தான். மேலும் ஆத்மஸம்பந்தமில்லாவிட்டால் உலகில் ஒரு வியவஹாரமும் கிடையாது. சேதனப்பொருள் ஆத்மா ஒன்றே. இதைத்தவிர மற்றவையெல்லாம் ஜடம். சேதனம்தான் தானாகவே விளங்கும். ஜடப்பொருள் சேதன ஸம்பந்தத்தால் விளங்குமே தவிர தானாக விளங்காது. ஆகவே, உலக வியவஹாரமோ, ப்ரீதியோ, ஆத்ம ஸம்பந்தத்தால் ஏற்படுவதால் ஆத்மரூபமான ப்ரஹ்மம் எங்கும் உளது. பாலைக்காய்ச்சித் தயிராக்கிக் கடைந்து வெண்ணையெடுத்துக்காய்ச்சி நெய் தயாரிக்கிறோம். இந்த நெய்யானது பால் முழுவதும் பரவியிருக்கிறது. அதுபோல் ப்ரஹ்மமும் எங்கும் பரவியுள்ளது. அது இல்லாத இடமில்லை. (59)

(அ) 57 வது சுலோகத்தில் உபநிஷத்துக்கள் இதுவல்ல, இதுவல்ல என்ற ரீதியில் ப்ரஹ்மத்தை உபதேசிப்பதாகக் கூறப்பட்டது. அதை விவரிக்கிறார்:—

**अनण्वस्थूलमह्रस्वमदीर्घमजमव्ययम् ।**
**अरूपगुणवर्णाख्यं तद्ब्रह्मेत्यवधारयेत् ॥ ६० ॥**

**அநண்வஸ்தூல மஹ்ரஸ்வமதீர்கமஜமவ்யயம் |**
**அரூப குணவர்ணாக்யம் தத் ப்ரஹ்மேத்யவ தாரயேத் ||**

ப்ரஹ்மம் சிறியதுமல்ல, பருமனுமல்ல, குட்டையுமல்ல, நீளமுமல்ல, பிறப்பு இல்லை, அழிவு இல்லை. உருவம், குணம்,

நிறம், பெயர் இல்லாதது. அதுவே ப்ரஹ்மமென்று தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

பிருஹதாரண்யகம் முதலான உபநிஷத்துக்கள் பிரஹ்மத்தைப் பலவாருக உபதேசித்தும் திருப்தியடையாமல் கடைசியில் (अस्थूलमनण्वह्रस्वमदीर्घं ३—८—८) என்று நிஷேதமுகமாகக் கூறி முடிக்கின்றன. சிறிய பொருள் ப்ரஹ்மமல்ல. பெரிய பொருளும் ப்ரஹ்மமல்ல. குட்டையான பொருளும், நீண்ட பொருளும் ப்ரஹ்மமல்ல. உண்டாகும் பொருளும், அழியும் பொருளும் ப்ரஹ்மமல்ல. உருவம், குணம், நிறம், பெயர் இவை கொண்ட பொருளும் ப்ரஹ்மமல்ல. உலகில் நாம் காணும் பொருள்களில் கீழே சொல்லப்பட்ட தர்மங்கள் இருக்கும். சிறியதுமில்லாமல் பெரியதுமில்லாமல், குட்டையுமில்லாமல், நீளமுமில்லாமல் உலகில் ஒருபொருளையும் காணமுடியாது. ஆகவே உலகப் பொருள்களெல்லாவற்றையும் ஒதுக்கித்தள்ளியதாக ஆகிறது. கடைசியில் மிஞ்சுவது ப்ரத்யக்கான ஆத்ம வஸ்து ஒன்றுதான். அது அநுபவரூபம். அதுவே ப்ரஹ்மம்.

(அ) மறுபடியும் ப்ரஹ்ம ஸ்வரூபத்தையே உபதேசிக்கிருர் :—

यद्भासा भास्यतेऽर्कादि भास्यैर्यत्तु न भास्यते ।
येन सर्वमिदं भाति तद्ब्रह्मेत्यवधारयेत् ॥ ६१ ॥

**யத்பாஸா பாஸ்யதேऽர்காதி பாஸ்யைர் யத்து ந பாஸ்யதே।**
**யேந ஸர்வமிதம் பாதி தத் ப்ரஹ்மேத்யவ தாரயேத் ॥**

எதன் ஒளியால் ஸூர்யன் முதலியவை பிரகாசிக்கப் படுகிறதோ, பிரகாசிக்கப்படும் அவைகளால் எது பிரகாசிக்கப்படுவதில்லையோ, எதனுல் இது எல்லாம் விளங்குகிறதோ அது ப்ரஹ்மம் என்று தீர்மானிக்க வேண்டும்.

# குறிப்புகள்

## ஸ்ரீ ராஷ்டிரபதி விஜயம்

சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் தங்கியிருக்கும் சென்னை தியாகராய நகரிலுள்ள ஸ்ரீகாமாக்ஷி கல்யாண நிலயத்திற்கு ஆகஸ்டு-மீ 13வ காலை 10-15 மணிக்கு மேன்மை தங்கிய பாரதநாட்டு **ராஷ்டிரபதி ஸ்ரீ ராஜேந்திரபிரஸாத்** அவர்கள் விஜயம் செய்தார்கள். ஸ்ரீ M. S. மந்திரேசுவர சர்மா (ஆசிரியர் ஸர்ச்லைட், பாட்னு) அவர்களும், ஸ்ரீ மஹா ஸ்வாமிகளின் உதவியாளர், வித்வான் வேதமூர்த்தி ஸ்ரீ பத்மனுப உபாத்யாயர் அவர்களும், அகிலபாரத சங்கரஸேவா ஸமிதியின் அங்கத்தினர்களும், ஸ்ரீ ஜகத்குரு வரவேற்புக் குழுவினரும் ஸ்ரீ ராஷ்டிரபதியை பூர்ண கும்பம், மங்கள வாத்யம் முதலிய எல்லா மரியாதைகளுடனும் வரவேற்ருர்கள். ஸ்ரீ சிருங்ககிரி ஸம்ஸ்தானத்தின் பிருதுகளுடன் ஸ்ரீ ராஷ்டிரபதி மண்டபத்துக்குச் சென்று ஸ்ரீ சாரதா, சந்திரமௌளீசுவரர் முதலான தேவதைகளை தர்சித்ததும், ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் அங்கு விஜயம்செய்து ஸ்ரீ ராஷ்டிரபதியைக் குசலம் விசாரித்துப் பிறகு நன்கு அலங்கரிக்கப் பட்டிருக்கும் அறைக்கு அழைத்துச் சென்ருர்கள். பக்தி பரவசராக இருந்த ஸ்ரீ ராஷ்டிரபதி அவர்கள் ஆனந்த பாஷ்பம் பெருக, பாதபூஜை, பிக்ஷாவந்தனம் முதலியவைகளை நடத்தினுர்கள். ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் தாமே கீழ்க் கண்ட ஸ்ரீமுகத்தை வாசித்து ஸ்ரீ ராஷ்டிரபதி அவர்களுக்கு "**ராஷ்டிர ரத்னம்**" என்ற விருதை அளித்து, அடையாளமாக ஹம்ஸம் பொருந்திய பதக்கத்தையும், தங்கச்சங்கிலியையும், அணிவித்தார்கள். பிறகு சிறிதுநேரம் தனியாகச் சம்பாஷணை நடந்தது. ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் தம் அறைக்குச் சென்றதும், ஸ்ரீ ராஷ்டிரபதி அவர்கள் தேவதா பிரஸாதம் அருந்திவிட்டு மறுபடியும் பூஜா மண்டபத்துக்குச்சென்று ஸ்ரீ சக்ரார்ச்சனை நடப்பதை தரிசித்துவிட்டு பிரஸாதம் பெற்றுக்கொண்டு ராஜபவனத்திற்குத் திரும்பிச் சென்ருர்கள். நூற்றுக்கணக்கான பக்தர்கள் இந்த வைபவத்தைக் கண்டு களித்தார்கள்.

### ராஷ்டிரபதிக்கு ஸ்ரீ மஹாஸ்வாமிகளின் ஸ்ரீமுகம்

भारतराष्ट्राध्यक्ष श्री राजेन्द्रप्रसाद विषये विरचिताः शुभाशिषः समुल्लसन्तु । भवन्तः भारतराष्ट्रस्य आध्यक्षपदं आदशभ्यो वत्सरेभ्यो

ऽधिष्ठाय, स्वाचरितैः सकला अपि प्रजाः अरंजयन्, रञ्जयन्ति च। भवतां राष्ट्रनिर्वहणावसरे राष्ट्रस्य विशिष्टा समुन्नतिः अभूत्, भवति, भविष्यति च। धर्मसूत्रकारः श्रीगौतममहर्षिः दया सर्वभूतेषु, क्षान्तिः, अनसूया, शौचं, अनायासः, मांगल्यं, अकार्पण्यं, अस्पृहा, इति अष्टौ गुणान् आत्मनः श्रेयस्साधनानि प्रत्यपादयत्। तैः सर्वैरपि परिभूषिता भवन्तः समग्रस्य राष्ट्रस्य मार्गप्रदर्शकतां प्रपद्य विराजन्ते। भगवान् श्री शंकराचार्यरूपेणावतीर्य महीतले सनातनं मतं समुद्धृत्य अध्यात्म-विद्याप्रसाराय भारतस्य चतसृष्वपि दिशासु चतुरो मठान् प्रातिष्ठिपत्। तदन्यतमं मठं तुङ्गापगातरङ्गशीकरशीतलिते विभण्डकमहर्षेः आश्रमे शृङ्गगिरौ श्रीशारदापीठमिति नाम्ना प्रातिष्ठिपत्। तत्परंपरागतान् विद्या-निधीन् तपोनिधीन् अस्मदाचार्यपादान् सन्दृश्य तदनुग्रहमवाप्तुकामा भवन्तः सततप्रवर्तमानवृष्टितया दुष्करप्रयाणमपि शृङ्गगिरिं वर्षर्तौ षड्भ्यो वत्सरेभ्यः प्राक् गुर्वनुग्रहेण निष्प्रत्यूहमवाप्य, श्रीचरणानां दर्शनं विधाय, तदाशिषोवाप्य आत्मानं धन्यतममतानिषुः॥

भगवति भक्तेषु च श्रद्धावन्तो भवन्तः मद्रपुर्यां चातुर्मास्यव्रत-संकल्पमास्थितवतामस्माकं आश्रमपदं समागता इत्येतदतीव हर्षस्थान-मस्माकम्। भवतां गुणान् गुरुदैवतयोः भक्त्यतिशयं च आकलयन्तो वयं भवतः 'राष्ट्र-रत्नम्' इति बिरुदेन परिभूषयामः॥

श्रीशारदाशशिकलावतंसयोः अनुकम्पया अनुकम्पया राष्ट्रं चिरतरं अनायासं परिपालयन्तः समभिवर्धन्तामित्याशास्महे॥

त्यागरायनगरम्, मद्रास्। श्रीः

பாரததேசத்தின் ராஷ்டிரபதி ஸ்ரீ ராஜேந்திர பிரஸாத் விஷயமாக செய்யப்பட்ட சுப ஆசீர்வாதங்கள் நன்கு விளங்கட்டும். நீங்கள் பத்து வருஷங்களாக பாரதநாட்டில் ராஷ்டிரபதி ஸ்தானத்தில் இருந்துகொண்டு உங்கள் செய்கைகளால் எல்லா பிரஜைகளையும் ஸந்தோஷப்படுத்தியுள்ளீர்கள். இப்பொழுதும் ஸந்தோஷப்படுத்தி வருகிறீர்கள். நீங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தும்



ஸமயம் தேசம் சிறப்பான மேன்மையை யடைந்தது. அது இனியும் வருங்காலத்திலும் நன்கு விளங்கும்.

தர்மஸூத்ரமியற்றிய கௌதம மஹரிஷி மனுஷ்யன் சிரேயஸ்ஸை அடைவதற்கு ஸாதனமாக எட்டு குணங்களைக் கூறியுள்ளார். அவையாவன:— எல்லாப்பிராணிகளிடத்திலும் இரக்கம், பொறுமை, பொறாமையில்லாமை, உள்ளும் புறமும் தூய்மை, தன்னைத் துன்புறுத்தாமை, சிறப்புற நடத்தல், லோபித்தனமில்லாமை, பிறர் பொருளில் ஆசை கொள்ளாமை, என்பவை. ஆத்மகுணங்கள் என்று கூறப்படும் இந்த எட்டும் ஒருங்கே நிறைந்துள்ள நீங்கள் தேசம் முழுவதற்கும் வழிகாட்டியாக விளங்குகிறீர்கள்.

பகவான் பூவுலகில் ஸ்ரீ சங்கராசார்ய உருவத்துடன் அவதரித்து ஸனாதன மதத்தை நிலைநிறுத்தி வேதாந்த வித்யையை எங்கும் பரவச்செய்ய பாரதநாட்டின் நான்கு திசைகளிலும் நான்கு மடங்களை ஸ்தாபித்தார். அவைகளிலொன்றாக துங்காநதியின் அலைகளுடைய நீர்த்திவலைகளால் குளிர்ச்சியுள்ள விபண்டக மஹரிஷியின் ஆச்ரமமான சிருங்ககிரியில் 'ஸ்ரீ சாரதா பீடம்' என்ற பெயருடன் ஓர் மடத்தை நிறுவினார். இந்த பீடத்தின் பரம்பரையில் வந்துள்ள, வித்யை, தபஸ் இரண்டுக்கும் இருப்பிடமான எங்கள் ஆசார்யர்களின் அநுக்ரஹத்தை நேரில் பெற எண்ணம்கொண்டு நீங்கள் ஆறு வருஷங்களுக்கு முன் வர்ஷா காலத்தில், எப்பொழுதும் விடாமல் மழை பெய்வதால் பிரயாணம் செய்ய கஷ்டமாயிருந்தபோதிலும் ஒருவித இடையூறுமன்னியில் சிருங்ககிரிக்கு வந்து ஸ்ரீ சரணரை தர்சனம் செய்து அவர்களின் அநுக்ரஹத்தைப் பெற்று மிக்க தன்யர்களானீர்கள்.

பகவானிடத்திலும் பக்தர்களிடத்திலும் பக்திகொண்ட நீங்கள் சென்னையில் சாதுர்மாஸ்ய விரத ஸங்கல்பம் செய்து தங்கியிருக்கும் எங்கள் ஆச்ரமத்திற்கு வந்தது எங்களுக்கு மிக்க ஸந்தோஷத்தைத் தருகிறது. உங்கள் நற்குணங்களையும் ஆசார்யரிடத்திலும், தைவத்தினிடமும் உங்களுக்கு இருக்கும் பக்திப் பெருக்கையும் கண்டு 'ராஷ்ட்ர ரத்னம்' என்ற விருதை உங்களுக்குத் தந்துள்ளோம். ஸ்ரீ சாரதா சந்திரமௌளீசுவரர்களுடைய மாறாத கிருபையால் நீங்கள் வெகுகாலம் பாரதநாட்டை சிரமமில்லாமல் பரிபாலனம் செய்துகொண்டு மேன்மேலும் மிகுந்த மேன்மையை அடையும்படி ஆசீர்வதிக்கிறோம்.

## அமெரிக்கநாட்டுத் தூதர் ஸம்பாஷணை

அன்றயதினம் மாலை அமெரிக்கநாட்டுத் தூதர் ஸ்ரீ எல்ஸ்வொர்த் பங்கர் (Ellsworth Bunker) அவர்கள் ஸ்ரீ மஹாஸ்வாமிகளை தரிசித்து வந்தனம்செய்து பல விஷயங்களைப்பற்றி ஸம்பாஷித்தார்கள் முதலில் ஸம்ஸ்கிருதக் கல்வி வளர்ச்சிக்காக ஸ்ரீ மடத்தில் செய்து வரும் முயற்சிகளைப் பற்றிக் கேட்டுத் தெரிந்துகொண்டார்கள். பிறகு பேச்சு தற்கால உலகநிலையையும், உலகில் சாந்தி ஏற்பட வழியாது என்பதையும்பற்றித் திரும்பியது. "போரிடுவதால் நிலையான சாந்தியையும் ஸமாதானத்தையும் ஒருக்காலும் அடையமுடியாது" என்று ஸ்ரீ ஸ்வாமிகள் திருவாய் மலர்ந்தருளினார்கள். "சமயத்திற்கும், விஞ்ஞானத்திற்கும் இடையே போராட்டமோ, முரணோ சிறிதுமில்லை. சமயத்தின் அடிப்படைத் தத்வத்தை மனதிலிருத்திக்கொண்டு விஞ்ஞானத்தின் அஸுரஸாதனைகளைப் பயன்படுத்தினால் தீங்கே நேரிடாது. அளவற்ற நன்மைதான் உண்டாகும்" என்று ஸ்ரீ ஸ்வாமிகள் தீர்மானமாகச் சொன்னார்கள். "உலகில் நிரந்தரமான சாந்தியும் அமைதியும் ஏற்பட வழி என்ன? அருளவேண்டும்" என்று ஸ்ரீ பங்கர் விண்ணப்பித்துக்கொண்டதற்கு ஸ்ரீ ஸ்வாமிகள் அருளியதாவது:—

"போரிடுவதால் நிலையான அமைதி ஏற்படாது. தீய செயலால் என்றும் நன்மை விளையாது. ஒவ்வொரு தீச்செயலும் தன் பயனான தீய பலனைக் கொடுத்தே தீரும். போர் இத்தகைய ஒரு தீச்செயல்தான். இந்த உலகில் பிறப்பதுதான் வாழ்க்கையின் ஆரம்பமென்றும், சாவு அதன் முடிவென்றும் நினைப்பது தவறு. தான் செய்த நன்மை தீமைகளின் பலனை இப்பிறவியிலோ அல்லது இனி வரும் பிறவிகளிலோ யாவரும் அநுபவித்தேதான் தீர வேண்டும். இந்த உண்மையைப் பொது மக்களின் தலைவர்கள் என்று உணருகிறார்களோ, அன்றே அவர்கள் அழிவுக்குக் காரணமான போரில் இறங்குவதைத் தவிர்த்து விடுவார்கள். போர் என்ற தீச்செயலின் பலன் தீங்காகத்தான் இருக்கும் என்பது அவர்களுக்கு விளங்கிவிடும். இதையும் 'மறு பிறவி' என்ற விலக்கமுடியாத சட்டத்தின் உண்மையையும் என்று மக்கள் நன்கு அறிகிறார்களோ, அன்றுதான் நிலையான அமைதிக்கு வித்திட்டதாகும். இது தான் உலகில் அமைதி ஏற்பட வழி" என்று தெளிவாக எடுத்துரைத்தார்கள்.



தூதர் ஸ்ரீபங்கர் நம் நாட்டில் பல மஹான்களைத் தரிசித்திருந்தபோதிலும் சிருங்கேரி ஸ்ரீ மஹா ஸ்வாமிகளை தரிசித்தது அவருக்கு மிக்க ஆனந்தத்தைக் கொடுத்ததாகத் தெரிகிறது. பண்டைய மதாசார்யர்களின் உபதேசங்களைப் பின்பற்றிச் சமயங்களின் அடிப்படை தத்துவங்களை மக்கள் அறிவார்களேயானால், விஞ்ஞானத்திற்கும் சமயத்திற்குமுள்ள போராட்டம் ஒழிந்து உலகில் நிலையான அமைதி நிலவும் என்ற கருத்து அவருக்கு வலுத்ததாகவும் தெரிகிறது. தங்கள் நாடான அமெரிக்காவிலும் இப்போது சமய விழிப்பு ஏற்பட்டுவருவதால் அமெரிக்கர்களும் இந்திய மக்களும் ஆன்மீகத் துறையில் நெருக்கம் பெற வழி ஏற்படும் என்றும் அவர் நம்புகிறார். ஸ்ரீபங்கர், தயைகூர்ந்து தமக்கு பேட்டியளித்ததற்காக ஸ்ரீ ஸ்வாமிகளிடம் தன் நன்றியைத் தெரிவித்துக்கொண்டார். ஸ்ரீபங்கரவர்களுடன் அவருக்கு அடுத்தபடியாக சென்னையில் தூதுவர் பதவியிலிருக்கும் (Consul General) டாக்டர் தாமஸ் W. ஸிமன்ஸ் என்பவரும் இருந்தார். முடிவில் ஆசிரியர் ஸ்ரீ K. R வெங்கடராம் அய்யர் எழுதிய "The Throne of Transcendental Wisdom" என்ற நூலை ஸ்ரீ ஸ்வாமிகள் ஸ்ரீபங்கருக்குப் பரிசாக அளித்தார்கள்.

பாரதநாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல பெரியார்கள் வந்து ஸ்ரீ ஸ்வாமிகள் அவர்களை தர்சித்து அவரது அருளைப் பெற்றுச் செல்கின்றனர். முக்யமாக உத்தரப்பிரதேச கவர்னராயிருந்த ஸ்ரீ K. M. முன்ஷி அவர்கள், சென்னை நிதி மந்திரி ஸ்ரீ C. சுப்பிரமணியம் அவர்கள், ஸ்ரீமதி சுப்பிரமணியம் அவர்கள், திருவிதாங்கூர் இளைய ராஜா அவர்கள், ரங்கஸமுத்திரம் ஸ்ரீமத் சிவஸச்சிதானந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகள் அவர்கள், ஸ்ரீ P. T. ராஜன் அவர்கள் முதலானோர் ஸ்ரீ ஸ்வாமிகளை தர்சித்தனர். ஸ்ரீ P. T. ராஜனிடம் ஸ்ரீ ஸ்வாமிகள் மதுரை ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசுவர தேவாலயத்தின் திருப்பணியைப்பற்றி அவர் எடுத்துவரும் பெருமுயற்சியை சிலாகித்து, இந்த தர்ம கைங்கர்யத்தில் பக்தர்கள் எல்லோரும் ஈடுபடவேண்டும் என்று தங்கள் ஆசியையும் ஆக்ஞையையும் கொண்ட ஸ்ரீமுகத்தை வழங்கினார்கள்.

* *

### விநாயக ஸபை

ஆகஸ்டு 26உ வெள்ளிக்கிழமை விநாயக சதுர்த்தியன்று விசேஷ பூஜை நடந்த பிறகு மாலை 3½ மணிக்கு ஸ்ரீ வித்யாகணபதி ஸந்நிதியில் வித்வத்ஸபையை ஸ்ரீமஹா ஸ்வாமிகள் துவக்கி வைக்கும்போது தன் அமிருத வாக்கால்

ஸம்ஸ்கிருதத்தில் உபந்யஸித்தார்கள். 10 தினங்கள் தொடர்ந்து எல்லா சாஸ்திரங்களிலும் வாக்யார்த்தங்கள் நடந்தன. இவைகளில் பங்கு எடுத்துக்கொண்டவர்களில் முக்யமானவர்கள் மஹாமஹோபாத்யாயர்கள் N S. அனந்த கிருஷ்ண சாஸ்திரிகள் அவர்கள், K. S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளவர்கள், K. L. V. சாஸ்திரிகளவர்கள், திருவனந்தபுரம் ஸ்ரீ வெங்கடராம சாஸ்திரிகளவர்கள், கல்கத்தா மதுஸூதந நியாயாசார்யர் அவர்கள், கொட்டாரம் ஸ்ரீ ராம சுப்பா சாஸ்திரிகள் அவர்கள், மைலாப்பூர் காலேஜ் ஸ்ரீ பாலஸுப்ரமண்ய சாஸ்திரிகள் அவர்கள், பிராந்தியங்கரை பண்டிதராஜ ஸ்ரீ S. ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள் அவர்கள், பங்களூர் ஸ்ரீ B. ராம பட்டர் அவர்கள், குவாலியர் ஸ்ரீ அனந்தராம சாஸ்திரிகள் அவர்கள், காலடி ஸ்ரீ N. S. கிருஷ்ண சாஸ்திரிகள் அவர்கள், சிதம்பரம் ஸ்ரீ K. S. நரஸிம்ம சாஸ்திரிகள் அவர்கள், இந்தூர் விநாயக தில்லு சாஸ்திரிகள் அவர்கள், நெல்லூர் ஸ்ரீ லெக்ஷ்மீகாந்த சாஸ்திரிகள் அவர்கள், பெஜவாடா ஸ்ரீ லெக்ஷ்மீ நரஸிம்ம சாஸ்திரிகள் அவர்கள், கொச்சி ராமன் நம்பியார் அவர்கள், ராஜமஹேந்திரபுரம் ஸ்ரீ புலுஸு அப்பண்ணா சாஸ்திரிகள் முதலானோர்கள். சாஸ்திரப் பயிற்சிக்கு 64 வித்வான்களுக்கும், வேதப்பயிற்சிக்கு 46 வித்வான்களுக்கும் சால்வை, பதக்கம், மோதிரம், பணம் ஆகிய வகைகளில் ஸம்பாவனை வழங்கப்பட்டன. கல்கத்தா ஸ்ரீ மதுஸூதந நியாயாசார்யர் அவர்களுக்கு **தர்க்காலங்கார** என்றும், ராஜமஹேந்திரபுரம் ஸ்ரீ புலுஸு அப்பண்ணா சாஸ்திரிகள் அவர்களுக்கு **தர்சன பூஷண** என்றும் விருதுகளையும் அவைகளுக்குரிய ஸ்ரீ முகங்களையும் ஸ்ரீ மஹாஸ்வாமிகள் அளித்தார்கள். ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் ஸ்ரீ மஹாஸ்வாமிகள் அருளிய உபதேசத்துடன் ஸபை இனிது முடிந்தது.

* * *

'கர்ம மார்க்கம்' என்ற விஷயத்தைப்பற்றிய ஸ்ரீ மஹாஸ்வாமிகளின் உபதேசங்கள் ஆகஸ்டு-மீ 21உயுடன் முடிவு அடைந்தன. காருகுறிச்சி ஸ்ரீ ராமநாத சாஸ்திரிகள் ருக்மிணீ கல்யாண கட்டத்துடன் ஸ்ரீ பாகவத பிரவசனத்தை முடித்து, பிறகு 'புராணங்களிலுள்ள பல ரஸமான விஷயங்களைப்பற்றி உபந்யாஸம் செய்துவருகிறார்கள். ஸ்ரீ காசி கனபாடிகளும் ப்ரதி தினம் நித்யகர்மா, தர்மம் முதலிய விஷயங்களைப்பற்றி உபந்யஸிக்கிறார்கள். பேராசிரியர் க. பஞ்சாபகேசனவர்கள் 'கீதா ஸாரம்' என்ற விஷயத்தைப்பற்றி ஸ்ரீ மஹா ஸ்வாமிகளின் ஸந்நிதியில் உபந்யாஸம் செய்தார்கள்.



சிராவண ஸோமவாரங்களிலும், வரலக்ஷ்மீ விரதம், ஜன்மாஷ்டமி, விநாயகசதுர்த்தி, வாமன ஜயந்தி, ஸத்யநாராயண ஜயந்தி, உமாமஹேசுவர விரதம் ஆகிய புண்ய தினங்களிலும் ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் விசேஷ பூஜை செய்தார்கள்.

* * *

## ராஜா அண்ணாமலைபுரம் விஜயம்.

ஸெப்டம்பர் மீ 5உ பௌர்ணமியன்று மஹாஸ்வாமிகள் பூஜைகளை முடித்துக்கொண்டு மாலை 5 மணிக்கு விஜய யாத்திரையைத் துவக்கினார்கள். அவ்வமயம் காமாக்ஷி கல்யாண நிலயத்தில் கூடியிருந்த திரளான பக்தர்கள் விட்டுப் பிரிய மனமில்லாமல் மரியாதையுடனும், பக்தியுடனும் கண்களில் நீர்சொரிய நின்றுகொண்டிருந்த காக்ஷி மிகவும் உருக்கமாக இருந்தது. இந்த பக்திப் பெருக்கைக்கண்டு உள்ளம் நெகிழ்ந்தவர்களாய் எல்லோருக்கும் குருநாதன் ஆசி கூறினார்கள். ஸ்ரீ கபாலீசுவரர் கோவிலில் தேவஸ்தானம் நிர்வாகிகளாலும் பொது ஜனங்களாலும் ஸகல மரியாதைகளுடனும் வரவேற்கப்பட்டு, கபாலீசுவரர், கல்பகாம்பாள், மற்ற ஸந்நிதிகளிலும் தர்சனம் செய்தார்கள். பிறகு மைலாப்பூர் சித்திரகுளம் ஸமீபத்திலுள்ள ஸ்ரீ சங்கராலயத்தைப் பார்த்துவிட்டு அபிராமபுரத்தில் சாஸ்திர ரத்னம் தேதியூர் ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ சங்கர குருகுலத்துக்கு வந்தார்கள். ஸ்ரீ சாஸ்திரிகளின் குமாரர்களாலும் பேட்டையிலுள்ள பிரமுகர்களாலும் வரவேற்கப்பட்டு ஆசார்யமூர்த்தியை தரிசனம் செய்துகொண்டு சான்தோம் கடற்கரையை அடைந்து அங்கு கிரஹண ஸ்னானத்தை முடித்துக்கொண்டு ராஜா அண்ணாமலைபுரத்திலுள்ள ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவிலுக்கு வந்து சேர்ந்தார்கள். இங்கு மஹாமஹோபாத்யாய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் அவர்கள் ஸம்ஸ்கிருதத்திலும், ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் தமிழிலும் ஸ்வாகத பத்திரிகைகள் வாசித்தளித்தார்கள். ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் சாதுர்மாஸ்ய தத்வத்தையும், நவராத்திரியின் விசேஷத்தையும் விளக்கி உபதேசித்ததும், தங்கப் பல்லக்கில் "நவஸூஜா" வுக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு ஸ்ரீ வைத்தி சுப்பிரமணிய அய்யர் அவர்கள், எல்லோரும் அதிசயிக்கும்படி தன் மாளிகையையும், பூஜா மண்டபத்தையும் ஒளிப்பிழம்பாக அமைத்திருக்கிறார்கள். அங்கு அவர் செய்தபிறகு பூஜை நடந்தது. மறுநாள் தூளி பாதபூஜை

பிக்ஷாவந்தனம், பாதபூஜை முதலியவைகளைச் செய்த ஸ்ரீ வைத்தி சுப்பிரமணியய்யர் அவர்கள் ஆயிரக்கணக்கான அடியார்களுக்கு அமுது அளித்தார்கள்.

* * *

7உயன்று ஹிந்து அறநிலையங்கள் (Hindu Religious Endowments) கமிஷனின் தலைவர் டாக்டர் C. P. ராமஸ்வாமி அய்யர் அவர்களும் உறுப்பினர்களும் ஸ்ரீ மஹா ஸ்வாமிகளை "நவஸாஜா"வில் சந்தித்து தங்கள் வினுப்பத்திரம் குறித்து ஸம்பாஷித்தார்கள். ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வந்திருந்த கமிஷனின் உறுப்பினர்களுக்கு தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி ஆகிய நான்கு பாஷைகளிலும் தனித்தனியே விடையளித்தார்கள். டாக்டர் C. P. ராமஸ்வாமி அய்யர் அவர்கள் ஆங்கிலத்தில் பொதுவாக மொழி பெயர்த்தார்கள்.

8உ சகடபுரம் ஸம்ஸ்தானுதிபதிகள் ஸ்ரீ மஹா ஸ்வாமிகளை தரிசித்தார்கள்.

11உ மாலை ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்திற்கு விஜயம்செய்தார்கள். மடத்து அத்யக்ஷர் ஸ்ரீமத் கைலாஸானந்த ஸ்வாமிகளும் மற்ற ஸ்வாமிகளும் ஸ்ரீ மஹா ஸந்நிதானத்தை அன்புடனும் மிக்க மரியாதையுடனும் வரவேற்ருர்கள். 'ஆத்மநிஷ்டை' (விவேக சூடாமணியின் ஸாரம்) என்ற விஷயத்தைப் பற்றி ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் உபந்யாஸம் செய்தார்கள்.

* * *

சிருங்கேரி ஸ்ரீ மஹாஸ்வாமிகள் செப்டம்பர் 19, 20, 21 இம் மூன்று தினங்களில் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரபாரதீஸ்வாமிகளின் ஆராதனையையும், 21உ முதல் நவராத்திரி மஹோத்ஸவத்தையும் சென்னை ராஜா அண்ணுமலைபுரம் வெங்கடகிருஷ்ணய்யர் ரோடு "நவஸாஜா"வில் நடத்துவார்கள். மஹாநவமியன்று சண்டீஹோமம் நடைபெறும்.

ஸ்ரீரங்கம் ஸ்ரீ சங்கரகுருகுலத்தில் வழக்கம்போல 20உ ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகளின் ஆராதனையை ஆராதனைக் கமிட்டியார் நடத்துவார்கள்.

திருச்சி, ரெட்டைமால் தெரு 38 நெ. ஸ்ரீ R. N. குப்புஸாமி அய்யா அவர்கள் கிருஹத்தில் வழக்கம்போல் 20உ ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹா ஸ்வாமிகளின் 6வது வருஷத்திய ஆராதனு மஹோத்ஸவம் நடைபெறும். மாலையில் ஆனதாண்டவபுரம் ஸ்ரீ P. ராமதாஸ் அவர்களும், வக்கீல் ஸௌந்தரேச அய்யர் அவர்களும் உபந்யாஸம் செய்வார்கள்.

199636

## புது பாத பூஜா நாணயங்கள்.

சுத்த வெள்ளியில் 1 தோலா எடையில் பத்மத்தில் தங்கப் பொட்டிட்டு மஹாமந்த்ரங்கள் தேவநாகரியில் பொறிக்கப்பெற்ற புது பாத பூஜா நாணயங்கள் ஸ்ரீ ஜகத்குருவின் அருளால் குரு அஷ்டோத்தரம், தேவீ த்ரிசதீ, தேவீ ஸஹஸ்ரநாம பாத பூஜைகளுக்குச் செய்யப்பெற்று 13—8—60 முதல் உபயோகப்பட்டு வருகின்றன. இனி பாத பூஜைகளுக்கு உபயோகப்படுவது இந்த நாணயங்கள்தான்.

13உ 'ராஷ்டிர ரத்ன' ராஷ்டிரபதி Dr. ராஜேந்திர பிரசாத் அவர்கள் புது பாத பூஜா நாணயங்களால் முதல் பாத பூஜையை ஸ்ரீ மஹா ஸ்வாமிகளின் ஸன்னிதியில் செய்தார்கள்.

இந்த நாணயங்களை ஆசார்யசிஷ்யர்களின் உபயத்தில் குருபக்த ரத்னம் ஸ்ரீ M. R. பாலசுப்ரமணியம் செய்வித்தும், மதுரை நகை வியாபாரி ஸ்ரீ A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் பரமசிரத்தையுடன் மிகக்குறைந்த செலவில்செய்தும், எஞ்சினீர் டிராப்ட்ஸ்மென் ஸ்ரீ R. மாதவராவ் பக்தியுடன் படம் தயாரித்தும் அஸோஸியேடட் பிரஸ் ஸ்ரீ S. சூரி 'டைகளை' அழகாக தயாரித்தும் ஸ்ரீ பரமாசார்யாளின் அனுக்ரஹத்திற்குப் பாத்ரமானுர்கள். இந்தக் கைங்கர்யத்தில் எல்லா பக்தர்களும் ஈடுபடலாம்.

## இந்த இதழில்

8வது பக்கத்திலுள்ள ஸ்ரீ சந்திரமௌளீசுவர ஸ்தோத்ரம், ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகள் ஓர் சிஷ்யரை அநுக்ரஹிப்பதற்கு யாதொரு பிரயாஸையுமில்லாமல் தன் மனதில் உதித்தபடி உடனே சுலோகங்களை கவனம்செய்து, இந்த அருட்கவிதையை அவஸரமாகத் தன் அமிருத ஹஸ்தத்தால் ஓர் காகிதத்தில் எழுதியருளினுர்கள். அதை இவ்விதழில் காணலாம். அதை ப்ளாக்செய்து நமக்கு அனுப்பிய பாடலீபுரம் (பாட்னு) 'Search Light' ஆசிரியர் ஸ்ரீ M. S. M. சர்மா அவர்களுக்கும், அதன் பிரதிகள் எடுத்துதவிய 'சுதேசமித்திரன்' ஆசிரியர் ஸ்ரீ C. S. நரஸிம்மன் அவர்களுக்கும் நம்
நன்றி. ஸ்ரீ மஹா ஸந்நிதானத்தின் கையெழுத்தாகிய மணி அக்ஷரங்
களைப் பார்ப்பது பக்தர்களுக்கு ஆனந்தமூட்டும் என்பது திண்ண
ஸ்வயம்வரா பார்வதீ ஸ்தோத்திரம் பழய சுவடியிலிருந்து மலையா
லிபியில் அச்சிடப்பட்டிருப்பதை தமிழில் மொழிபெயர்த்
கொடுத்த ஸ்ரீ T. S. நாராயணஸ்வாமி அய்யர் அவர்களுக்கும்
நன்றி. ஸ்ரீ ஜகத்குருவின் ஆராதனை நிகழும் இம்மாத இ
ஸ்ரீ பாஷ்ய ஸ்வாமிகள் இயற்றிய ஸ்ரீ ஸத்குரு பாதுகாஸ்தவரா
ஸ்ரீ குருபாதசேகரர் எழுதிய ஸ்ரீ ஸத்குரு கிளிப்பாட்டும் வெ
யிருக்கின்றன. பாதுகாஸ்தவம் அடுத்த இதழில் பூர்த்தி
'பராசக்தியின் கருணை' என்ற கட்டுரையில் நவராத்ரியின்
நன்கு காட்டப்பட்டிருக்கிறது. கேனோபநிஷத்தின் ரஹ
நாடகம் மூலம் நன்கு விளக்குகிருர் ஸ்ரீ V. S. மணி அய்யர்
அபிராமி அந்தாதியின் முதல் பாட்டிலுள்ள உவமை
இவ்விதழில் நன்கு விவரித்துள்ளார் ஸ்ரீ கி. வா. ஜகந்

Regd. No. M. 7193

## ஞானச்சுடர்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
    பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
    உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
    செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
    எங்கெழுந் தருளுவ தினியே.

— மாணிக்கவாசகர் திருவாசகம்

---

**இதுவரை 2வது ஆண்டின் சந்தாத் தொகை செலுத்தாதவர்களும் புதிதாகச் சேர விருப்பமுள்ளவர்களும் கீழ்கண்ட கனவான்களில் யாரிடமாவது சந்தா தொகை ரூபாய் ஐந்தை நேரிலோ, மணியார்டர் மூலமோ செலுத்தும்படி வேண்டுகிறோம்.**

**முதல் ஆண்டு இதழ்கள் 2 முதல் 12 வரை கிடைக்கும்.**

மானேஜர் 'ஸ்ரீ சங்கர க்ருபா'
சேஷபுரம், தென்னூர், திருச்சி–1.

ஸ்ரீ K. சங்கரநாராயணய்யர் அவர்கள்
(Proprietor, Sankar Transport)
West Sandaipettai Street, Madurai.

ஸ்ரீ R. A. மஹாதேவய்யர் அவர்கள்
(Proprietor, Modern Stores) திருநெல்வேலி டவுன்.

ஸ்ரீ R. சுப்பராவ் அவர்கள்
(Agent, Binny Mills) 'லலிதா நிவாஸ்'
13/27, பொன்னுரங்கம் ரோடு, கோயமுத்தூர்.

ஸ்ரீ R. A. சட்டநாதய்யர் அவர்கள்
(Proprietor, Modern Stores)
[illegible] பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ்–5.



[illegible] t the Sri Vani Vilas Press, Srirangam.
[illegible] Published by K. R. Venkataraman, for the Akhila
[illegible] Sankara Seva Samiti.
[illegible] rumalaisamy Aiyar, B. A., B. E.